Follow us:

# தமிழன்


THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 461 பிலவ வருடம், மாசி மாதம் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (22.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 20, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் மனு மீதான முடிவு மார்ச் 29இல்



முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தாக்கல்செய்த மனுவை விசாரணைக்கு எடுப்பதா? இல்லையா? என்பது தொடர்பிலான உத்தரவை, எதிர்வரும் மார்ச் 29ஆம் திகதி தெரிவிக்கவுள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

ராஜகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்து சம்பவம் தொடர்பில் தமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையை... 02 பக்கம்


## இந்திய மீனவர்கள் 21 பேர் விடுதலை

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 21 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில், மீனவர்கள் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 03 வருட சிறைத்தண்டனை என்ற நிபந்தனையின் அடிப்படையில் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட... 02 பக்கம்

## பிரபாகரன் சரணடையவில்லை; போராடியே உயிரிழந்தார்!





### மனந்திறந்தார் சரத் பொன்சேகா

02 பக்கம்

## எரிபொருளின் விலையை அதிகரித்தால் பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும்

### தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்தன





எரிபொருளின் விலையை மீண்டும் அதிகரித்தால் பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிவரும் அல்லது எரிபொருள் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்தன தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில்,

ஐ.ஓ.சி.எண்ணெய் நிறுவனம் எரிபொருளின் விலையை அதிகரித்துள்ள காரணத்தினால் இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனமும் எரிபொருளின் விலையை அதிகரிக்க முயற்சிக்கிறது.

எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டாலும் எதிர்வரும் ஜூன் மாதம் வரை பஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் கடந்த மாதம் 3ஆம் திகதி பஸ் கட்டணம் திருத்தம் செய்யப்பட்டது. 02 பக்கம்

# இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துக!

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கடிதம்

இனவழிப்பு தொடர்பில் கடந்த வருட அறிக்கையில் குறிப்பிட்டபடி இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அதற்கு ஏதுவாக உரிய படிமுறைகளையும் தாங்களும், தாங்கள் சார்ந்த ஐ.நா. சபையும் விரைவாக ஆரம்பிக்க வேண்டுமெனவும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வமைப்பு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம் எமது உறவுகளை தேடும் தொடர் போராட்டத்தை கடந்த 20.02.2017 அன்று கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் ஆரம்பித்தோம். இன்று எமது போராட்டமானது ஐந்து வருடங்களைப் பூர்த்திசெய்து ஆறாவது ஆண்டில் தொடர்கிறது.

இறுதி யுத்தம்... 02 பக்கம்

## கச்சதீவு திருவிழாவில் இலங்கை, இந்திய பக்தர்களுக்கு அனுமதி!

### வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு இலங்கை – இந்திய பக்தர்கள் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா நிலைமையை கருத்திற்கொண்டு இரு நாட்டு பக்தர்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 11, 12ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. கொரோனா நிலைமையை கருத்திற்கொண்டு இலங்கை பக்தர்கள் 500 பேருக்கு மாத்திரமே கச்சதீவு திருவிழாவில்... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



உண்மையா அரசாங்கத்த பார்க்கேக்க பாவமா இருக்குது... ஒரு பொய்ய மறைக்க ஆயிரம் பொய்கள சொல்லி அதை மறைக்க 1500 பொய்கள சொல்லிக்கொண்டிருக்குது...

## தமிழ் மக்களிடம் நன்றிக்கடன்பட்டுள்ளேன்; அந்த நன்றியை என்றும் மறவேன்!

### முன்னாள் ஜனாதிபதி மைத்ரி தெரிவிப்பு



08 பக்கம்

## புலம்பெயர் இலங்கையர் முதலீட்டை ஊக்குவிக்க புதிய திட்டம் உருவாக்கம்

### இலங்கை முதலீட்டுச் சபை தகவல்

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் இலங்கையில் முதலீடு செய்வதை ஊக்குவிப்பதற்கான புதிய திட்டமொன்றை உருவாக்கும் நடவடிக்கையில் இலங்கை முதலீட்டுச் சபை ஈடுபட்டுள்ளது.

இலங்கையில் முதலீடுசெய்யும் புலம்பெயர்ந்தவர்களுக்கு விசேட ஊக்குவிப்புத் திட்டங்களை உள்ளடக்கியதாக புதிய திட்டம் காணப்படும்.

இது புதிய யோசனை எனத் தெரிவித்துள்ள இலங்கை முதலீட்டுச் சபை வட்டாரங்கள் ஜனாதிபதி தனது சுதந்திர தின உரையில் புலம்பெயர் இலங்கையர்களை இலங்கையின் அபிவிருத்தியில்... 02 பக்கம்

## யாழ்ப்பாணத்தில் யாசகர்கள் கைது

யாழ். நிருபர்

சாவகச்சேரியில் குழந்தைகளுடன் யாசகம் பெற்றவர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். யாழ்ப்பாணத்திலுள்ள விடுதி ஒன்றின் உரிமையாளர், தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களை கூலிக்கு அமர்த்தி யாசகம் பெறுவதாக அண்மைய நாட்களில் பல்வேறு இடங்களில் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் சாவகச்சேரி நகரில் யாசகம் பெற்றவர்கள் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு யாசகம் பெறுபவர்களின் பணம் விடுதி உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டதும் யாசகத்தில் ஈடுபட்டோருக்கு தினக் கூலி வழங்கப்படுவதாக பல தரப்பினராலும் குற்றஞ்சாட்டப்பட்டது.

அதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எல்லைக்கதிகமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கடன் வழங்காதீர்!

### அரச வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கி திடீர் உத்தரவு

இலங்கை மத்திய வங்கி, அரச வங்கிகளுக்கு முக்கிய உத்தரவொன்றை வழங்கியுள்ளது.

அதன்படி நிர்ணயிக்கப்பட்ட கடன் எல்லைக்கு அதிகமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கடன் வழங்கவேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கூறியதாவது,

கடந்த காலத்தில் வழங்கப்பட்ட கடன்களில் கணிசமான வீதம் திருப்பிச் செலுத்தப்படாமை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை... 02 பக்கம்

### உஷ்



வத்திக்கானில் இருந்து விசேட பிரதிநிதி ஒருவர் இலங்கைவந்து பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்திருப்பது அரசாங்கத்திற்கு அதிர்ச்சியை கொடுத்திருக்கிறதாம்.

வத்திக்கானில் புனித பாப்பரசரை பேராயர் மெல்கம் சந்தித்தால் அது இலங்கை ஆட்சியாளர்களுக்கு உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டிலும் தாக்கத்தை உண்டுபண்ணும் என்பதால் தான் அரசு ஆடிப்போயிருக்கிறதாம்.

## மின்வெட்டு நேரத்தின் அட்டவணையில் மாற்றம்

நாட்டில் இன்று மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள சுழற்சி முறையிலான மின்வெட்டு நேரத்தை மாற்றியமைக்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது. தற்போது இடம்பெற்றுவரும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார். அதன்படி, நேற்று பிற்பகல் 4.30 மணிமுதல் இரவு 10.30 மணி வரையிலான காலப்பகுதியில் 2 மணிநேர சுழற்சி முறையிலான மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. இதன்படி இன்றைய தினம் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவது குறித்து இன்று காலை தீர்மானிக்கப்படவுள்ளது.

## குழந்தைகளுக்கு பல்நோக்கு அழற்சி நோய் எச்சரிக்கை

காய்ச்சலிலிருந்து குணமடைந்து ஒரு வாரத்திற்குப் பின்னர் குழந்தையின் கண்கள் மற்றும் முகம் சிவந்துபோகும் அறிகுறிகளைக் காட்டினால், அது குழந்தைகளில் உள்ள பல்நோக்கு அழற்சி நோய் அறிகுறி (MIS-C) என லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளரான வைத்தியர் ஜீ.விஜேசூரிய எச்சரித்துள்ளார்.

இதுபோன்ற அறிகுறிகள் தென்பட்டால், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை உடனடியாக மருத்துவரிடம் காட்டவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

MIS-C என்பது இதயம், நுரையீரல், சிறுநீரகம், மூளை, தோல், கண்கள் மற்றும் இரைப்பை, குடல் உறுப்புகள் உட்பட பல்வேறு உடல் பாகங்கள் வீக்கமடையக்கூடிய ஒரு நிலை. 02 பக்கம்

## இலங்கையில் நடந்தது யுத்தம்; அதை புலிகள்தான் நடத்தினர்

### சீனாவுக்கான இலங்கை தூதுவர் கொஹொண



இலங்கையில் நடந்தது யுத்தம் என்பதனை புரிந்துகொள்ள வேண்டும். யுத்தம் இனிமையானதல்ல. அரசாங்கம் முதலில் யுத்தத்தை நடத்தவில்லை. புலிகளே யுத்தத்தை நடத்தினர். எனவே, இவை தொடர்பாக சரியான முறையில் ஆராயவேண்டும் என சீனாவுக்கான இலங்கை தூதுவர் கலாநிதி பாலித கொஹொண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

02 பக்கம்

# அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தலைமையில் உயர்மட்டக்குழு ஜெனீவாவுக்கு பயணம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான குழு எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜெனீவா பயணமாகிறது.

மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கை 3ஆம் திகதி வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன் அதற்கான பதிலளிப்பை அன்றைய தினமே முன்வைக்க தீர்மானித்துள்ளதாக அமைச்சர் பீரிஸ் உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில், எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள ஜெனீவா கூட்டத்தொடரின் உண்மை நிலையையும் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதகமான நிலைமை குறித்தும் அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களுக்கமைய, அவற்றை எதிர்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட இலங்கை இராஜதந்திர குழுவுக்கு ஜனாதிபதி ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

## எல்லைக்கதிகமாக...

என்பவற்றை கருத்தில் கொண்டு இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அரச வங்கிகளின் ஸ்திரத்தன்மையை பாதுகாக்கும் நடவடிக்கையாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் நஷ்டமடையும் ஏனைய அரச நிறுவனங்கள் தொடர்பில் குறித்த நடைமுறையை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

## கச்சதீவு திருவிழாவில்...

கலந்துகொள்வதற்கான அனுமதியை வழங்க யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், தமிழக பக்தர்களுக்கும் திருவிழாவில் பங்கேற்க சந்தர்ப்பமளிக்குமாறு தமிழக அரசாங்கம் சார்பில் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்த நிலையிலேயே இரு நாட்டு பக்தர்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இம்முறை திருவிழாவில் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## குழந்தைகளுக்கு பல்நோக்கு...

இது போன்ற அறிகுறிகளைக் காட்டும் குழந்தைகளுக்கு உடனடியாக சிகிச்சையளிக்கப்படாவிட்டால், நிலைமை மோசமாகி, குழந்தையின் இதயம் மோசமாகப் பாதிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

கொவிட், டெங்கு மற்றும் பிற வைரஸ் காய்ச்சல்கள் போன்ற நோய்கள் இந்த நாட்களில் பரவுகின்றன. மேலும் ஒரு குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்டால், உடனடியாக தகுதியான மருத்துவரிடம் பரிந்துரைகளை பெற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய மீனவர்கள்...

உதவிப் பணிப்பாளர் ஜெயராஜசிங்கம் சுதாகரன் குறிப்பிட்டார். மீனவர்களிடம் கைப்பற்றப்பட்ட 02 படகுகளையும் அரசுடைமையாக்கி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, மீனவர்களிடம் கைப்பற்றப்பட்ட கையடக்கத்தொலைபேசி உள்ளிட்ட பிரத்தியேக உடைமைகளை மீள வழங்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

விடுதலை செய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களையும் மிரிஹான இடைத்தங்கல் முகாமுக்கு அனுப்பி, குடியகல்வு குடிவரவு திணைக்களத்தினூடாக இந்தியாவுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை நீதவான் நேற்று (21) உத்தரவிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பான அறிக்கையை எதிர்வரும் ஏப்ரல் 04 ஆம் திகதி நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு, யாழ். சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்தபோது, கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி 21 இந்திய மீனவர்களும் வடக்கு மீனவர்களால் சுற்றிவளைக்கப்பட்டனர்.

இதன்போது கடற்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டு, மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## புலம்பெயர் இலங்கையர்...

இணைந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்ததன் பின்னணியில் இந்தத் திட்டம் உருவாக்கப்படுகின்றது என இலங்கை முதலீட்டு சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தனது சுதந்திரதின உரையில் ஜனாதிபதி ராஜபக்ஷ வெளிநாடுகளில் வாழும் மில்லியன் கணக்கான இலங்கையர்களை தங்கள் சேமிப்புகளை இலங்கையில் முதலீடு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

சுதந்திரத்துக்கு பின்னர் இலங்கை மிகமோசமான கடன் நெருக்கடியை தற்போது எதிர்கொண்டுள்ள நிலையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

முதலீட்டு வலய அபிவிருத்திக்கான அமைச்சர் டி.வி. சானக, இலங்கை முதலீட்டு சபையை ஊக்குவிப்பு திட்டமொன்றை உருவாக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

புலம்பெயர்ந்த இலங்கையர்களுக்கு கவர்ச்சிகரமான விசேட ஊக்குவிப்பினை வழங்கும் திட்டமொன்றினை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்படுவதாக இலங்கை முதலீட்டு சபை தெரிவித்துள்ளது.

அவர்களை இதற்காக ஒன்றிணைப்பதற்காக தனியான திட்டமொன்றை உருவாக்கவேண்டும், என தெரிவித்துள்ள இலங்கை முதலீட்டுசபை, முதலீட்டு சபை அதிகாரிகளுக்கும் அமைச்சருக்கும் இடையில் இது தொடர்பாக ஆராய்வதற்கான சந்திப்பொன்று இடம்பெற்றதாகவும் வெளிநாட்டு பிரஜாவுரிமையை கொண்ட இலங்கையர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கான விசேட திட்டமொன்று குறித்து கவனம் செலுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

## பிரபாகரன் சரணடையவில்லை:...

இறுதிப் போரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சரணடையவில்லை. அவரை இராணுவத்தினர் உயிருடன் பிடிக்கவும் இல்லை, இறுதிப் போர்க் களத்தில் அவர் இறுதிவரைப் போராடியே உயிரிழந்தார் என முன்னாள் இராணுவத்தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த பின்னரே உயிரிழந்தார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்து தொடர்பில் இறுதிப் போரில் இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் கேட்டபோதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

பிரபாகரனின் சாவை வைத்து அன்று தொடக்கம் இன்று வரை சிலர் அரசியல் செய்து வருகின்றனர். இராணுவத்தினருடனான நேரடி மோதலிலேயே பிரபாகரன் உயிரிழந்தார் என்பது உண்மை. அவரின் வெற்றுடலையே இராணுவத்தினர் மீட்டனர். பிரபாகரன் ஒரு பயங்கரவாதக் குழுவின் தலைவர். எனினும், அவர் சிறந்த போர் வீரன்.

அதனால் அவர் மீது எனக்குத் தனிமரியாதை உண்டு. பிரபாகரனை உயிருடன் பிடிக்க வேண்டும் என இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் விரும்பின.

அந்த நாடுகள் இலங்கை அரசுக்கு அன்று அழுத்தமும் கொடுத்திருந்தன. எனினும், பிரபாகரன் எந்தத் தரப்பிடமும் சிக்காமல் இறுதிவரைப் போராடியே சாவடைந்தார் என குறிப்பிட்டுள்ளார்.

# தலவாக்கலை - டயகம பிரதான வீதியில் வெட்டப்பட்ட மரக்கிளை வீழ்ந்து ஒருவர் பலி

## உரிய பாதுகாப்பு நடவடிக்கையெடுக்காமல் மரம் வெட்ட அனுமதி வழங்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை - டயகம பிரதான வீதியில் லோகி தோட்ட பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையிலிருந்த 200 வருட பழைமை வாய்ந்த ஆலமரமொன்றின் கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தபோது, அதன் கிளையொன்று உடைந்து வீதியில் சென்ற மோட்டார் சைக்கிள் மீது விழுந்ததில் அதை செலுத்திச்சென்ற நபர் உயிரிழந்துள்ள நிலையில் அப்பகுதியில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இச்சம்பவம் நேற்று (21) மாலை 05 மணியளவில் இடம்பெற்றது.

தலவாக்கலை லோகி தோட்டத்தைச் சேர்ந்தவரும் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆசிரியருமான வேலுசாமி மகேஸ்வரன் (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.



குறித்த நபர் தனது வீட்டிலிருந்து தலவாக்கலை நகருக்கு சென்றுக்கொண்டிருந்தபோது தலவாக்கலை லோகி பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையில் வெட்டிக்கொண்டிருந்த ஆலமரத்தின் கிளையொன்று உடைந்து பிரதான வீதியின் நடுவில் விழுந்தமையினால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்றபோது காயமடைந்த நபரை முச்சக்கரவண்டியில் லிந்துலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்ததாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர். சடலம் தற்போது லிந்துலை வைத்தியசாலை பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தின்போது வீதியில் சென்ற முச்சக்கரவண்டியொன்றும் சேதமடைந்துள்ளது. குறித்த ஆலமரத்தின் கிளைகளை வனத் திணைக்களத்தின் அனுமதியுடன் வெட்டியபோதும் உரிய பாதுகாப்பின்றி மரத்தின் கிளைகளை வெட்டியதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்ததுடன், தலவாக்கலை – டயகம பிரதான வீதியில் லோகி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

“200 வருடம் பழைமை வாய்ந்த மரத்தினை வெட்ட யார் அனுமதி கொடுத்தது, நூற்றுக்கணக்கான வாகனங்கள் செல்லும்போது பிரதான வீதிக்கு அருகாமையில் இருக்கும் இந்த மரத்தின் கிளைகளை வெட்ட யார் அனுமதி கொடுத்தது, உரிய பாதுகாப்பு வழங்காமல் மரத்தினை வெட்டியதால் இன்று அப்பாவி உயிர் போய்விட்டதே” போன்ற பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் தலவாக்கலை – டயகம பிரதான வீதியில் போக்குவரத்து தடைப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை மற்றும் லிந்துலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## எரிபொருளின் விலையை...

எரிபொருளின் விலை நிர்ணயத்தன்மையற்றதாக காணப்படும்பட்சத்தில், பஸ் கட்டணத்தை மாத்திரம் எவ்வாறு நிலையான தன்மையில் பேணுவது என்ற சிக்கல் நிலைமை தோற்றம் பெறுகிறது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருளின் விலையை அதிகரிக்கும் பட்சத்தில் பஸ் கட்டணத்தை குறைந்தபட்சமேனும் அதிகரிக்க வேண்டும் அல்லது எரிபொருள் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்பதை அனைத்து தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினரும் ஒன்றிணைந்து போக்குவரத்து அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாட்டலி சம்பிக்க...

இரத்துச் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நேற்று மேனக விஜேசுந்தர மற்றும் எஸ்.குமாரன் ரத்னம் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேல் நீதிமன்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்கும் நோக்கில் மனுதாரர் செயற்படுவதாக தெரிவித்த பிரதி மன்றாடியார் நாயகம், மேல்நீதிமன்ற வழக்கு விசாரணைகளை இடைநிறுத்தி இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை தொடர்பில் தமது ஆட்சேபனையை முன்வைத்தார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதியரசர்கள் குழாம், மனு குறித்த தீர்மானத்தை மார்ச் 29ஆம் திகதி அறிவிக்க உத்தரவிட்டது.

## இலங்கையில் நடந்தது...

இம்முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பாக ஒரு அறிக்கை வெளியிடுவார்.

ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் இலங்கை தொடர்பாக எந்த ஒரு அழுத்தத்தையும் பிரயோகிக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஆகியோருக்கு இலங்கை மீது அவ்வாறு அழுத்தங்களை பிரயோகிக்க அல்லது விடயங்களைத் திணிக்க எவ்விதமான அதிகாரமுமில்லை. இதனை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இம்முறையும் சீனா இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழங்கும். சீனா எப்போதுமே முழுமையான ஆதரவை இலங்கைக்கு சர்வதேச மேடைகளில் வழங்கும். அந்தவகையில், இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சீனா எமக்கு ஆதரவு வழங்கும். அதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கின்றோம்.

இதேவேளை, இலங்கையில் காணாமல் போனோர் விவகாரம் உள்ளிட்ட விடயங்களை சர்வதேசம் ஏன் பிடித்துக்கொண்டு இவ்வாறு இழுத்துக் கொண்டிருக்கின்றது என்று தெரியவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பச்லெட் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிலி நாட்டில் எத்தனை ஆயிரம் பேர் காணாமல் போனார்கள். அவர்கள் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டார்களா? அவர்களுக்கு என்ன நடந்தது என்பது கண்டுபிடிக்கப்பட்டதா? அதேபோன்று ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா, சிரியா, யேமன் போன்ற நாடுகளில் எத்தனை பேர் காணாமல் போயுள்ளனர்? அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை சர்வதேச சமூகம் கண்டுபிடித்ததா? ஏன் இலங்கை விடயத்தில் இவ்வாறு விரட்டிக் கொண்டிருக்கின்றனர் என்பது புரியவில்லை.

உலகில் எந்தவொரு நாடுமே பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டு காணாமல் போனவர்களுக்கு நஷ்டஈடு வழங்கியதில்லை. ஆனால், இலங்கை இந்த தரப்பினருக்கு இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இலங்கையில் காணாமல்போனோர் விவகாரம் ஒரு அரசியல் கருவியாக பயன்படுத்தப்பட்டு கொண்டிருக்கின்றது.

அரசாங்கத்துக்கு சர்வதேச மட்டத்தில் சிரமத்தை ஏற்படுத்துவதற்காக காணாமல்போனோர் விவகாரம் பயன்படுத்தப்பட்டு கொண்டிருப்பதை காண முடிகின்றது. காணாமல்போனோர் விவகாரம் தொடர்பில் யதார்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

யுத்தம் முடிவடைந்து 13 வருடங்கள் கடந்துவிட்டன. இந்நிலையில் அந்தக் காலப்பகுதியில் காணாமல்போனோருக்கு என்ன நடந்தது என்பதை கண்டுபிடிக்க முடியாது.

அவ்வாறு கண்டுபிடிப்பதற்கு உலகிலேயே ஒரு பொறிமுறை இல்லை. அதற்கான ஒரு மாதிரி இல்லை என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். 20ஆயிரம், 19ஆயிரம் பேர் காணாமல் போனதற்கான எழுத்துமூல விடயங்கள் இருப்பதாக கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த விடயத்தில் யுத்தத்தின்போது பலர் தாக்குதலுக்குட்பட்டு இறந்து போயிருக்கலாம். அதேபோல் ஒரு சிலர் காடுகளில் தாக்குதலுக்கு உட்பட்டு இறந்து போயிருக்கலாம். அவர்களை கண்டுபிடிக்கவே முடியாது.

அதேபோன்று ஒரு சிலர் இந்தியா ஊடாக மேலைத்தேய நாடுகளுககுச் சென்று வேறு பெயர்களைக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கலாம்.

அவர்களின் பெயர்களும் இந்த காணாமல் போனோர் பட்டியலில் இருக்கலாம். நடந்தது யுத்தம் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும். யுத்தம் இனிமையானதல்ல. அரசாங்கம் முதலில் யுத்தத்தை நடத்தவில்லை. புலிகளே யுத்தத்தை நடத்தினர். எனவே இவை தொடர்பாக சரியான முறையில் ஆராய வேண்டும். வெறுமனே காணாமல்போனோர் என்று போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையை சர்வதேச...

முடிவடைந்ததை தொடர்ந்து எமது உறவுகள் கையளிக்கப்பட்டும், சரணடைந்தும், விசாரணைக்கென கூட்டிச்செல்லப்பட்டும் 20ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். இது தவிர, இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் வெள்ளை வானில் கடத்தப்பட்டும், துணை இராணுவக்குழுக்களால் கடத்தப்பட்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். இவர்கள் அனைவரையும் தேடும் எமது போராட்டமானது நூற்றுக்கு மேற்பட்ட பெற்றோர், தம் உறவுகளை பிரிந்த துயரால் நோய்வாய்ப்பட்டு இறந்த பின்பும் தொடர்கிறது. இது எமக்கான நீதி கிடைக்கும்வரை அல்லது எம்மில் ஒருவராவது உயிர் வாழும் வரை தொடரும். இந்த இறப்புகளின் காரணமாக அவர்களின் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கான சாட்சிகள், ஆதாரங்கள் அழிக்கப்பட்டு விட்டன. இத்துன்பியல் தொடர்ந்தால் இறுதியில் சாட்சிகள் இன்மையால் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை மூடுவது சிங்கள அரசுக்கு சுலபமாகிவிடும்.

இலங்கை அரசானது உள்நாட்டில் தீர்வை வழங்குவதாக சர்வதேசத்திடம் கூறிவருகிறது. இலங்கை அரசிடம் இருந்து நீதி ஒருபோதும் எமக்கு கிடைக்காது. தமது கையால் தமது உறவுகளை கையளித்த உறவுகள் சிலர் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு, வருடக்கணக்கில் விசாரணைக்கெடுக்காமல் இழுத்தடித்து, இறுதியில் சரணடைந்தவர்கள் ஏற்றிச் செல்லப்பட்ட பஸ் இலக்கத்தை முறைப்பாட்டாளர் தெரிவிக்காததால் சில வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

யுத்த சூழலிலிருந்து உயிர்ப் பயத்துடன் ஓடிவரும் ஒருவர் தனது பிள்ளை, கணவன் ஆகியோரைப் பிரியும் நேரத்தில் அழுது புலம்புவார்களா? அல்லது பேப்பர் பேனா தேடித் திரிவார்களா? அதற்குரிய மனநிலையிலா அவர்கள் இருந்திருப்பார்கள்? இலங்கையில் நீதித்துறை எவ்வளவு பாரபட்சமாக சிந்திக்கிறது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இலங்கையில் தமிழர்களுக்கு சரியான நீதி கிடைப்பதில்லை. எனினும், நீதியாக செயற்பட்டும் ஓரிருவரால் வழங்கப்பட்ட தீர்ப்புகள்கூட சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதியின் அதிகாரத்தால் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. மிருசுவிலில் சிறுவர் உள்ளிட்ட 08 பேரை கொலை செய்த வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்னாயக்க என்பவருக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அவர் இராணுவத்தில் பதவி உயர்வுடன் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளார். எட்டு தமிழர்களை கொலை செய்ததற்கு வெகுமதியாகவே இவரது பதவி உயர்வு கருதப்பட்டு ஏனையோரும் இது போன்ற படுகொலைகளைச் செய்யும் வண்ணம் ஊக்குவிக்கப்படுவார்கள்.

அதுபோலவே, திருகோணமலை கடற்படை முகாமில் 11 பேர் கடத்திச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கிலும், திருகோணமலை 05 மாணவர்கள் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட வழக்கிலும், முறையே சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை மீளப்பெறப்பட்டும், சாட்சியங்கள் போதவில்லை என்றும் வழக்குகள் மீளப்பெறப்பட்டுள்ளன. அன்று படையினரை வழிநடத்திய இன்றைய ஜனாதிபதிக்கு எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என தெரியாது என்று கைவிரிக்க முடியாது. இன்று கூட எமது உறவுகள் கையளிக்கப்பட்ட வட்டுவாகல், முள்ளிவாய்க்கால், மாத்தளன், ஓமந்தை ஆகிய இராணுவ காவலரண்களின் பொறுப்பாக இருந்த படை அதிகாரிகளை உளச் சுத்தியுடன் விசாரிப்பதன் மூலம் எமது உறவுகள் பற்றி அறிந்து கொள்ளலாம்.

அப்படை அதிகாரிகள் தற்போது வெளிநாட்டின் தூதுவராகவோ அல்லது பதவி உயர்வு பெற்று தளபதியாகவோ தான் இருப்பார்கள். ஆனால் இலங்கை அரசாங்கம் அதைச் செய்யாது. காரணம் அவர்களுக்கு உண்மை வெளிவரக்கூடாது. ஏனென்றால் இலங்கையில் இறுதியுத்தத்தின்பின் பதவியேற்ற அத்தனை ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் ஒரு வாக்குறுதியை சிங்கள மக்களுக்கு கூறுகிறார்கள். அது, ‘யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த படையினரை காட்டிக்கொடுக்க மாட்டேன். அவர்களை பாதுகாப்பேன்’ என்பதே அதை மிக துணிச்சலாக செய்தும் வருகிறார்கள். உதாரணம் மிருசுவில் படுகொலையாளி காப்பாற்றப்பட்டமை, வசந்த கரன்னகொட பாதுகாக்கப்பட்டமை, இதுபோல பல உண்டு. ஆனால், தமிழ் அரசியல்கைதிகள் நீண்ட காலங்களாக விசாரணையின்றி சிறையிலே வாடுகிறார்கள். அவர்கள் செய்த குற்றமாக விடுதலை போராட்டத்துக்கு ஆதரவாக உணவு வழங்கியதும் மற்றும் போராளிகளுடன் தொடர்பில் இருந்தமை போன்றவற்றை காரணம்காட்டி பலவருடங்களாக தடுத்து வைத்துள்ளார்கள்.

இந்த நாட்டில் தமிழர்களுக்கு நீதி வழங்குவதில் பாரபட்சம் காணப்படுகிறது. தமிழ் மக்களின் மதச் சுதந்திரம், தனி மனித சுதந்திரம் கேள்வியாக்கப்பட்டுள்ளது. இரவோடு இரவாக எமது மத அடையாளங்கள் அழிக்கப்பட்டு விகாரைகள் உருவாகின்றன. எமது பூர்வீக நிலங்களை கையகப்படுத்துவதற்காகவே புது சட்டங்கள், திட்டங்கள் அமுலுக்கு வருகின்றன. மக்களுக்கு அனுபவங்கள் மூலமாக ஏற்படும் உயிர்ப்பயம் இவை எவற்றையும் பொருட்படுத்தாது மௌனிக்கச்செய்துள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எமது மன நிலையை பாதிக்கும் வகையில் எம்மீது இலங்கை அரசின் புலனாய்வாளர்களின் கண்காணிப்பு தொடர்கிறது. பின்தொடர்தல், தொலைபேசி அழைப்பு, வீடியோ எடுத்தல் என்பன எமது உறவுகளை அச்சமூட்டும் வகையில் உள்ளன. போராட்டத்தில் கலந்து கொள்பவர்கள் மிரட்டப்படுகிறார்கள். இப் போராட்டத்தில் முன்னிலை வகிப்பவரின் குடும்ப உறுப்பினர்கள் தேவையற்ற விசாரணைகளுக்கு உள்ளாகும் துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகிறது.

எமது நீதிக்கான இந்த போராட்டத்தை தொடராமல் செய்வதற்கான குழப்பங்கள் உருவாக்கப்பட்டும் எம்மில் பலரை வயதாகிய தாய்மார், தனியாக குடும்பங்களை தலைமை ஏற்று நடத்தும் பெண்கள் என்றுகூட பாராமல், பயங்கரவாத தடுப்பு பிரிவினர் அழைத்து விசாரணை என்ற பெயரில் மன உளைச்சலை தருவதும் நீதிக்கான எமது பயணத்துக்கு பெரிய பின்னடைவை ஏற்படுத்துகிறது.

மதிப்பிற்குரிய மனித உரிமைகள் ஆணையாளர் அவர்களே,

எமது உறவுகளுக்கு நீதி கிடைப்பதற்காகவே நாம் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் போராடிக்கொண்டிருக்கின்றோம். எம்மில் 75 வீதமானவர்கள் வயது முதிர்ந்தவர்களே. அவர்கள் இந்த வயோதிப காலத்திலும் நீதியை தேடி வீதியிலே போராடுகிறார்கள். நாம் மன அழுத்தத்தினாலும் நோய்வாய்ப்பட்டதாலும் 112 பெற்றோர்களை இழந்து விட்டோம். மிஞ்சியிருப்பவர்கள் இறக்கும்முன்பு நீதி கிடைக்க வேண்டும்.

தங்களின் கடந்த வருட அறிக்கையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையின் இனவழிப்பு தொடர்பில் பாரப்படுத்துவதற்கு பரிந்துரை செய்திருந்தீர்கள். அதை விரைவில் செய்வதற்கு ஏதுவாக உரியபடிமுறைகளையும் தாங்களும் தாங்கள் சார்ந்த ஐ.நா. சபையும் விரைவாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்- என்றுள்ளது.

# இன்றைய ராசி பலன்

**22.02.2022 செவ்வாய்க்கிழமை மாசி 10**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: சுவாதி**
மாலை 3.36 வரை

**விசாகம்**
மாலை 3.36 - 23.02.2022 பிற்பகல் 2.41 வரை

**யோகம்: விருத்தி**
காலை 10.52 வரை

**துருவம்**
காலை10.52 - 23.02.2022 காலை 8.26 வரை

**திதி: அமர பட்ச ஷஷ்டி**
மாலை 6.34 வரை

**அமர பட்ச ஸப்தமி**
மாலை 6.34 - 23.02.2022 மாலை 4.56 வரை

**முற்கரணம்: கரஜம்**
காலை 7.17 வரை

**பிற்கரணம்: வணிஜம்**
காலை7.17 - மாலை 6.34

**சுப நேரங்கள்**
காலை 10.56 - பி.ப 12.23

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
மாலை 3.23 - 4.53

**குளிகை காலம்**
பிற்பகல் 12.24 - 1.54

**எமகண்ட காலம்**
காலை 9.25 - 10.55

**துர் முகூர்த்தம்**
காலை 8.49 - 9.37
இரவு 11.12 - 12.00

**லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை ப்ரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி**

**மேஷம்:** வழக்கு விடயங்களில் சாதகமான நிலை உண்டாகலாம். சில விருப்பங்கள் நிறைவேறலாம். செலவுகள் கட்டுப்பாட்டில் இருக்கலாம். நிதி விடயங்களில் நல்ல நிலை ஏற்படலாம்.

**ரிஷபம்:** ஆன்மீக தலங்களுக்கு செல்லும் நிலை ஏற்படலாம். தொழிலில் தந்தையின் ஆதரவு நன்மை தரும். காலில் சிறிய வலி உண்டாகலாம். கடந்த கால அனுபவங்கள் பயன் தரும். புதிய கற்கைகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** பணியில் சக ஊழியர்களுடன் வாக்குவாதம் தவிர்ப்பது நல்லது. புதிய நிதி முதலீட்டில் சுய முடிவு நன்மை தரலாம். திருமணத்திற்கு சாதகமான நிலை தோன்றலாம். வணிகத்தில் புதிய பங்குதாரர் கிடைக்கலாம்.

**கடகம்:** சில தவறான தகவலால் தொழிலில் தடை உண்டாகலாம். பிரச்சினைகளை உறவுகளுடன் பகிர்வது மன ஆறுதலை தரலாம். வாழ்க்கைத்துணையின் ஆதரவு மேம்படும். உடல்நலம் சீராகும். முக்கிய பணிகளில் நிதானம் தேவைப்படலாம்.

**சிம்மம்:** சில நிறுவனங்களில் பணியில் இருப்பவர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கலாம். பிறருடன் இணக்கப்பாடான இயல்பு நன்மை தரலாம். காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம். வாழ்க்கைத்துணையின் ஆலோசனையால் நன்மை கிடைக்கலாம்.

**கன்னி:** குடும்பத்திலுள்ள ஒருவரின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். தம்பதியரிடையே வாக்குவாதம் தவிர்ப்பது நன்மை. வரி சம்பந்தப்பட்ட விடயங்களில் கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் நன்மை.

**துலாம்:** வாகனம் வாங்கும் திட்டம் உருவாகலாம். வணிக இலாபங்கள் மேம்படும். பிள்ளைகளின் முன்னேற்றங்களில் மனமகிழ்வு கிடைக்கலாம். பணிகளில் துறை சார்ந்த செயல்கள் சிறப்புறும். மேலதிக வருவாயில் வீட்டு வளங்களுக்கான செலவு ஏற்படலாம்.

**விருச்சிகம்:** எதிர்மறை நடவடிக்கை உள்ளோரிடமிருந்து விலகி இருப்பது நல்லது. படைப்பு சம்பந்தப்பட்ட வேலைகளில் நல்ல நாளாக அமையலாம். பணியிடங்களில் உள்ளக அரசியலை தவிர்ப்பதும் நன்மை. சில உபகரணங்கள் பழுதாகும் நிலை தோன்றலாம். இறைதியானம் நன்மை.

**தனுசு:** காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம். உயர்கல்வி பெறும் மாணவர்களுக்கு நல்ல நிலை உருவாகலாம். கொடுத்த கடன்கள் திரும்ப கிடைக்கப் பெறலாம். இளம் வயதினருக்கு பணிக்கான சந்தர்ப்பங்கள் உருவாகலாம். சில பிரச்சினைகள் நீங்க துவங்கலாம்.

**மகரம்:** வரவேண்டிய பண வரவுகள் கிடைக்கலாம். வணிக பயணத்தால் நன்மை உண்டாகலாம். இல்லத்தில் கருத்து வேறுபாடுகள் நீங்க பெறலாம். ஆக்கபூர்வமான நல்ல எண்ணங்கள் மேம்படும். உறவுகளால் சுப செய்திகள் கிடைக்கலாம்.

**கும்பம்:** இலட்சியங்களை நிறைவேற்றுவதில் ஆர்வம் அதிகரிக்கலாம் புதிய முதலீடுகளில் கவனம் தேவைப்படலாம். அரசியல் சம்பந்தப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். தூரப் பயணம் உண்டாகலாம்.

**மீனம்:** செலவுகளில் கவனம் தேவைப்படலாம். அன்புக்குரியவர்களுடன் வீண் வாக்குவாதம் தவிர்ப்பது நன்மை. பணிகளில் சக ஊழியர்களால் மனக்கவலை தோன்றலாம். உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். இல்லத்தில் அனைவரின் உணர்வுகளுக்கும் மதிப்பு தருவது நல்லது. இறைவணக்கம் நன்மை.

**சந்திராஷ்டமம்:**
**ரேவதி நட்சத்திரத்திற்கு**
**காலை 9.48 - 23.02.2022**
**காலை 8.56 வரை**

# நாடாளுமன்ற அமர்வுகள் இன்றிலிருந்து நான்கு நாட்களுக்கு: நாட்டில் தற்போதுள்ள நிலைமை தொடர்பில் விசேட விவாதம்



நாடாளுமன்ற அமர்வுகள் இன்றுமுதல் எதிர்வரும் 25ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன. அதற்கமைய, நாட்டில் தற்போதுள்ள நிலைமை தொடர்பில் விசேட விவாதமும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விவாதத்துக்கான யோசனை ஐக்கிய மக்கள் சக்தியினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளதாவது,

நுகர்வுப் பெருட்களின் விலை அதிகரிப்பு, எரிபொருள் பிரச்சினை உள்ளிட்ட நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் யோசனைகளை முன்வைக்க எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவும் சந்தர்ப்பத்தில் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ இதுதொடர்பில் கருத்து வெளியிடுவதற்கு கடந்த டிசம்பர் மாதத்தின் பின்னர் நாடாளுமன்றத்துக்கு வரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த விவாதத்தின் முதல் உரை அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த விவாதம் காலை 11 மணிமுதல் மாலை 5.30 மணிவரை இடம்பெறும்.

இதேவேளை, நாடாளுமன்றக் குழுக்கள் பல இவ்வாரம் கூடவுள்ளன.


அமைச்சுசார் ஆலோசனைக்குழுக்கள் உள்ளிட்ட பல நாடாளுமன்றக் குழுக்கள் இவ்வாரம் கூடவுள்ளன.

அதற்கமைய, தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங்காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழு 24ஆம் திகதி கூடவுள்ளது.

மேலும், இன்று (22) வலுசக்தி அமைச்சுசார் ஆலோசனைக்குழு, விவசாய அமைச்சுசார் ஆலோசனைக்குழு, வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக்குழு என்பன கூடவுள்ளன. நாளை (23) தொழில் அமைச்சுசார் ஆலோசனைக்குழு மற்றும் காணி அமைச்சுசார் ஆலோசனைக்குழு என்பன கூடவுள்ளன.

இதேவேளை, பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் கூட்டமும் இன்று (22) நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து: பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இரண்டாம் கட்ட நட்டஈடு



இலங்கை கடற்பரப்பில் கடந்த வருடம் மே மாதம் 20ஆம் திகதி தீ பரவலுக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இரண்டாம் கட்ட நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக , 1.75 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை எதிர்வரும் வாரம் தொடக்கம் நட்டஈடாக வழங்கப்படவுள்ளதாக அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால் வளர்ப்பு, கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மீன்பிடி நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்பட்ட வலயங்களாக பெயரிடப்பட்ட கம்பஹா, கொழும்பு, களுத்துறை மாவட்டங்களைச் சேர்ந்த 15 ஆயிரம் கடற்றொழிலாளர்களுக்கு முதலாம் கட்டத்தின் கீழ், கப்பல் பாதுகாப்பு நிறுவனத்தினால் 420 மில்லியன் ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஷானி அபேசேகர உள்ளிட்ட அதிகாரிகளின் உயிர் பாதுகாப்புக்கு அரசாங்கமே பொறுப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

ஷானி அபேசேகர மற்றும் ஏனைய அதிகாரிகள் தற்போது எதிர்நோக்கும் பாதுகாப்பு சார்ந்த விடயங்கள் குறித்தும் நாங்கள் உன்னிப்பாக அவதானம் செலுத்துகிறோம். அவர்களின் உயிர் பாதுகாப்பிற்கு அரசாங்கமே பொறுப்பு - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஈஸ்டர் தின தாக்குதல் தொடர்பான விசாரணையை திசைதிருப்ப அரசாங்கம் மேற்கொண்டுள்ள மற்றுமொரு முயற்சி குளியாப்பிட்டி நீதவான் நீதிமன்றில் அண்மையில் தாக்கல்செய்த அறிக்கையின் மூலம் மேலெழுகிறது. இந்த அறிக்கைக்கு எதிராக குற்றப்புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவில் இருந்தும் இந்த விடயமே தெளிவாகிறது.

ஈஸ்டர் தின தாக்குதல் விசாரணைகள் தொடர்பான மனுவில் ஷானி அபேசேகர முன்வைத்துள்ள கருத்துகள் தொடர்பாக ஆராய்கின்ற போது, அரசாங்கம் வழமைபோன்று உண்மையை மறைத்து பொய்யை சமூகமயப்படுத்துவதற்கு தயாராகி வருவதாகத் தெரிகிறது. இந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான அடிப்படையானது சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்த அறிக்கையின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட பெயர் குறிப்பிடாத மனுவாகும் எனஷானி அபேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

அபேசேகர அந்த மனுவில் கூறியுள்ள கருத்துகள் மிகவும் முக்கியமானவையாகும். தன்னுடைய விசாரணை நடவடிக்கைகளுக்கு புலனாய்வு அதிகாரிகளின் உதவி முறையாக கிடைக்காமல் போனமை, புலனாய்வு அதிகாரிகள் விசாரணைகளை வேண்டுமென்றே தடுப்பது மற்றும் விசாரணையை நிறுத்தக்கோரி அழுத்தம் கொடுத்த விவரங்கள் தொடர்பாக விரிவாக கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விவகாரத்தின் உண்மை விவரங்களை அரசாங்கம் வேண்டுமென்றே மறைக்கிறது என சங்கைக்குரிய கர்தினல் கூட கூறுகிறார். இன்று அரசாங்கத்தை மட்டுமல்ல, சட்ட மா அதிபர் திணைக்களத்தையும் நம்ப முடியாது என கர்தினல் தெரிவித்துள்ளார்.

உண்மையான குற்றவாளிகள் அம்பலப்படுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை என்பது தெளிவான விடயமாகும். இவ்வாறு வெளிப்படுத்துவதால் அது அரசாங்கத்திற்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது இப்போது தெளிவாகியுள்ளது. அபேசேகரவின் மனுவின்படி, தேசிய புலனாய்வு சேவை மற்றும் இராணுவ புலனாய்வு சேவையின் சில உறுப்பினர்கள் மற்றும் சஹ்ரானின் உறுப்பினர்களுக்குமிடையிலான தொடர்பு உள்ளது என்பதும் அம்பலமாகியுள்ளது. சஹ்ரானை கைதுசெய்ய உதவாமல் சில வழக்குகளில் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் தவறாக வழிநடத்தப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.


இந்நிலையில் ஈஸ்டர் தின தாக்குதலுக்கு பிரதான சூத்திரதாரியாக செயல்பட்டவரை கண்டுபிடிக்க உரிய விசாரணை நடத்தப்பட்டு மற்றும் அது தொடர்பில் தகவல் அறிந்த ஷானி அபேசேகர உள்ளிட்ட ஏனைய அதிகாரிகளுக்கு எதிராக சட்டவிரோதமான முறையில் சட்டத்தை அமுல்படுத்த முயன்றது, ஈஸ்டர் தின தாக்குதலின் சூத்திரதாரி பற்றிய உண்மைகளை என்றென்றும் புதைக்க அரசாங்கம் முயற்சிக்கின்றதா என நாம் கேள்வி எழுப்புகின்றோம்.

அதேபோல், ஷானி அபேசேகர மற்றும் ஏனைய அதிகாரிகள் தற்போது எதிர்நோக்கும் பாதுகாப்பு சார்ந்த விடயங்கள் குறித்தும் நாங்கள் உன்னிப்பாக அவதானம் செலுத்துவதுடன் அவர்களின் உயிரின் பாதுகாப்பிற்கு அரசாங்கமே பொறுப்பு என்பதையும் வலியுறுத்துகிறோம்.

நாட்டிற்கு முக்கிய பங்காற்றுகின்ற அரச புலனாய்வு மற்றும் இராணுவ புலனாய்வு அதிகாரிகளின் கௌரவம் இவ்வாறானவர்களின் செயற்பாட்டினால் இல்லாமலாக்கப்பட்டதா என்று உரிய விசாரணை நடத்துவதும் அதன்மூலம் கௌரவத்தை பாதுகாப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

# கழிவுக் கொள்கலன்களின் கடைசித் தொகுதி மீண்டும் இங்கிலாந்துக்கு அனுப்பிவைப்பு




சர்ச்சைக்குரிய 263 கழிவுக் கொள்கலன்களின் கடைசி தொகுதி சுங்கப் பிரிவினரால் நேற்று (21) கொழும்பு துறைமுகத்திலிருந்து இங்கிலாந்துக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு துறைமுகத்திலிருந்த 45 கழிவு கொள்கலன்கள் சுங்கப் பிரிவின் மேற்பார்வையின் கீழ் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டன.

சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் விஜித ரவிப்பிரியவின் தலைமையில் குறித்த கொள்கலன்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

இதுதொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

2017, 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் 263 கழிவுகள் அடங்கிய கொள்கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. தற்போதுவரையில் கழிவுகள் அடங்கிய கொள்கலன்கள் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இறுதி 45 கொள்கலன்கள் நேற்று இரவு எவர் ஜீனியஸ் என்ற கப்பலினூடாக மீண்டும் இங்கிலாந்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எங்களால் இதுவரை அனுப்பப்பட்ட கழிவுப் பொருட்கள் அடங்கிய சகல கொள்கலன்களும் கிடைத்ததாக அந்நாட்டு சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மறு ஏற்றுமதி நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மெத்தைகளிலிருந்து எடுக்கப்பட்ட உலோகம் என தெரிவித்து இறக்குமதி செய்யப்பட்ட கழிவு கொள்கலன்கள் 2019ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சுங்கப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இலங்கைக்கு அனுப்பப்பட்ட கழிவுகளுடன் கூடிய அனைத்து கொள்கலன்களையும் இங்கிலாந்துக்கே மீண்டும் திருப்பி அனுப்புமாறு கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ஆம் திகதி, மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படப்பிடிப்பு - பிரதீப் தம்பரகே)


# பகிரங்க ஏல விற்பனை

எமது சேவை மையங்களில் அடகுவைக்கப்பட்டு ஒப்பந்தக்காலம் முடிவடைந்தும், மீட்கப்படாத தங்க நகைகள் 2022 பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி காலை 9.30 மணியிலிருந்து மாலை 2.30 மணி வரை எமது நகர காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

COMMERCIAL CREDIT

முகாமையாளர்
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி**
நகர காரியாலயம்
இல. 165, கின்சி வீதி
கொழும்பு 08


# இறுதி வடிவம் பெற்ற மலையக தமிழர்களது அரசியல் ஆவணம்







**தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ எம்.பி. தெரிவிப்பு**

"இலங்கை தேசிய தளத்தில் முழுமையான பிரஜைகளாகும், மலையகதமிழ் மக்களது அபிலாஷைகள் மற்றும் இலங்கை - இந்திய ஒப்பந்தங்கள்" என்ற தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து மலையக தமிழ் மக்களது அரசியல் ஆவணம் இறுதி வடிவம் பெற்றுள்ளது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அறிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பிக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோரது பங்குபற்றலுடன், கொழும்பு மண்டரீனா விடுதியில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மனோ எம்.பி.மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மலையக தமிழ் மக்களது அரசியல் ஆவணம் இலங்கை அரசு, இந்திய அரசு, தமிழக அரசு, பிரித்தானிய அரசு ஆகியவற்றுக்கு சமர்ப்பிக்கப்படும்.

இலங்கையின் அரசியல் கட்சிகளுக்கும், மலையக சிவில் சமூக அமைப்புகளுக்கும் மேலதிக கலந்துரையாடலுக்காக குறித்த ஆவணம் வழங்கப்படும்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 22ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# மனித உரிமைகள் பேரவை முன்னுள்ள பெரும் கடப்பாடு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் 17 பக்க அறிக்கையில் இலங்கை மீது மேலும் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இலங்கை மீதான இந்த குற்றச்சாட்டுகள், எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரில் விவாதிக்கப்படவுள்ளன. கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக கொழும்பிலுள்ள வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பப்பட்ட இந்த அறிக்கை, இலங்கையின் அதிகாரிகளால் ஆய்வுசெய்யப்பட்டது.

இதனையடுத்து வெளிநாட்டமைச்சின் அதிகாரிகள், அரசாங்கத்தின் அவதானிப்புகள் மற்றும் விளக்கங்களை ஜெனிவாவிற்கு அனுப்பியுள்ளனர்.

கடந்த ஆண்டு அறிக்கையுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டும் சர்வதேச தரத்திற்கு ஏற்ப பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் மாற்றங்களை செய்ய அரசாங்கம் தவறியதை ஐ.நா. ஆணையாளரின் அந்த அறிக்கை விரிவாக ஆராய்ந்துள்ளது.

தற்போது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்கள் குறித்து ஐக்கிய நாடுகளின் பேரவை மகிழ்ச்சியடையவில்லையென தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

***''பொலிஸாரினால் தடுத்துவைக்கப்படுபவர்கள் கொல்லப்படுவதும், சட்டவிரோத படுகொலைகளும் அதிகரித்துள்ளன. நிலைமாற்றுக்கால நீதி மற்றும் பொறுப்புக்கூறலிற்கான உரிய திட்டங்கள் இல்லை. உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் விசாரணைகளில் முன்னேற்றமில்லை.***

***அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் சுயாதீனமாக இல்லை.***

***ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் 17 பக்க அறிக்கை பயங்கரவாத தடைச்சட்டத்தில் அவசர சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான அவசியம் குறித்து அதிகளவு வலியுறுத்தியுள்ளது.***

***பொலிஸாரினால் தடுத்துவைக்கப்படுபவர்கள் கொல்லப்படுவதும், சட்டவிரோத படுகொலைகளும் அதிகரித்துள்ளதாக மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இலங்கை அரசாங்கம் நிலைமாற்றுக்கால நீதி மற்றும் பொறுப்புக்கூறலிற்கான முறையான நம்பகரமான புதிய திட்டமொன்றை உருவாக்கவில்லை .***

***கடந்த வருடம் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை இராணுவமயப்படுத்தும் செயற்பாடுகள் தீவிரமாகியுள்ளன. சுயாதீன ஊடகங்கள் உட்பட சிவில் சமூகத்தினர் செயற்படுவதற்கான தளத்தை மேலும் அதிகரிக்கவேண்டும்.***

***ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் 17 பக்க அறிக்கையில் சர்வதேச தரத்திற்கு ஏற்ப பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் மாற்றங்களை செய்ய அரசாங்கம் தவறியுள்ளமை குறித்து விசேடமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.***

***அத்துடன், நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச் சட்ட திருத்தங்கள் குறித்து அதிருப்தியையும் ஆணையாளர் முன்வைத்துள்ளார். இச்சட்டம் தொடர்பாக அரசாங்கம் பலமுறை உறுதியளித்த திருத்தங்கள் அதில் உறுதி செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை பாதிக்கலாம் எனக் கருதப்படுகிறது.***

***இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை தற்காலிகமாக திரும்பப் பெற வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றம் ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய-இலங்கைக் கூட்டு ஆணைக்குழு பெப்ரவரி 8ஆம் திகதி பிரஸ்ஸல்ஸில் கூடியபோது இதற்கான குறிப்பு வெளிப்பட்டது.***

***இதனைவிட ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் புதிய அறிக்கையில் 2019 உயிர்த்த ஞாயிறு தின படுகொலைகள் பற்றிய குறிப்புகளும் உள்ளன. கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை முயற்சியின் விளைவாக இந்த விவகாரம் உள்ளடக்கப்பட்டுள்ளது.***

***இது குறித்த விசாரணைகளில் சட்டமா அதிபர் சுதந்திரமாக செயற்பட வேண்டும் என மனித உரிமைகள் பேரவை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.***

***முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் மீதான குற்றச்சாட்டுகளை நிராகரித்து, கொழும்பு மேல் நீதிமன்றம் அவர்களை விடுத்துள்ளமை சட்டமா அதிபர் குறித்த விமர்சனங்களை தோற்றுவித்துள்ளது. அவர்கள் மீது 855 குற்றச்சாட்டுகளை சட்டமா அதிபர் பதிவுசெய்தார். ஆனால், அவற்றில் எவையும் நிரூபிக்கப்படவில்லை.***

***இதேவேளை, பெப்ரவரி 28 ஆம் திகதி ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் இலங்கை விவகாரம் குறித்த வாக்கெடுப்பு இடம்பெறாது. எனினும், இந்த ஆண்டு செப்டெம்பரில் இலங்கை தொடர்பான மற்றொரு தீர்மானத்திற்கு முன்னோடியாக இந்த அமர்வு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.''***

மனித உரிமைகள் ஆணையாளரின் இந்த அறிக்கைக்கு இலங்கை அனுப்பவுள்ள பதிலில் வழமைபோலவே சமாளிப்பு வார்தைகளை இட்டிருக்கும். ஆனால், வழமையான தப்பிக்கும் சூத்திரங்களை இலங்கை இனிமேலும் செய்ய முடியாது என்பதை கொழும்பு உணர்ந்துகொள்ளும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

வழமையான பொறுப்புக் கூறலுக்கு அப்பால் இம்முறை உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் குறித்தான பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் குற்றச்சாட்டுகளையும் இலங்கை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

இலங்கை ஆட்சியாளர்களையும், சட்டமா அதிபர் திணைக்களத்தையும் நம்ப முடியாதென இதே அரசுக்கு வக்காலத்து வாங்கிய பேராயர் சொல்லும்போது, சர்வதேச சமூகத்திற்கு எப்போதையும் விட இப்போது இலங்கை தொடர்பில் சற்றுக் கூர்ந்து கவனிக்கவேண்டிய தேவையிருக்கிறது.

வழமையான குற்றச்சாட்டுகளுக்கு அப்பால் இப்போது சற்று குரலை உயர்த்தியுள்ள பேராயர், ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும், வத்திக்கானுக்கும் முறையிடப்போவதாக கூறியுள்ளார். “ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம்” என்பதுபோல், இலங்கையின் நீதித்துறை குறித்து கூறும் பேராயரின் கருத்துகள் தமிழர்கள் காலாகாலம் கூறிவந்தவையே.

இப்போதாவது இலங்கையில் தமிழ்பேசும் சமூகங்கள் நீதி நிராகரிக்கப்பட்ட சமூகமாக வாழ்ந்து வருவதை மேற்குலகம் உணரவேண்டும். அவர்களின் ஜனநாயக உரிமைகள் பேணப்படுவதை உறுதி செய்யவேண்டும்.ஜெனிவா மனித உரிமைகள் பேரவை இதனை மேற்கொள்ளும் தார்மீகக் கடப்பாட்டில் இருக்கிறதென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

# போற்றுதற்குரியதை எல்லோரும் கொண்டாடுவோம்!



(வ.சக்திவேல்)

நான் கொண்டு சென்ற 50 ஆயிரம் ரூபா பணம் வழியில் தவறி விழுந்த விடயம் எனக்கே தெரியாது. அப்பணத்தைக் கண்டெடுத்த இளைஞன் என்னைத் தேடிக் கண்டுபிடித்து என்னிடம் ஒப்படைக்கும்போதுதான் நான் பணத்தைத் தொலைத்திருப்பது தெரியவந்தது என்கிறார் மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தராகக் கடமையாற்றும் கே.எஸ்.ஆர்.சிவகுமார்.

**கேள்வி: சம்பவம் எவ்வாறு நடந்தது என்பதைப் பற்றிச் சொல்லுங்கள்?**

**பதில்:** நான் கடமை முடிந்து வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி மோட்டார் சைக்கிளில் போய்க்கொண்டிருந்தபோது நான் கொண்டு சென்ற பணம் தொலைந்திருக்கிறது. ஆனால், அப்பணம் திரும்ப எனக்குக் கிடைக்கும் வரை அது தொலைந்தது பற்றி எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

எனது மேற்சட்டைப் பையில் பணத்தையும், கையடக்கத் தொலைபேசியையும் வைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் நான் பயணித்துக் கொண்டிருந்த வேளையில் கையடக்கத் தொலைபேசியை வெளியே எடுத்துள்ளேன். அந்த சந்தர்ப்பத்தில்தான் என்னையறியாமல் பணம் கீழே விழுந்திருக்க வேண்டும்.

**கேள்வி: பணம், மீண்டும் உங்களது கைக்கு கிடைத்தவுடன் உங்களுடைய உணர்வு எவ்வாறிருந்தது ?**

**பதில்:** எனது உறவினர் ஒருவர், இன்னொரு உறவினருக்கு வழங்குமாறு என்னிடம் கையளித்த பணமே அது. தொலைந்த பணம் கிடைக்காமல் போய் அத்தகவலை நான் உறவினர்களிடம் தெரிவித்திருந்தாலும்கூட அவர்கள் என்னை சந்தேகித்திருக்கக் கூடும்.

**கேள்வி: பணத்தைக் கண்டெடுத்து அதனை திருப்பி உங்களிடம் ஒப்படைத்த இளைஞனின் இவ்வாறான நற்செயல் மிக்கதொரு சம்பவத்தின் மூலம் வெளி உலகிற்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

**பதில்:** சிறிய வயதுடைய அந்த இளைஞர் அப்பணத்தை என்னைத் தேடிக் கண்டுபிடித்துத் தந்தபோது உண்மையில் நான் வியந்து போனேன். இந்தக் காலத்திலும் ஏனையோருக்கு எடுத்துக்காட்டாக இவ்வாறான மனிதநேயம் மிக்க தயாள சிந்தையுள்ள இளைஞர் ஒருவர் உள்ளாரே என்று எண்ணத் தோன்றியது. எனக்கு வரவிருந்த பழிச் சொல்லிலிருந்து இந்த நல்லெண்ணம் கொண்ட இளைஞர் மூலமாக கடவுள் என்னைக் காப்பாற்றியுள்ளார்.

அந்த இளைஞருடைய பெற்றோரின் வளர்ப்பே இங்கு எடுத்துக் காட்டப்பட வேண்டியுள்ளது. அந்த இளைஞரை அவரது பெற்றோர் மிகவும் சிறந்த முறையில் வளர்த்து நற்பண்புள்ள ஒருவராக உருவாக்கியுள்ளார்கள்.

அது மாத்திரமின்றி இஸ்லாமிய பள்ளிவாசல்களின் மதபோதனைகளும், அந்த இளைஞரை நற்பண்புள்ளவராக வளர்த்துள்ளன என்று நான் கருதுகின்றேன். அத்துடன் அவர் கடவுளுக்கு பயந்தவராக உள்ளார். அதனால்தான் அந்த இளைஞரால் மனிதநேயம் மிக்க நேர்மையான செயலைச் செய்ய முடிந்திருக்கின்றது. அவர் என்றென்றைக்கும் போற்றப்பட வேண்டியவராவார் என்கிறார் கலாசார உத்தியோகத்தர் கே.எஸ்.ஆர்.சிவகுமார்.

பணத்தைக் கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்தவர் ஏறாவூரைச் சேர்ந்த முச்சக்கரவண்டிச் சாரதி இஸ்மாயில் கபீர் (வயது 33) தெரிவிக்கையில்,

**கேள்வி: தெருவில் யாரோ ஒருவரின் பணத்தைக் கண்டெடுத்தவுடன் உங்களுக்குள் ஏற்பட்ட உணர்வு என்ன?**

**பதில்:** நான் எனது முச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்தபோது ஐயாயிரம் ரூபா பணத்தாள்கள் பல, எனக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவரின் சட்டைப் பையிலிருந்து சிதறி நடுவீதியில் விழுவதைக் கண்டேன். அவரே பணத்தை அள்ளி வீசிவிட்டுச் செல்கின்றாரோ என்றுகூட ஒரு கணம் எனக்கு எண்ணத் தோன்றியது.

வீதியில் வேறு ஆட்களின் நடமாட்டம் இருக்கவில்லை. நான் மட்டுமே பயணித்துக் கொண்டிருந்தேன். அதனால் வீதியில் சிதறிக் கிடந்த பணத்தை நான் மிகுந்த பதற்றத்துடன் பொறுக்கி எடுத்துக் கொண்டேன்.

**கேள்வி: வீதியில் சிதறிக் கிடந்த பணத்தை சேர்த்து எடுத்துக் கொண்டபோது உங்களது உணர்வு எவ்வாறிருந்தது ?**

**பதில்:** அது எனது பணமில்லை. ஆகையால் யாரோ ஒருவர் கஷ்டத்துடன் சம்பாதித்த இந்தப் பணத்தை உரியவரிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற நோக்கமே என்னிடம் இருந்தது. நான் உரியவரிடம் பணத்தை ஒப்படைக்கும்வரை அதில் எவ்வளவு தொகை இருந்தது என்பதைக் கூட நான் எண்ணிக் கணக்கிடவில்லை.

**கேள்வி: பணத்தை எவ்வாறு உரியவரிடம் கையளித்தீர்கள்?**

**பதில்:** பணத்தைத் தவற விட்டவரின் ஆள் அடையாளம் எனக்குத் தெரியாதபோதிலும், அவரது மோட்டார் சைக்கிள் அடையாளத்தை நினைவில் வைத்துக்கொண்டு, அவரைப் பின்தொடர்ந்து சென்றேன்.

இந்நிலையில், மட்டக்களப்புக்குச் செல்லும் வழியில், மைலம்பாவெளி எனும் பகுதியில் அந்தப் பணத்தைத் தொலைத்தவர் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திய நிலையில் இன்னொருவருடன் உரையாடிக்கொண்டிருந்தார். அவ்வேளையில் நான் அவரை நெருங்கி உங்களுடைய ஏதாவது பொருள் தொலைந்துள்ளதா எனக் கேட்டேன். அவர் இல்லை என்றார்.

சரியாக கவனித்துப் பாருங்கள். ஏதாவது தொலைந்திருக்கும் என்றேன். அப்போதும் அவர் இல்லை என்றே சொன்னார். நீங்கள் கொண்டு வந்த எல்லாவற்றையும் பரிசோதித்துப் பாருங்கள் என்று மறுபடியும் அவரிடம் நான் கூறினேன். இந்நிலையில், அவரது சட்டைப்பையைப் பரிசோதித்த அவர், தனது பணம் கைவசம் இல்லை என்பதை அறிந்து திகைத்துப் போய் தடுமாறி நின்றார்.

அவ்வேளையிலேயே நான் வீதியில் கண்டெடுத்த அவருடைய பணத்தை எண்ணிப் பார்த்தேன். 50 ஆயிரம் ரூபா இருந்தது. அதை அவரிடம் ஒப்படைத்தேன்.

**கேள்வி: உரியவரிடம் பணத்தை ஒப்படைத்தவுடன் உங்களது உணர்வு எவ்வாறிருந்தது ?**

**பதில்:** பணத்தை அவரிடம் கொடுத்தபோதிலும் உரியவரிடம் பணத்தை ஒப்படைத்தேனா என்ற சந்தேகம் என்னை ஒட்டிக்கொண்டது. இந்நிலையில், அவரது கையடக்கத் தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக் கொண்டேன்.

**கேள்வி: உங்களது தயாள செயலுக்காக பாராட்டி கௌரவிக்கப்பட்டீர்கள். அப்போது உங்களது உணர்வு எவ்வாறிருந்தது?**

**பதில்:** ஒருபோதும் மேடையேறாத நான், அனைவர் முன்னாலும் முதன்முறையாக மேடையில் ஏற்றப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டபோது மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. சிறு பதற்றமும் இருந்தது. நான் செய்த நன்மைக்கு பயன் கிட்டியது என்பதை உணரும்வேளை அம்மகிழ்ச்சியை வார்த்தைகளால் விவரிக்க முடியவில்லை.

**கேள்வி: நீங்கள் செய்த இந்த நற்காரியத்தின் மூலம் வெளி உலகிற்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**பதில்:** அது இன்னொருவரது பணம். அந்தப் பணத்தை நான் எடுத்திருந்தால் அது திருடப்பட்டதாகவே கருதப்படும். ஆகையால், மனச்சாட்சிக்கு பயந்த நான் எப்படியாயினும் அப்பணத்தை உரியவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றே கருதினேன். உரியவரின் பணத்தை உரியவரிடமே நான் சேர்ப்பித்தேன்.

கஷ்டத்தில் வாழும் எனக்கு, பிறரது கஷ்டத்தையும் புரிந்துகொள்ள இயலும். மனிதநேயத்தின் அடிப்படையில் நான் அவ்வுதவியை செய்தேன் என்று தெரிவித்தார்.

பிரதேச கலை இலக்கிய விழாவும், ‘இனசமதி’ மலர் வெளியீடும் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் தலைமையில் அலிகார் தேசியக் கல்லூரியில் கடந்த 23.12.2021 அன்று இடம்பெற்றபோது, அதில் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கே.கருணாகரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இந்த அறச்செயலைப் பாராட்டிப் பேசினார்.

இந்நிகழ்வில் மாவட்ட உதவிச் செயலாளர் ஏ.நவேஸ்வரன், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் ச.நவநீதன், மாவட்ட செயலக கலாசார இணைப்பாளர் ரீ.மலர்ச்செல்வன், சம்மாந்துறைப் பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எம்.ஹன்சுல் சிஹானா, கணக்காளர் தர்மினி வினோதன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஏ.ரஹீம், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் எம்.ஏ.சி.ஜெய்னுலாப்தீன், காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ் அரபுக் கல்லூரியின் நிர்வாக செயலாளரும், ஹாபிழ்கள் ஒன்றியத்தின் ஆலோசகருமான கலாபூஷணம் எம்.எச்.எம்.புஹாரி உட்பட இன்னும் பல எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கலைஞர்கள், மாணவர்கள் முன்னிலையில் பணத்தைக் கண்டெடுத்து அதனை உரியவரிடம் ஒப்படைத்த முச்சக்கர வண்டிச் சாரதியான ஏறாவூரைச் சேர்ந்த இஸ்மாயில் கபீர் பொன்னாடை போர்த்தி விருதுவழங்கி கௌரவிக்கப்பட்டார்.



## நக்கல் நமசிவாயம்

கரண்ட் அடிக்கடி இல்லாம கரண்ட் பில் குறையுது...! கேஸ் இல்லாம சமைக்க கஷ்டம் எண்டபடியால சாமான் வாங்குற செலவு குறையுது..! எரிபொருள் இல்லாட்டி வாகனத்தை ஓடாம வீட்டுல வச்சால் அதிலயும் செலவு குறைவு..!

அரசாங்கம் மக்களுக்கு நல்லதுதான் செய்யுது போலக் கிடக்குது..!



## இன்றைய நாளில்...

**2002 – இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் வவுனியாவில் கையெழுத்திடப்பட்டது.**
**2005 – ஈரானில் கெர்மான் மாகாணத்தில் 6.4 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 612 பேர் உயிரிழந்தனர்.**
**2006 – பிரித்தானியாவின் சரித்திரத்தில் மிகப் பெரிய கொள்ளை கென்ட் நகரில் இடம்பெற்றது. 53 மில்லியன் ஸ்டெர்லிங் பவுண்டு பணத்தை அறுவர் சேர்ந்து கொள்ளையிட்டனர்.**
**2011 – நியூசிலாந்தில் கிறைஸ்ட்சேர்ச்சில் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 185 பேர் உயிரிழந்தனர்.**

# நாட்டில் சுதந்திரமான நீதித்துறை இயங்குகிறது என்பதற்கு தீர்ப்புகளே சாட்சி

## சட்டமா அதிபருக்கு அரசாங்கம் எந்த பரிந்துரையையும் முன்வைப்பதில்லை என அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



அரசாங்கத் தரப்பைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக கடந்த அரசாங்கத்தால் தாக்கல் செய்யப்பட்டிருந்த எந்த வழக்கும் நீக்கப்படவில்லை என்றும் இந்த நாட்டில் சுதந்திரமான நீதித்துறை இயங்கி வருவதை தீர்ப்புகள் சுட்டிக்காட்டுவதாகவும் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட எந்த வழக்கும் நீக்கப்படவில்லை. ஒரு வழக்கே நீக்கப்பட்டது. அதனையொத்த இன்னுமொரு வழக்கு தோல்வியடைந்ததை அடுத்தே, அந்த வழக்கு நீக்கப்பட்டது. அந்த வழக்குகளுக்கு சாட்சி இல்லை என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியிலேயே காமினி செனரத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், அந்த வழக்கு அந்த அரசாங்கத்தின் காலப்பகுதியிலேயே நிராகரிக்கப்பட்டது. அதன் பின்னர் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதன் பின்னர் எவன்கார்ட் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கும் அந்த அரசாங்கத்தின் காலப்பகுதியிலேயே நிராகரிக்கப்பட்டது.

பொய் வழக்குகள் தாக்கல் செய்யும்போது தகுந்த சாட்களின் வழக்குகள் இவ்வாறே நிராகரிக்கப்படும். ஆனால் நாங்கள் அந்தத் தவறை இழைக்கப்போவதுமில்லை. அதில் தொடர்புபடப் போவதுமில்லை.

சட்டமா அதிபருக்கு வழக்குத் தாக்கல் செய்ய வேண்டியவர்களின் பெயர்களை நாங்கள் பரிந்துரைப்பதும் இல்லை. எவ்வாறான தவறாக இருந்தாலும் சுயாதீனமாக பரிசோதனை செய்து சுதந்திரத்தையும் அறிவையும் பயன்படுத்தி செயற்படுமாறே நாங்கள் அறிவுறுத்தியுள்ளோம்.

ஆகவே, இறுதியாக நீதிமன்றமே தீர்மானம் எடுக்க வேண்டும். நபரொருவர் விடுதலையா இல்லையா என்பதையும் நீதிமன்றமே தீர்மானிக்கும். எங்களின் தலையீடுகள் எதுவும் இல்லை என்றார்.

## இலங்கை மத்திய வங்கி – 21.02.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 030 31 0 | 036 2706 |
| கனேடியன் டொலர் | 043 607 | 05 4583 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 20 0208 | 21 2855 |
| யூரோ | 114 077 | 123 6414 |
| ஜப்பான் யென் | 0 6050 | 0 67 1 |
| சிங்கப்பூர் டொலர் | 036 1488 | 041 60 |
| ஸ்ரேலிங் பவுன் | 157 8745 | 166 3552 |
| சுவிஸ் பிரான்ங் | 103 3467 | 111 318 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 424 4620 |
| குவைட் | குவைட் தினார் | 556 7124 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 3751 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 0158 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 7038 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 865 |

# வெளிநாட்டிலுள்ள இலங்கை தொழில் நிபுணர்களின் வலையமைப்பு அறிமுகம்

இலங்கையின் தேசிய அபிவிருத்திக்காக தேசிய அறிவியல் அறக்கட்டளையை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டிலுள்ள இலங்கை தொழில் நிபுணர்களின் வலையமைப்பு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று (21) முற்பகல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறையின் சர்வதேச ஒத்துழைப்பை தேசிய வளர்ச்சிக்கு பங்களிக்கச் செய்யும் வகையில் தேசிய அறிவியல் அறக்கட்டளையினால் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள 950க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தற்போது இந்த வலையமைப்புடன் இணைந்துள்ளனர்.

நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்க ஆர்வமுள்ள கல்வி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் துறையில் உயர் பதவிகளை வகிக்கும் வெளிநாட்டிலுள்ள இலங்கையின் புகழ்பெற்ற



விஞ்ஞானிகள் மற்றும் தொழில் நிபுணர்களுக்கு நம்பகமான மற்றும் யதார்த்த பொறிமுறையின் தேவையை பூர்த்தி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.

உயர்கல்வி மற்றும் திறனை வளர்ப்பதற்கு அதிக வாய்ப்புகளை வழங்கல், கல்வி ஒத்துழைப்பு மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட பரந்த நோக்கத்தின் கீழ் தேசிய அறிவியல் அறக்கட்டளை மற்றும் இலங்கை மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கம் ஆகியவற்றுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமும் இதன்போது கையெழுத்தானது.

கலாநிதி பந்துல விஜே (அமெரிக்கா), பேராசிரியர் டிலந்த பெர்னாண்டோ (கனடா, பேராசிரியர் மொன்டி காஸிம் (ஜப்பான்), பேராசிரியர் சாந்தி மெண்டிஸ் (சுவிட்ஸர்லாந்து, பேராசிரியர் டிலந்த அமரதுங்க (ஐக்கிய இராச்சியம்), பேராசிரியர் சமன் ஹல்கமுகே (அவுஸ்திரேலியா) ஆகியோர் காணொளி தொழில்நுட்பம் ஊடாக நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தேசிய அறிவியல் அறக்கட்டளையின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன உள்ளிட்ட தேசிய அறிவியல் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் மற்றும் இலங்கை மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# ஏப்ரல் மாத இறுதிக்குள் தடுப்பூசிகளை முழுமையாக பெற்றுக்கொள்ள வேண்டும்

## அரச உத்தியோகத்தர்களுக்கு உபுல் ரோஹண வலியுறுத்து

அனைத்து அரச உத்தியோகத்தர்களும் எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதிக்குள் தடுப்பூசிகளை முழுமையாக பெற்றுக்கொள்ள வேண்டும் என பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முழுமையாக தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் பொது இடங்களுக்குச் செல்வதை தடுக்கும் வகையில் இத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அனைத்து அரச நிறுவனங்களும் பொது இடங்கள் என்பதால் அந்த இடங்களில் பணியாற்றும் அனைவரும் தடுப்பூசி பெற்றிருக்க வேண்டும் என சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஏதேனுமொரு கடமைக்காக நிறுவனம் ஒன்றுக்கு செல்லும் எவருக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அலுவலர்கள் முழுமையாக தடுப்பூசி பெற்றுள்ளீர்களா என்று விசாரிக்க உரிமை உண்டு. அத்தகைய விசாரணையின்போது அந்த அதிகாரி, முழுமையாக தடுப்பூசி போடவில்லை என்றால் அது தொடர்பாக பிரதேச பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவித்தால் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும்.

தடுப்பூசி பெற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு ஒருவருக்கு உரிமை இருந்தாலும் இன்னொருவரின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் உரிமை அவருக்கு இல்லை என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.



ஊடகத்துறையில் 50 ஆண்டுகாலம் பிராந்திய செய்தியாளராகக் கடமையாற்றி பொன்விழா கண்ட வடமராட்சி எஸ். தில்லைநாதனுக்கு அல்வாய் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய பாராட்டு விழாவில் காலைக்கதிர் பிரதம ஆசிரியர் ந.வித்தியாதரன், யாழ். ஊடக அமையத்தின் ஆலோசகர் இதயாபரன், பத்திரிகையாளர் திருமதி சரஸ்வதி சுகிர்தராஜ் தலைமை வகித்த வேணுகானன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிப்பதைப் படங்களில் காணலாம்.

# தமிழ், சிங்கள ஊடகத்துறையினரிடையே புரிதலை ஏற்படுத்தப் பாடுபட்ட கமல் லியனாராச்சி

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அனுதாபம்

மூத்த ஊடகவியலாளரும் இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதித் தலைவருமான கமல் லியனாராச்சியின் திடீர் மறைவு, சிங்கள, தமிழ் ஊடகத்துறைக்குப் பேரிழப்பாகுமென தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்துடன் நெருங்கிய உறவைப் பேணியவர் என்று கூறப்பட்டுள்ள அந்த அனுதாபச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கமல் லியனாராச்சி, லக்பிம என்ற சிங்கள நாளிதழில் மூத்த செய்தியாளராகக் கடமையாற்றியிருந்தார். நீதி என்ற சிங்கள வார இதழ் மூலம் ஊடகத்துறைக்குள் கால்பதித்திருந்தார். சுமார் முப்பது ஆண்டுகால ஊடகத்துறை அனுபவமுடைய இவர், ஆங்கில மொழியிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர்.

ஊடகத்துறையில் பல அனுபவங்களைப் பெற்று, 2006ஆம் ஆண்டு முதல் இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சிங்கள மொழிப் பிரிவு பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியிருந்தார்.

பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பதவி வகித்துப் பின்னர் முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதித் தலைவராகவும் பதவியுயர்வு பெற்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மரணிக்கும்வரை பணியாற்றியிருந்தார்.

ஊடக வளவாளராகவும் கடமையாற்றிய கமல் லியனாராச்சி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை உருவாக்குவதற்கான கலந்துரையாடல்களை நடத்தியதுடன் அது தொடர்பான பொதுமக்களின் கருத்துகளையும் பெற்று ஆவணப்படுத்தியிருந்தார். அவற்றை அரசியல் பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்வதிலும் முன் நின்று செயற்பட்ட ஒருவர். செய்தியாளராகவும் ஊடக வளவாளராகவும் அவர் பணியாற்றிய காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தார். அவற்றைத் துணிவுடன் எதிர்கொண்டார். ஊடகத்துறைக்கு அச்சுறுத்தலான காலத்திலும்கூட அவர், நாட்டைவிட்டு வெளிநாடு செல்லவில்லை.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஊடகத்துறை முன்னேற்றத்துக்கான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த கமல் லியனாராச்சி, போர்க் காலங்களில் தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பான பல விழிப்புணர்வுக் கூட்டங்களையும் நடத்தியிருந்தார்.

அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் தமிழ் ஊடகவியலாளர்கள் குறித்த விபரங்களைப் பெற்று, சம்பந்தப்பட்ட ஊடக அமைப்புகளுக்கு அறிவித்து குறைந்தபட்ச பாதுகாப்பை வழங்குவதில் முன்நின்று செயற்பட்டவர். குறிப்பாக போர்க் காலங்களில் சிங்கள, தமிழ் ஊடகத்துறையில் முரண்பாடுகள் எழுந்திருந்த பல சந்தர்ப்பங்களில் நிதானமாகச் செயற்படும் கமல் லியனாராச்சி, தேவைப்படும்போது வார்த்தைகளை அளந்து பேசுவார்.

பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டும்போது தர்க்கரீதியாகவும் கூர்மையாகவும் தன் கருத்துகளை முன்வைத்து நியாயங்களை வெளிப்படுத்துவார்.

இதனாலேயே தமிழ் ஊடகத்துறையினர் கமல் லியனாராச்சியோடு நெருங்கிப் பழகியிருந்தனர். சிங்கள, தமிழ் நாளிதழ்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்படும் முறைப்பாடுகளை நிதானமாக அணுகிப் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்கும் பண்பும் குறித்த நாளிதழ் ஆசிரியர்களோடு உறவைப் பேணும் முறையும் அற்புதமானவை.

ஒரு செய்தியாளனுக்கு இருக்க வேண்டிய பொறுமை, நிதானம், சகிப்புத்தன்மை கமல் லியனாராச்சியிடம் தாராளமாகவே இருந்தது. போரின் பின்னரான சூழலில் சிங்கள, தமிழ் ஊடகத்துறைக்குள் இணக்கப்பாட்டையும் சரியான புரிதலையும் ஏற்படுத்தும்நோக்கில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல உரையாடல்களை நடத்திக் கொண்டிருந்த கமல் லியனாராச்சியின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாதது.

# புத்தளம் - கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலி

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் சிலாபம் 64ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் (20) இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குமாரகட்டுவ மிகல்லவட்டவன பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபர் ஒருவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபத்திலிருந்து கொழும்பு பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிய ரக லொறியொன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி வீதியோரத்தில் உள்ள மதில் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது, படுகாயமடைந்த நிலையில் குறித்த லொறியில் பயணித்த சாரதியையும் உதவியாளரையும் அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த பின்னர் லொறியின் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அத்துடன், குறித்த லொறியில் பயணித்த உதவியாளர் சிலாபம் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகிறார்.

உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மாதம்பை பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


## வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | தயாரிப்பு வகை | |
|---|---|---|---|
| 13 - 0XXX | HB310-070270 | CAR | DATSUN SUNNY |

- வாகனம் பரிசோதனை செய்தல் : இல 310, ஸ்ட்ராயிட் வீதி, கெக்கிராவ.

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | தயாரிப்பு வகை | |
|---|---|---|---|
| 16 - 5XXX | 04458592 | CAR | FIAT DNO 45 SALOON |
| 18 - 0XXX | VF315BK31-70066824 | CAR | PEUGEOT 405 GL |
| NW-RF - 0XXX | NH7348083 | TRACTOR - 4 WHEEL | NEW HOLLAND 4710 2WD |

- வாகனம் பரிசோதனை செய்தல் : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2022 பெப்ரவரி 22, 23ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. பெப்ரவரி 24ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டெண்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 2022 பெப்ரவரி 24ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டெண்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டெண்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- டெண்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டெண்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

டெண்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டெண்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனை" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டெண்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.

முகாமையாளர்,
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.**
வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
தொலைபேசி இல. 0112 000 000

COMMERCIAL CREDIT



## பெயர்மாற்றம்

நுவரெலியா மாவட்ட அம்பகமுவ செயலாளர் பிரிவில் உள்ள சாமிமலை கிராம சேவகர் பிரிவு 320C டீசைட் தோட்டத்தை சேர்ந்த தேவதாஸ் கலிவாணர் என்ற பெயரில் உள்ள அடையாள அட்டை இலக்கம் - 980663795V, பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றில் உள்ள எனது பெயரை இன்று முதல் தேவதாஸ் கலைவாணர் என மாற்றி உள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக குடியரசுக்கும் இலங்கை மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

ஒப்பம்
தேவதாஸ் கலைவாணர்

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# அன்றைய திறந்த பொருளாதாரக் கொள்கையே இன்றைய இக்கட்டான நிலைக்கு காரணம்

## முன்னாள் மத்திய மாகாண சபை அங்கத்தவர் ராஜா உஸ்வெட்டகெய்யாவ தெரிவிப்பு









(கண்டி நிருபர்)

ஜே.ஆர்.ஜெயவர்தனா காலத்தில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் மூலம் புதிய பிரச்சினைகள் உருவாகின. அன்றைய திறந்த பொருளாதாரக் கொள்கை இன்றைய இக்கட்டான நிலைக்கு நாட்டைத் தள்ளிவிட்டுள்ளது - என்று முன்னாள் மத்திய மாகாண சபை அங்கத்தவர் ராஜா உஸ்வெட்டகெய்யாவ தெரிவித்தார்.

கண்டி, சம்பத் சாலாவ மண்டபத்தில் இடம்பெற்ற சிவில் செயற்பாட்டுக்கென்று ஏற்பாடுசெய்திருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு 'மக்கள் மய அரசியலமைப்பிற்கான கலந்துரையாடல்' என்ற தலைப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாத சிக்கல்கள் இன்று தோன்றியுள்ளன. சுதந்திரத்தை அடுத்து 1948ஆம் ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்பட்ட சோல்பரி அரசியலமைப்பு 1972ஆம் ஆண்டுவரை அமுலில் இருந்தது. அதில் பிரித்தானிய ராணிக்கு அடிபணியும் ஏற்பாடுகள் இருந்தன. அதன் பின்னர் அதனை மாற்றி ஜே.ஆர்.ஜெயவர்தனா காலத்தில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பில் இன்று காணும் புதிய பிரச்சினைகள் உருவாகின. அன்றைய திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக இன்று பொருளாதார ரீதியில் நாடு திண்டாடுகிறது.

கட்டுப்பாடற்ற இறக்குமதிகளாலும் வரையறையில்லாத அதிகாரங்களாலும், தொகுதிக்கு பொறுப்புக்கூறும் ஒரு பிரதிநிதி இல்லாத காரணத்தாலும் இன்றைய இக்கட்டான நிலைக்கு அந்த அரசியலமைப்பு தள்ளிவிட்டுள்ளது. அத்துடன் அதன் பின்னர் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் காரணமாக மேலும் பிரச்சினைகள் உருவாகின. 13 மற்றும் 18ஆம் திருத்தங்கள் காரணமாக அதிகாரப் பகிர்வில் பிரச்சினைகள் தோன்றின. 19ஆம் திருத்தத்தை தவறாகப் பயன்படுத்தியதால் 52 நாட்கள் ஆட்சியொன்று உருவாகியது, அதனை மாற்றி தற்போது 20ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டும் பிரச்சினைகளுக்கு முடிவு இல்லை - என்றார்.

# பிளாஸ்ரிக் பொருள் பாவனையால் பிரம்பு உற்பத்தியாளர்கள் பாதிப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பிளாஸ்ரிக் உற்பத்திப்பொருட்கள் சந்தையில் நிரம்பியிருப்பதால் எஹலியகொடை உட்பட அதனை அண்மித்த பிரதேச பிரம்பு உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் பிரம்பால் உற்பத்திசெய்யப்படும் கதிரைகள் உட்பட வீட்டு உபயோகப் பொருட்கள் பெருமளவில் வீடுகளில் பாவிக்கப்பட்டு வந்தபோதிலும் தற்போது பிளாஸ்ரிக் பொருட்களின் வருகையால் பெரும் வீழ்ச்சியடைந்துள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

எஹலியகொடை உட்பட அயல் பிரதேசங்களில் பரவலாக வீடுகளில் பிரம்புக் கைத்தொழில் சிறப்பாக இடம்பெற்று வந்தபோதிலும் தற்போது தங்களின் வருமானம் முடக்கமடைந்துள்ளதாக இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே தமது தொழில்துறையை விருத்திசெய்ய உரிய தரப்பினர் வசதிகளை செய்துதர வேண்டும் என தொழில் துறையில் ஈடுபடும் தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்

# நுவரெலியாவில் டீசலுக்கு தட்டுப்பாடு: நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்திருப்பு






(செ.திவாகரன்)

நுவரெலியா பிரதான நகரில் டீசலுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதுடன், வரையறுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 'டீசல் இல்லை' என்ற பதாகைகள் தொங்கவிடப்படிருப்பதை அவதானிக்க முடிந்தது

நுவரெலியா பிரதான நகரில் எரிபொருள் நிலையங்கள் உள்ளபோதிலும் எரிபொருள் நிலையங்களிலும் டீசல் விநியோகம் செய்யப்படவில்லை இதனால் நீண்ட வரிசையில் வாகனங்கள் தரித்து நிற்பதை அவதானிக்க முடிந்தது. இதனால் பிரதான பாதையில் வாகன நெரிசல் ஏற்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள டீசல் தட்டுப்பாடு காரணமாக பெற்றோலுக்கும், மண்ணெண்ணெய்க்கும் இவ்வாறு தட்டுப்பாடு ஏற்படலாம் என அஞ்சி எரிபொருளை சேமித்து வைப்பதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டுவதை காணமுடிந்தது.

இவ்வாறு டீசலுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதனால் பெற்றோல் கொள்வனவு செய்வதற்கு பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

# தனியார் வியாபார தந்திரத்துள் சிக்கியுள்ளது அரசு

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

"கட்டுப்பாட்டு விலை முறையால் நாட்டில் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியாது'' என நீர்வளத்துறை அமைச்சரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பது தொடர்பில் கருத்துக் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருட்களின் விலைகள் இன்றொன்று நாளையொன்று என ஒவ்வொரு கடைகளிலும் ஒவ்வொரு விலைக்கு விற்கப்படுகின்றன.

தனியார் வர்த்தகத்துறையின் தந்திரங்களை அரசாங்கம் உணர்ந்து நாட்டின் கூட்டுறவுத்துறையை ஊக்குவிக்க வேண்டும். குறைந்த விலையில் பொருட்களை விற்பனைசெய்யும் வகையில் கூட்டுறவுத்துறையை அரசாங்கம் விஸ்தரிக்க வேண்டும். எரிபொருள் விலையேற்றத்தால் சாதாரண மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு தீர்வாக பங்கீட்டு முறை பின்பற்றப்படல் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இறைச்சிக்காக கொண்டுசெல்லப்பட்ட பசுக்களை மீட்டு வறியோருக்கு வழங்கிய தலவாக்கலை பொலிஸார்



(செ.தி.பெருமாள்)

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் சட்டவிரோதமாக இறைச்சிக்காக கொண்டுசெல்லப்பட்ட இரண்டு பசுக்களை பூண்டுலோயா பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதனையடுத்து மீட்கப்பட்ட பசுக்கள் அப்பகுதிக்கு பொறுப்பான கால்நடை வைத்திய அதிகாரியுடன் கலந்துரையாடி நீதிமன்ற அனுமதியுடன் இப்பிரதேசத்தில் பண்ணை வளர்ப்பில் ஈடுபட்டுவந்த வறிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.







(பதுளை, பசறை நிருபர்கள்)

பண்டாரவளை இந்து இளைஞர் மன்ற வருடாந்தக் கூட்டம் நேற்று பண்டாரவளை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது 2022ஆம் ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. மன்றத் தலைவராக என். செல்வராஜ், செயலாளராக ஆர்.கிருஸ்ணமூர்த்தி, பொருளாளராக வீ.சூரியகுமார் ஆகியோரும் தெரிவாகினர். கடந்த கால நிர்வாக சபையினரான முன்னாள் மாகாண கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன், தொழிலதிபர்களான வீ.குமாரவேல், என்.ரகுபதி ஆகியோர் கடந்த கால செயற்பாடுகள் குறித்து உரையாற்றுவதையும், கூட்ட நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

# 2030ஆம் ஆண்டில் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் குறைந்தபட்சம் வீட்டிற்கொரு பட்டதாரியை உருவாக்குவதே இலக்கு

## இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ரமேஸ் தெரிவிப்பு

(பதுளை நிருபர்)

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் 2030ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் வீட்டிற்கொரு பட்டதாரியை உருவாக்கும் வேலைத்திட்டத்தினை, எமது அமைப்பினர் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றனரென்று இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ஆர்.ரமேஸ்வரன் தெரிவித்தார்.









பசறை பகுதியின் கமேவலை பெருந்தோட்டத் திற்கருகாமையில் பெற்றோரை இழந்த நிலையில் மூன்று பிள்ளைகள் தமது பாட்டியின் அரவணைப்பில், சிறு குடிலொன்றில் வாழ்ந்து வந்தனர். இவர்களின் அவல வாழ்க்கையை அறிந்த இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ஆர்.ரமேஸ்வரன், தமது அமைப்பின் ஊடாக தனி வீடொன்றை அமைத்துக் கொடுத்திருந்தார். அவ்வீட்டின் திறப்பு விழா சனிக்கிழமை (19ஆம் திகதி) இடம்பெற்றது.

திறப்புவிழா நிகழ்வில் கலந்து கொண்டு அமைப்பின் தலைவர் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பெற்றோரை இழந்து, தனது பாட்டியின் அரவணைப்பில் இருக்கும் மூன்று பிள்ளைகளும், பாட்டியும் வசித்துவந்த இடம் சிறு கொட்டிலொன்றாகும். இதுவிடயம் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதும், எமது அமைப்பின் ஊடாக, எமது சொந்த நிதி மூலம் வீடொன்றை நிர்மாணித்துக் கொடுத்துள்ளோம். ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்பது போல், மூன்று பிள்ளைகளதும் அவர்களின் பாட்டியினதும் முகத்தில் இன்று ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியில் நான் இறைவனையே காண்கின்றேன்.

இம்மூன்று பிள்ளைகளது கல்வி மேம்பாடுகளுக்கு எமது அமைப்பின் ஊடாக அனைத்து வசதிகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுப்போம். அத்துடன், அவர்களின் வாழ்வாதாரங்களுக்கென்று மாதாந்தம் ஒரு தொகை நிதியையும் வழங்கி வருகின்றோம்.

இன்று கையளிக்கப்பட்ட புதிய வீட்டிற்கு அனைத்து வசதிகளை செய்து கொடுத்திருந்த போதிலும், மின்சார வசதிகளை எம்மால் ஏற்படுத்திக்கொடுக்க முடியாமல் போய்விட்டது. வெகு விரைவில் மின்சார வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்போம்.

60 வயது நிரம்பிய பாட்டியும், ஐந்து மற்றும் ஆறுவயதுகளில் இரு சிறுவர்களும், 13 வயதுடைய சிறுமியும் இருந்துவருகின்றனர். இந்த 13 வயதுடைய சிறுமி க.பொ.த. வகுப்பை எதிர்நோக்கிய நிலையில் இருப்பதால், அச்சிறுமியை, இப்புதிய வீட்டிலிருந்து பட்டதாரியாக்குவது எமது அமைப்பின் இலக்கு. அத்துடன், ஏனைய இரு ஆண்பிள்ளைகளது கல்வி மேம்பாடுகளுக்கும் தேவையான உதவிகளை வழங்குவோம். மேலும் இப்பகுதியில் கண்ணகி தீபப்பிரியா என்ற மாணவி உயர்தரத்தில் படித்து வருகின்றார். அம் மாணவிக்கான கல்வி மேம்பாட்டு புலமைப்பரிசில் நிதியையும், அம் மாணவியின் தாயிடம் வழங்கியுள்ளேன்.

கல்வியால் மட்டுமே எமது சமூகத்தில் முன்னேற்றகரமான மாற்றமொன்றை ஏற்படுத்த முடியும். ஆகவே, எமது அமைப்பு மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் வீட்டிற்கொரு பட்டதாரியை உருவாக்கும் பாரிய முயற்சியினை முன்னெடுத்து வருகின்றது. இதற்கென விஞ்ஞானதீபம் என்ற செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இத்திட்டத்தின்படி, ஸ்மார்ட் திறன் வகுப்பறைகளை பல பாடசாலைகளில் ஏற்படுத்தியுள்ளோம். அத்துடன், கல்வி மேம்பாடுகளுக்கென்று பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பென்று பெயர் சூட்டப்பட்டிருந்தாலும், இரத்தினபுரிக்கு மட்டுமன்றி, மலையகப் பெருந்தோட்டப் பகுதிகள்தோறும் எமது வேலைத்திட்டங்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

எமது இலக்கு 2030ஆம் ஆண்டில் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் குறைந்தபட்சம் வீட்டிற்கொரு பட்டதாரியை உருவாக்குவதாகும் - என்றார்.

# Architect-2022 உறுப்பினர்களின் ஆக்கங்கள் - வர்த்தகக் கண்காட்சி





படங்கள்: சமன் அபேசிறிவர்த்தன

இலங்கை கட்டிடக் கலைஞர்கள் நிறுவனத்தின் (SLIA) 65 ஆவது ஆண்டு விழாவை இவ்வாண்டு விமர்சையாக கொண்டாட நிறுவனம் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது. கொவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்டுள்ள பல சிரமங்களுக்கு மத்தியிலும், நமது நிறுவனத்தின் வருடாந்திர அமர்வு நாளை 23 முதல் 27ஆம் திகதி வரை வழக்கம்போல் நடைபெறுவதை உறுதி செய்ய நாம் பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இதன்போது, அரசின் அனைத்து சுகாதார வழிகாட்டுதல்களும் தீவிரமாக கடைபிடிக்கப்படும். இந்நிகழ்வுகளில் வழக்கமான பார்வையாளர்களை விட அதிக எண்ணிக்கையிலானோர் தத்தமது வீடுகளில் இருந்தே இணையம் மூலம் பங்கேற்கும் விதத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இம்முறை 'நல்வாழ்வுக்காக கட்டிடக்கலை' என்ற கருப்பொருளில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்ச்சியின் குறிக்கோள் கட்டிடத் தொழிலை மிகவும் கவர்ச்சிகரமானதாக மாற்ற பொது விழிப்புணர்வு, அணுகுதல் மற்றும் தொடர்புகளை மேம்படுத்துவதாகும். இது பொது மக்களுக்கு ஓர் ஒப்பற்ற அனுபவமாக இருக்கும் என்பது நிச்சயம். மேலும், கட்டிட மற்றும் ஏனைய துறைசார் நிபுணர்களுடன் தொடர்புகொள்வதற்கான பல வாய்ப்புகளையும் இது வழங்கும்.

உண்மையில், நாம் அனைவரும் மிகவும் சிரமமானதொரு காலகட்டத்தை கடந்து வந்துள்ளோம் என்பது உலகளாவிய உண்மையாகும். பல காலமாக நிலவிவரும் சுகாதார நெருக்கடி தேசத்தின் பொருளாதாரத்தை இருளில் மூழ்கச் செய்திருந்தாலும், அதன் மத்தியிலும் நம்பிக்கையின் ஒரு வெள்ளி கோட்டைப் பார்க்கும் நேர்மறையான அணுகுமுறையை நாம் தழுவியுள்ளோம். அதன்படி, ஆர்கிடெக்ட் 2022 கண்காட்சி மிகவும் வளமானதொரு எதிர்காலத்தை எதிர்நோக்கிய வண்ணம் மிக சூட்சுமமாக திட்டமிடப்பட்டுள்ளது.

### பெப்ரவரி 23 – 27 தினங்களில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அமர்வின் ஆரம்ப நிரல் 2022 பெப்ரவரி 23ஆம் திகதி காலை 9.30 மணிக்கு உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அதிதிகளின் பங்கேற்புடன் இலங்கை கட்டிடக்கலை நிபுணர்கள் நிறுவகத்தின் கேட்போர் கூடத்தில் ஒரு கலப்பு நிகழ்வாக நடைபெறும். முழு நிகழ்வையும் பொது மக்கள் ஃபேஸ்புக் மற்றும் யூடியூப் மூலம் பார்க்கும் வகையில் சமூகமயமாக்கப்படும். இதன்போது 2021 ஆம் ஆண்டில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டயக் கட்டிடக் கலைஞர்களை முறையாக அறிமுகப்படுத்துவதோடு 2021-2022 விருது காலகட்டத்துக்கான ஆக்க விருதுகள், வண்ண விருதுகள் மற்றும் ஆராய்ச்சி விருதுகளை வழங்கும் நிகழ்ச்சிகளும் உட்படும். அத்துடன், வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்குவதன் மூலம் நிகழ்வு மேலும் மெருகேற்றப்படும்.

தேசிய மாநாடு 23ஆம் திகதி காலை 11.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறவுள்ளதுடன் அதன் கருப்பொருள் 'நல்வாழ்வுக்காக கட்டிடக்கலை' என்பதாகும். கட்டிடக்கலை நிபுணர் சன்ன தஸ்வத்த தலைமையுரை ஆற்றுவார். இம்மாநாடு ஒரு கலப்பின நிகழ்வாக இருப்பதோடு பல மூத்த பேச்சாளர்கள் இணையம் மூலம் நேரடியாக பங்கேற்கவுள்ளனர். இந்நிகழ்ச்சிகள் ஃபேஸ்புக் மற்றும் யூடியூப்பில் பொது பார்வைக்கு பதிவேற்றம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'ஆர்கிடெக்ட் 2022 - உறுப்பினர்களின் ஆக்கங்கள் மற்றும் வர்த்தகக் கண்காட்சி' பெப்ரவரி 24 முதல் 27 வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுவதோடு நிகழ்வின் தொடக்க விழா 24ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு நடைபெறும். இவ்வைபவத்தை பொதுமக்கள் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆண்டுதோறும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். இம்முறை நிர்மாணத்துறைக்கு பொதுமக்களின் ஆதரவை அதிகமாக பெறும் நோக்குடன் பல்வேறு வகையான ஆக்கங்கள் 134 ஸ்டால்களில் காட்சிப்படுத்தப்படும்.

நான்கு நாட்கள் நடைபெறவுள்ள கட்டிடக்கலை விவாத மன்றம் கட்டிடக்கலையின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய கல்வி அமர்வொன்றையும் வழங்கும்.

கொழும்பு நகரப் பள்ளி (CSA) மொரட்டுவை பல்கலைக்கழகம், இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மாணவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட குடில்களில் தங்கள் ஆக்கங்களை காட்சிப்படுத்துவார்கள். கட்டிடக் கலையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோருக்கும் இது ஒரு அரிய வாய்ப்பாக அமையும் என்பது திண்ணம்.

இதன்போது வாஸ்து, தி ஆர்கிடெக்ட், பிஃபோ யூ பில்ட் போன்ற இலங்கை கட்டிடக் கலைஞர்கள் நிறுவனத்தின் பிரசுரங்களை வாங்க தனிக் குடில் ஒன்று இருக்கும். பதாதைகள் காட்சிப்படுத்துவது உட்பட கட்டிடக் கலைஞர்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுடன், ஒன்றை வாங்கினால் ஒன்று இலவசம் என்ற அடிப்படையில் ஓர் உதவி நிலையமும் இருக்கும். பொது மக்கள் எதிர்கொள்ளும் கட்டிடக்கலை தொடர்பான பிரச்சினைகள் குறித்த வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் கட்டிடக் கலைஞர்கள் குழுவினர் இதன்போது வழங்குவார்கள். வருடாந்திர பொதுக் கூட்டம் 26ஆம் திகதி நடைபெறும்.

இலங்கை கட்டிடக் கலைஞர்கள் நிறுவனத்தின் 2022 வருடாந்த நிரலை மகத்தான வெற்றியுடன் மேற்கொள்ள இம்முறை நிப்பொன் பேண்ட் லங்கா (பிரைவேட்) லிமிடட் நிறுவனம் 'மூலோபாய அனுசரணையாளர்' என்ற பாத்திரத்தில் செயற்படுவர். அத்துடன் சுவிஸ்டெக் அலுமினியம், எலுமெக்ஸ் PLC ரயினோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் (பிரைவேட்) லிமிடட் மற்றும் லங்கா டயில்ஸ் ஆகிய நிறுவனங்கள் நிகழ்ச்சிக்கு அனுசரணையாளர்களாக இணையவுள்ளனர்.

# பசுமைக்கு அப்பால்: CL Synergyஇன் அனுசரணையில் ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்பின் பெப்ரவரி மாத பதக்கப் போட்டிகள்



CL Synergy நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான றொஷான் சில்வா (இடபுறமிருந்து இரண்டாவது) அனுசரணைக்கான காசோலையை ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்பின் உப தலைவரான சனித் கமகேவிடம் (இடபுறமிருந்து மூன்றாவது) கையளிக்கின்றார்.
அருகில் (இடப்புறமிருந்து) CL Synergy நிறுவனத்தின் நிதிப் பணிப்பாளரான ஜானக உடமுல்ல, ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்பின் கௌரவ மைதான செயலாளரான அம்ரித் டி சொய்சா மற்றும் CL Synergy நிறுவனத்தின் பணிப்பாளரான றோச்சன ஜெயவர்த்தன.



CL Synergy நிறுவனத்தின் நிதிப் பணிப்பாளர் ஜானக உடமுல்ல

சரக்குகளை அனுப்பும் செயற்பாடுகளைக் கையாளும் தீர்வுகளை வழங்குவதில் இலங்கையின் முன்னணி நிறுவனமான CL Synergy ஆனது, ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்பின் "பெப்ரவரி மாத பதக்க சுற்றுப் போட்டிக்கு" (February Monthly Medal Tournament) உத்தியோகபூர்வ அனுசரணை வழங்குவதாக அறிவித்துள்ளது. "பசுமைக்கு அப்பால்" (Beyond the Green) என்ற கருப்பொருளின்கீழ் இந்த போட்டி நடத்தப்படுவதுடன், இது CL Synergy நிறுவனத்தின் சொந்த மகுட வாசகமான "எல்லைகளுக்கு அப்பால்" (Beyond Boundaries) என்பதுடன் ஒத்திசைவதாக அமைந்துள்ளது. எதிர்வரும் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் திட்டமிடப்பட்ட இந்தப் போட்டியானது, ரோயல் கொழும்பு கோல்ஃப்



ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்பின் உப தலைவரான சனித் கமகே

கிளப் திடலில் நடைபெறவுள்ளதுடன், கொழும்பு சமூகத்தின் பிரமுகர்கள் மற்றும் கோல்ஃப் ஆர்வலர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த போட்டியில் சிரேஷ்ட, மாஸ்டர்ஸ் மற்றும் பெண்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் 18 பதக்கங்கள் வழங்கப்படும். மேலும் ஏராளமான விநோத அம்சங்கள் நிரம்பிய கோல்ஃப் நிகழ்வுகள் மற்றும் "Closest to the Pin" மற்றும் "Longest Drive" உள்ளிட்ட செயல்பாடுகளுடன், இதில் வெற்றி பெறுபவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் மதிப்புமிக்க பரிசுகள் காத்திருக்கின்றன.

இந்த அனுசரணையை அறிவித்த CL Synergy நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான றொஷான் சில்வா, "ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்புடன் கைகோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மேலும், இந்த அனுசரணையானது விளையாட்டில் எங்களின் ஆர்வத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்று நம்புகிறோம். அதே நேரத்தில் எம்மைப் போலவே கோல்ஃப் விளையாட்டின் மீது ஆர்வம் கொண்டுள்ள பல்வேறு செல்வந்தர்கள் மற்றும் முதலீட்டாளர்களை இது ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், அத்தகைய பலருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான சிறந்த வலையமைப்பு வாய்ப்பையும் வழங்குகிறது. வெகு விரைவில் கொழும்பு பங்குச் சந்தையில் நிரற்படுத்தப்படுவதற்காக ஆரம்ப பங்கு பொது வழங்கல் நடவடிக்கையை நாம் முன்னெடுக்கவுள்ள நிலையில், இது அனைத்துத் தரப்பினருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த நிகழ்வின் அனுசரணையாளர் என்ற வகையில், பெரும் முயற்சியை மேற்கொண்டு விவரங்களில் கவனம் செலுத்தி திட்டமிடல் மற்றும் காலக்கெடுவை உரிய முறையில் நிறைவேற்றுவதன் மூலம் இந்த நிகழ்வை வெற்றியடையச் செய்ய நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்" என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "நாங்கள் இங்கே CL Synergy நிறுவனத்தில் கோல்ஃப் விளையாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளோம். நான் கூட ஒரு தீவிர ரசிகர் என்பதுடன் மிகவும் ஆர்வமுள்ள ஒரு வீரர். கோல்ஃப் போட்டியைப் பற்றி அதிக விழிப்புணர்வை ஏற்படுத்தவும்




CL Synergy நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் றொஷான் சில்வா

உற்சாகத்தை ஏற்படுத்தவும் மாதாந்த பதக்கப் போட்டி நிகழ்வுக்கு முன்னோடியாக உள்ளக பிரிவுகளுக்கு இடையேயான Fun Golf Putting Tournament எனப்படும் விநோத கோல்ஃப் போட்டியையும் நடத்துகிறோம். பசுமைக்கு அப்பாற்பட்டது என்றால் என்ன என்பதை அனைவருக்கும் நேரடியாக அனுபவிக்க இது வாய்ப்பளிக்கும். எனவே, சில அற்புதமான மனிதர்களைச் சந்திக்கவும் சில அற்புதமான கோல்ஃப் சுற்றுகளை விரைவில் விளையாடவும் நாங்கள் ஆவலுடன் உள்ளோம்" என்று குறிப்பிட்டார்.

போட்டியின் ஒரு பகுதியாக வீரர்கள் மற்றும் அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்காக ஒரு விசேட ஒன்றுகூடல் நிகழ்வும் திட்டமிடப்பட்டுள்ளது. இது எதிர்வரும் 26 ஆம் திகதி ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்பில் நடைபெறும். பெப்ரவரி மாத பதக்கப் போட்டியின் ஒரு பகுதியாக பெண்களுக்கான போட்டியும் நடத்தப்படும். பெண்களுக்கான போட்டிகள் பொதுவாக மாதாந்த பதக்கப் போட்டி வரிசையில் இடம்பெறாததால் இந்த முறை இது ஓர் சிறப்பம்சமாக இருக்கும். 18 பதக்கங்களையும் வெல்கின்ற ஒவ்வொருவரும் இந்த போட்டிக்காக CL Synergy இன் மதிப்புமிக்க பரிசுகளையும் அன்பளிப்புகளையும் பெறுவார்கள். CL Synergyஇன் அனுசரணையின் ஒரு பகுதியாக பெப்ரவரி மாதப் பதக்கப் போட்டியையொட்டியதாக பல விநோத அம்ச நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

CL Synergy (Private) Limited நிறுவனம் 2004 ஒக்டோபர் 05 ஆம் திகதியன்று ஒரு முழு அளவிலான சரக்குகளை அனுப்பும் செயல்பாடுகளைக் கையாளும் நிறுவனமாக கூட்டிணைப்புச் செய்யப்பட்டது. நிறுவனத்தின் நோக்கம் தொழில்முறையான நம்பகமான மற்றும் உயர்தர சேவைகளை வழங்குவதாகும்.

வாடிக்கையாளர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட சூழல், நெகிழ்வுத்தன்மை, மிகவும் கட்டுப்படியாகும் கட்டணங்கள் மற்றும் டிஜிட்டல் செயலாக்கத்தின் மூலம் திறமையான சேவையை வழங்குவதில் நிறுவனம் பெருமை கொள்கிறது. CL Synergy தனது செயல்பாடுகளை பல்வேறு துணை நிறுவனங்களின் கீழ் பன்முகப்படுத்தியுள்ளது. இதில் கப்பற்தொகுதி முகாமைத்துவம், மென்பொருள் தீர்வுகள் மற்றும் முதலீடுகள் மற்றும் பிற புத்தாக்கமான முயற்சிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

# தமிழ் மக்களிடம் நன்றிக்கடன்பட்டுள்ளேன் அந்த நன்றியை என்றும் மறவேன்

## முன்னாள் ஜனாதிபதி மைத்ரி தெரிவிப்பு



(யாழ். நிருபர்)

வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக்கொள்ள வேண்டியது தற்போதைய அரசின் பொறுப்பு - என முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாடு நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றபோது முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிறிசேன பிரதம விருந்தினராக கலந்துகொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரக் கட்சியானது ஏனைய கட்சிகளை விட ஒரு சிறந்த கட்சியாகும். எமது கட்சியில் சிறியவர், பெரியவர் என்று நாங்கள் பார்ப்பதில்லை. அனைவரையும் சமமாக பார்ப்பது எங்களது சுதந்திரக் கட்சியாகும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் அதாவது, தமிழர்கள் வாழும் பிரதேசத்தில் ஓர் அதிகூடிய ஆசனத்தை ஓர் நாடாளுமன்ற உறுப்பினர் பெற்றிருக்கின்றமை வரலாற்றில் ஓர் முக்கியமான விடயமாகும்.

அதற்கு நான் அனைத்து உடுப்பிட்டி தொகுதி மக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு எதிர்வரும் காலத்தில் எமது கட்சிக்கு, அதாவது மாகாண சபை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போதும் எமது கட்சியை பலப்படுத்துவதற்கு அதிகளவில் மக்கள் எமக்கு ஆதரவளிக்க வேண்டும். எமக்கு ஆதரவு அளித்தால், நல்ல நிலைக்கு முன்னோக்கிக் கொண்டுசெல்வோம்.

தற்போது நாட்டில் மக்கள் அதிகளவு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள். எரிவாயு, பசளை, அத்தியாவசிய பொருள் விலையேற்றம் போன்ற பல்வேறு பிரச்சினை களுக்கு முகங்கொடுக்கின்றார்கள்.

அவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. அத்தோடு நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வட பகுதியில் பல திட்டங்களை முன்னெடுத்திருந்தேன். காணி விடுவிப்பு மற்றும் வீதி புனரமைப்பு போன்ற பல்வேறுபட்ட அபிவிருத்திகளை எனது ஐந்து வருட ஆட்சியில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் முன்னெடுத்திருந்தேன்.

ஒன்றை கூறிவைக்க விரும்புகின்றேன், 2015 ஜனாதிபதித் தேர்தலில் என்னை வெல்ல வைப்பதற்கு வடக்கு மக்கள் அனைவரும் வாக்களித்தார்கள்.

அந்த நன்றிக் கடனுக்காகவே நான் எனது ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வட பகுதிக்கு அதிக தடவைகள் வருகை தந்து பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுத்திருந்தேன். அந்த நன்றிக் கடனை நான் என்றும் மறக்கமாட்டேன்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு எனது நன்றிக் கடன் என்றும் இருக்கும். அதே போலவே தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் எமது கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் உடுப்பிட்டி தொகுதியில் அதிகளவான வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் இளமையான புத்திக்கூர்மையான ஓர் அரசியல்வாதி. தற்போது வடக்கில் ஓர் தலைவர் உருவாகினார் என்றால் அது எமது சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன்தான்.

எனவே, அவரை பலப்படுத்துவதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லிணக்கம் மற்றும் சமாதான நிலைமையை ஏற்படுத்தி முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியும் – என்றார்.

இதன்போது தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, சூரிய சக்தி, காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேன் ராகவன் மற்றும் சாந்த பண்டார உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீடியோவைக் காண...

# வல்வெட்டித்துறையில் மீண்டும் நோயாளர் விடுதி

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

வல்வெட்டித்துறை, ஊறணி பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் விடுதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

தாதியர் பற்றாக்குறை காரணமாக குறித்த வைத்தியசாலையின் நோயாளர் விடுதி சேவை நிறுத்தப்பட்டிருந்தது.

இதனால் பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இதுதொடர்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் கு.கமலதாஸினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடிய கடற்றொழில் அமைச்சர், குறித்த வைத்தியசாலையின் விடுதி சேவையை இயங்க வைப்பதற்கு தேவையான தாதியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு ஏற்பாடு செய்தமையினால் குறித்த வைத்தியசாலையில் நோயாளர் விடுதியின் செயற்பாடுகள் சுமார் ஒரு மாதத்துக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குற்றச்செயல்கள் தொடர்பில் இளைஞன் கைது

(யாழ். நிருபர்)

வாள்வெட்டு வன்முறைகளில் ஈடுபட்டு 06 மாதங்கள் தலைமறைவாகியிருந்த இளைஞன் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொக்குவிலைச் சேர்ந்த 22 வயதுடையவரே நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய், யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற 06 வாள்வெட்டு, வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என சந்தேக நபர் 06 மாதங்களாகத் தேடப்பட்டு வந்தார். பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார் என்றும் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

# முன்னாள் ஜனாதிபதி மைத்ரி – யாழ். மறைமாவட்ட ஆயர் சந்திப்பு



(யாழ். நிருபர்)

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிறிசேன பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தார்.

அந்த வகையில் நேற்று முன்தினம் பிற்பகல் யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பில் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, சூரிய சக்தி, காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க, நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வவுனியா நகரசபையால் மரக் கழிவுகளை துகள்களாக்கும் செயற்பாடு ஆரம்பித்துவைப்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா நகரசபையால் நகரப் பகுதியில் காணப்படும மரக் கழிவுகளை துகள்களாக்கும் செயற்பாடு நேற்று (21) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இயற்கை பசளை உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் மரம் மற்றும் இலை குலைகளை துகள்களாக்கும் இயந்திரம் அரசாங்கத்தினால் அண்மையில் வழங்கப்பட்டது.

இதன்போது வவுனியா நகரசபைக்கு வழங்கப்பட்ட துகள்களாக்கும் இயந்திரத்தை கொண்டு வீதியோரங்களில் காணப்படும் மரக் கிளைகள், இலை குலைகள் என்பவற்றை துகள்களாக்கி அகற்றும் நடிவடிக்கை நகரசபையால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதனை வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

# வடமாகாணத்தில் முன்பள்ளி ஆசிரியர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு




# சிறப்புற இடம்பெற்ற புனித யூதாததேயு முன்பள்ளி சிறார்களின் பிரியாவிடை நிகழ்வு





(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு, செல்வபுரம், புனித யூதாததேயு முன்பள்ளியில் பயின்று, இவ்வருடம் பாடசாலைக்குச் செல்லும் சிறார்களுக்குரிய பிரியாவிடை நிகழ்வு நேற்று முன்தினம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

விருந்தினர்களது வரவேற்புடன் தொடங்கிய இந்நிகழ்வில், தொடர்ந்து மங்கல விளக் கேற்றல், சிறார்களின் கலைநிகழ்வுகள், விருந்தினர்களது உரை என்பன இடம்பெற்றதுடன், முன்பள்ளிச் சிறார்கள் பரிசில்கள் வழங்கியும் கௌரவிக் கப்பட்டனர்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு பங்குத்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அடிகளார், கரைதுறைப்பற்று பிரதேச சபை உபதவிசாளர் மரியநாயகம் தொம்மைப்பிள்ளை, சமாதான நீதவான் ஜோசெப் ஜேசுரட்ணம், செல்வபுரம் கிராம சமுர்த்தி உத்தியோகத்தர், யோகம்மா கலைக்கூடத்தின் தலைவர் யோகேஸ்வரன், செல்வபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திலீபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்ததுடன், முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளிச் சிறார்கள், சிறார்களின் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக கையொப்பம் பெறும் போராட்டம் யாழில் தொடர்ந்தும் முன்னெடுப்பு





**(யாழ் நிருபர்)**

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி யாழ்ப்பாணத்தில் இன்றும் கையெழுத்து பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், மருதனார்மடம் மற்றும் சுன்னாகம் பகுதிகளில் நேற்றுக் காலை இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இன்றைய கையெழுத்து போராட்டத்தில் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான ச.சுகிர்தன் மற்றும் கே.சயந்தன், வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் எஸ்.சுகிர்தன், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசன், வலிகாமம் தெற்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எஸ்.பிரகாஸ், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஆழ்கடலில் சுகயீனமுற்ற மீனவர்; பாதுகாப்பாக மீட்க நடவடிக்கை



காலி கலங்கரைவிளக்கத்திலிருந்து 115 கடல் மைல் தொலைவிலுள்ள (213 கிலோமீற்றர்) ஆழ்கடல் பிரதேசத்தில் திடீர் சுகயீனமுற்ற, நீண்டநாள் படகில் தொழில்புரியும் மீனவரொருவர் மீண்டும் கரைக்கு அழைத்து வரப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்க கடற்படையினர் நேற்று (21) நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காலி மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த 08ஆம் திகதி மீனபிடி நடவடிக்கைகளுக்காக புறப்பட்டுச் சென்றிருந்த 'ராஜா 01' என்ற நீண்டநாள் மீன்பிடி படகிலிருந்த மீனவரொருவர் திடீரென சுகயீனமுற்றுள்ளதாக மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் கடற்படைத் தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



அதற்கமைய உடனடியாக செயற்பட்ட கடற்படையினர், நோய் நிலைமையிலிருந்து மீனவரை சிகிச்சைக்காக கடற்கரை பிரதேசத்துக்கு அழைத்துவர தெற்கு கடற்படை நடவடிக்கை எடுத்துள்ளது, குறித்த நபர் மேலதிக சிகிச்சைகளுக்காக காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 'தினக்குரல்' பத்திரிகை உதவி ஆசிரியரின் தந்தை காலமானார்

தினக்குரல் உதவி ஆசிரியர் திருமதி எம்.எச்.எவ். ஹுஸ்னாவின் அன்புத் தந்தையார் ஷெய்குல் இஹ்ஸான் எம்.இஸட்.எம். ஹுஸைன் மௌலவி காலமானார்.



இஹ்ஸானிய்யா அரபுக் கல்லூரியின் மிக நீண்டகால அதிபராக கடமையாற்றிய அன்னார், இரு ஆண் பிள்ளைகள் மற்றும் நான்கு பெண் பிள்ளைகளின் தந்தையாவார்.

திஹாரியில் வைக்கப்பட்ட அன்னாரின் ஜனாஸா நேற்று (21) மாலை 4.30 மணிக்கு திஹாரியிலுள்ள மஸ்ஜிதுல் ரவ்லா ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## முந்தல் பிரதேசத்துக்கு புதிய உதவி பிரதேச செயலாளர் நியமனம்

**(ரஸீன் ரஸ்மின்)**

முந்தல் பிரதேச செயலகத்தின் புதிய உதவி பிரதேச செயலாளராக டபிள்யூ.ரி.எம்.எஸ்.பி.மல்வில நியமிக்கப்பட்டுள்ளார்.



முந்தல் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றிவந்த தேசானி ஹசந்திகா, மாதம்பை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இதனால், ஏற்பட்ட உதவி பிரதேச செயலாளர் வெற்றிடத்திற்கே டபிள்யூ.ரி.எம்.எஸ்.பி.மால்வில நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட்ட முந்தல் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், கடந்த வெள்ளிக்கிழமை (18) தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் முந்தல் பிரதேச செயலாளர் விஜானி வசந்திக்கா உட்பட பிரதேச செயலகத்திலுள்ள பிரிவுகளின் பிரதானிகள், உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## ஐந்து கட்டுத் துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது

( அநுராதபுரம் )

ஐந்து கட்டுத் துப்பாக்கிகளை வைத்திருந்த சந்தேக நபரொருவர் மதவாச்சி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று முன்தினம் மதவாச்சி துமிந்தேக பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு வீட்டிற்கு பின்னாலுள்ள காட்டுப்பகுதியில் மறைத்துவைத்திருந்த ஐந்து கட்டுத் துப்பாக்கிகள், வெடிமருந்து மற்றும் ஈயக்குண்டுகள் சிலவற்றையும் மதவாச்சி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

துமிந்தேகம பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கட்டுத் துவக்குகளை பயன்படுத்தி சந்தேகநபர் காட்டு மிருகங்களை வேட்டையாடி வந்துள்ளார் என்பது மேலதிக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் மதவாச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சிரேஷ்ட ஊடகவியலாளர் கமல் லியனாரச்சி காலமானார்

**(எம்.எஸ்.அமீர் ஹுசைன்)**

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சிங்கள மொழி மூல முறைப்பாட்டுப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த கமல் லியனாரச்சி நேற்று முன்தினம் (20ஆம்



திகதி) பயாகலையில் மாரடைப்பு காரணமாக காலமானார். அவரது இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கமல் லியனாரச்சி யுக்திய பத்திரிகை மூலம் ஊடக தொழிலை ஆரம்பித்து பின்னர் ராவய, லக்பிம ஆகிய பத்திரிகைகளில் ஊடகவியலாளராக கடமையாற்றியுள்ளார். 2005ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் முறைப்பாட்டு பொறுப்பதிகாரியாக சிங்கள மொழி மூல முறைப்பாடுகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட அவர், சிறிதுகாலம் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார்.

அத்துடன், சிறந்த ஊடகவியலாளரும் ஊடக பயிற்றுவிப்பாளரும் ஊடக ஆலோசகருமாவார். தெற்கின் பயாகலையை பிறப்பிடமாகக்கொண்ட கமல் லியனாரச்சி இரண்டு பிள்ளைகளின் தந்தையாவதோடு அவரது மனைவி கமனி லியனாரச்சியும் ஒரு சிறந்த ஊடகவியலாளராவார்.

## 'முல்லைத்தீவு முதல் புத்தளம் வரை' நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஞாயிறன்று

**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

முல்லைத்தீவு தண்ணீரூற்றைச் சேர்ந்த முஸ்தபா மன்ஸூர் (இளைய முஸ்தபா) எழுதிய "முல்லைத்தீவு முதல் புத்தளம் வரை தீனுடையானின் அனுபவப் பகிர்வு" நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 முதல் புத்தளம் பெருக்கு வற்றான் அல்-மின்ஹாஜ் முஸ்லிம் மஹா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

புத்தளம் காஸிமியா அரபுக்கல்லூரி அதிபரும் புத்தளம் மாவட்ட உலமா சபைத் தலைவருமான அஷ்ஷெய்க் அப்துல்லா மஹ்மூத் மதனியின் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் ஒமேகா கன்ஸல்டன் கம்பனி பிரைவேட் லிமிடெட் மற்றும் பி ஈ ஸிஎன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் அதிபர் அல்ஹாஜ் எம்.ஐ.எம்.நயீம் முதல் பிரதியை பெற்றுக் கொள்வார்.

அஷ்ஷெய்க் எம்.ஐ.கைஸர்கான் கபூரி வரவேற்புரை நிகழ்த்த புத்தளம் மன்ப உல் பெண்கள் அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம்.றியாஸ் தேவ்பந்தி வாழ்த்துரை வழங்குவார்.

சாமசிறி அல்ஹாஜ் அப்துல் சத்தார் மதனி கருத்துரையும் தாராபுரம் ஹாஜா அலாவுதீன் நூல் பற்றிய திறனாய்வு நிகழ்த்துவார்கள்.

வெள்ளாப்புவெளி வெளியிட்டுள்ள இந்நூல் பற்றிய வெளியீட்டுகையை முல்லை முஸ்லிமா வழங்க ஏற்புரையை நூலாசிரியர் முஸ்தபா மன்ஸூர் வழங்குவார்.

நிகழ்வை பெருக்குவற்றான் இளைஞர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது .

## இந்திய மீனவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 ஆண்டுகள் சிறை!

**(யாழ் நிருபர்)**

இந்திய மீனவர்களுக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்று 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கடந்த 31ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 21 இந்திய மீனவர்களை பருத்தித்துறை மீனவர்கள் சுற்றிவளைத்து பிடித்தனர்.

பருத்தித்துறை மீனவர்களிடம் இருந்து இந்திய மீனவர்களை மீட்ட கடற்படை அவர்களை கைது செய்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினார்கள்.

21 மீனவர்களையும் விளக்கமறியலில் தடுத்து வைக்க நீதாவன் உத்தரவிட்டார்.

இந்நிலையில் குறித்த வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது 21 மீனவர்களுக்கும் 3 ஆண்டுகளுக்கு சிறைத்தண்டனை விதித்த நீதவான், அதனை 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்துள்ளார்.

# நீதி மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைப்பு

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் கீழ் நீதி அமைச்சு , ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் ஆகியன இணைந்து இலங்கையில் நீதித் துறை மறுசீரமைப்பை நோக்காகக்கொண்டு செயற்படுத்துகின்ற 'நீதி மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்' உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று (21) நீதி அமைச்சில் இடம் பெற்றது.





இந்தப் புதிய நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிதியுதவியாக ஐரோப்பிய ஒன்றியத்தினால் 18 மில்லியன் யூரோ (இலங்கை மதிப்பில் ஏறத்தாழ 4 பில்லியன் ரூபா) மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைப்பால் ஒரு மில்லியன் யூரோவும் (இலங்கை மதிப்பில் ஏறத்தாழ 225 மில்லியன் ரூபா) வழங்கப்பட்டுள்ளதுடன், நீதித் துறையிலுள்ள சகல தரப்பினரதும் ஒத்துழைப்புடன் நான்கரை ஆண்டுகளினுள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

நீதிக்கான அணுகலை மேம்படுத்தும் நோக்கை அடிப்படையாகக்கொண்டு நடைமுறைப் படுத்தப்படும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக நீதித் துறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துதல், தரமான, வினைத்திறனான சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்துதல் ஆகியவை நீதி அமைச்சின் எதிர்பார்ப்பாவதுடன், இந் நிகழ்ச்சி நீதி அமைச்சின் மறுசீரமைப்புச் செயற்தொடரின் பிரதான நிகழ்ச்சித் திட்டமாக செயற்படுத்தப்படும். இதைத் தவிர இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக பெண்கள் மற்றும் சிறுவர்களின் நீதிக்கான அணுகலை மேம்படுத்தல், வர்த்தக விடயங்கள் தொடர்பிலான தகராறுகளைத் தீர்த்துவைக்கும் மாற்றீட்டுப் பொறிமுறைகளுக்கு உதவியளித்தல் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பப் பாவனையின் மூலம் நீதித்துறையின் செயற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்தல் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படும்.

வினைத்திறன் மற்றும் சுயாதீன நீதி அமைப்பைப் பேணிச் செல்வது இலங்கை குடியரசின் எதிர்காலத்துக்கான அடிப்படைத் தேவையாக அமைகிறது. சுயாதீன நீதித் துறையை உறுதிப்படுத்துவதுடன், சட்டத்தின் ஆதிக்கத்தைப் பாதுகாப்பதற்கும் இலங்கையின் நீதி வழங்கல் செயற்பாட்டை வலுப்படுத்த வேண்டுமெனவும், நவீன பொறிமுறை மற்றும் அபிவிருத்திப் பங்குதாரர்களின் ஒத்துழைப்பின்றி இந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வது சிரமமான பணியாகுமெனவும், இந்த உத்தேச நிகழ்ச்சித் திட்டம் அந்த நோக்கங்களை அடைவதற்கு எப்போதும் வழிவகுக்கும் எனவும், அதற்காக ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியமும் நீதி அமைச்சுடன் கைகோர்ப்பதில் தாம் மகிழ்ச்சி அடைவதாகவும், இந்நிகழ்வில் கலந்துகொண்ட நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.எம்.அலி சப்ரி தெரிவித்தார்.

நீதித் துறையின் மறுசீரமைப்புக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஈடுபாடு குறித்து கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைப், சமூக சகவாழ்வுக்காகவும், அரச மற்றும் பிரஜைகளுக்கிடையில் பரஸ்பர நம்பிக்கையை பலப்படுத்துவதற்காகவும், நவீன, வினைத்திறனான மற்றும் பரந்த நீதித் துறையைப் பேணிச் செல்வதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தினார். மேலும் இலங்கைக் குடியரசினதும், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தினதும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினதும் இணைவுடனான இந் நாட்டின் நீதித்துறையின் மறுசீரமைப்புக்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதெனவும், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டின் பெறுமதியின் ஊடாக அது தெளிவாகப் புலப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

இலங்கை நீதித்துறையின் நீண்டகால நம்பிக்கையான பங்குதாரராக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தினால் வழங்கப்படுகின்ற ஒத்துழைப்பை மேற்கோள் காட்டி கருத்துத் தெரிவித்த அதன் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி றொபட் ஜுஹ்காம் மக்களையும், அவர்களது தேவைகள் மற்றும் இயலுமைகளையும் மையப்படுத்திய கொள்கைகள், நிறுவகங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் நீதிக்கான அணுகலை மேம்படுத்துவதற்கு தேவையானவாறு JURE நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும் கூறுகையில், நீதித்துறையின் ஏற்புடைய அரச நிறுவனங்கள், சுயாதீன ஆணைக் குழுக்கள், தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகம் உள்ளிட்ட சகல தரப்பினருக்கும் நீதித்துறையின் மறுசீரமைப்புக்கான தேசிய முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் இணைந்து பணியாற்றுவதற்கும் உகந்த மேடையொன்றை வழங்குவதற்கு JURE நிகழ்ச்சித் திட்டத்துக்கு சாத்தியமாகக் கூடுமெனவும், இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக சர்வதேச நியமங்களையும் அவற்றின் உயர் பாவனையையும் உறுதிப்படுத்தி நீதி மறுசீரமைப்பை மேற்கொள்வனூடாக சமாதானம் நீதி மற்றும் வலுமிக்க நிறுவனம் தொடர்பான SDG-16 இலக்கை அடைவதற்கான இலங்கையின் முயற்சியை பலப்படுத்துவதற்கும் இயலும் எனவும் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கான நீதியை வழங்கும் செயற்பாட்டின் சட்ட வரையறையை மேம்படுத்துவதற்கான மறுசீரமைப்பை நடைமுறைப் படுத்தும்போது ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினால் முதன்மையான பணிகள் நிறைவேற்றப்படுவதுடன், இந்த உத்தேச நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக பாதிக்கப்பட்டவர்களாகவோ, சாட்சியாளர்களாகவோ அல்லது குற்றவாளிகளாகவோ இலங்கை நீதி வழங்கும் செயற்பாட்டில் சம்பந்தப்படும் சகல சிறுவர்களுக்கும் மிகவும் சிறந்த அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுமெனவும், அவ்வாறான சிறுவர்களுக்கு அவர்களின் சட்டச் செயற்பாடுகளுக்கான காலத்துக்குகந்த பொருத்தமான சட்ட உதவிகள் மற்றும் பெறுபேறுகள் கிடைக்குமெனவும், குறிப்பாக, அவர்களின் சீர்திருத்தத்துக்கு வாழ்க்கையில் மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்படுமெனவும், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் இலங்கை பிரதிநிதி கிருஸ்டின் ஸ்கூக் கூறினார்.

நீதி மறுசீரமைப்பு JURE நிகழ்ச்சித் திட்டம் புதிய மறுசீரமைப்பு, டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் நிறுவன மறுசீரமைப்பின் ஊடாக இலங்கை நீதித்துறையை நவீன, வினைத்திறனான மற்றும் விரிவான துறையாக மாற்றுவதற்குப் பங்களிப்பு வழங்குவதுடன் அதனூடாக சமூக சகவாழ்வை மேம்படுத்துவதற்கும், மிகவும் அமைதியானதும், நியாயமானதுமான இலங்கைச் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் வாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

# ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வு 28ஆம் திகதி ஆரம்பம்

## புதுப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான எழுத்துமூல சமர்ப்பணத்தை முன்வைக்கவும் தீர்மானம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வு எதிர்வரும் 28ஆம் திகதிமுதல் ஏப்ரல் முதலாம் திகதி வரை ஜெனீவாவில் நடைபெறவுள்ளது.

இந்த அமர்வின்'போது, புதுப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான எழுத்துமூல சமர்ப்பனத்தை ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் சபையில் முன்வைக்கவுள்ள அதேவேளை, மார்ச் 03ஆம் திகதி இலங்கை தொடர்பான ஊடாடும் உரையாடல் அமர்வொன்றும் இடம்பெறவுள்ளது.



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடருக்கான இலங்கைப் பிரதிநிதிகள் குழுவை வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வழிநடத்தவுள்ளார். இந்த விஜயத்தின்போது, பேரவையின் 49ஆவது அமர்வின் உயர்மட்டப் பிரிவில் உரையாற்றவுள்ள வெளிநாட்டு அமைச்சர், அதன்பின்னர் இலங்கை தொடர்பான ஊடாடும் உரையாடலில் உரையாற்றுவார். இந்த விஜயத்தின்போது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் முக்கியஸ்தர்களுடன் வெளிநாட்டு அமைச்சர் சந்திப்புகளில் ஈடுபடவுள்ளார்.

# புத்தளம் கிராமிய வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை

## பிரச்சினையை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்திலுள்ள பல கிராமிய வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை காணப்படுவதாகவும் அதனால் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் சுட்டிக்காட்டினார்.





புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னாகொட மற்றும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசோக பிரியந்த ஆகியோரின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், வைத்தியர்கள் பற்றாக்குறை தொடர்பில் சுட்டிக்காட்டினார்.

புத்தளம் கரைத்தீவு, உடப்பு மற்றும் கொத்தாந்தீவு உள்ளிட்ட பல கிராமிய வைத்திய சாலைகளில் வைத்தியர்கள் உட்பட ஆளணிப் பிரச்சினை காணப்படுகிறது எனவும் குறிப்பிட்டார்.

இன்னும் சில வைத்தியசாலைகள் வைத்தியர்களின்றி மூடப்பட்டிருக்கின்றன. இதனால், மக்கள் தமது மருத்துவ தேவைகளுக்காக நீண்ட தூரம் பயணிக்கவேண்டிய நிலை காணப்படுவதாகவும் கூறினார்.

எனவே, பொதுமக்கள் தமது மருத்துவ தேவைகளுக்காக வீதியில் இறங்கும்வரை பார்த்துக்கொண்டிருக்காமல் அவசரமாக வைத்தியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்ற வைத்தியசாலைகளுக்கு வைத்தியர்கள் உட்பட ஆளணிப் பற்றாக்குறைகளையும் நிவர்த்திசெய்ய மாகாண சுகாதார பணிப்பாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் முன்வைத்த வைத்தியசாலை பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்துவதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வாக்குறுதி அளித்தார்.

இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினர், சிந்தக மாயாதுன்ன, புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக், வடமேல் மாகாண பிரதம செயலாளர், பிரதேச செயலாளர்கள், புத்தளம் மாவட்ட செயலாளர் உட்பட அரச திணைக்கள உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# பெண்களின் பல்கலைக்கழக கல்வி வளர்ச்சி 61.5 வீதமாக அதிகரிப்பு

## கைரியா மகளிர் கல்லூரியின் 140ஆவது வருட நினைவு தின நிகழ்வில் அமைச்சர் அலி சப்ரி உரை





(அஷ்ரப் ஏ சமத்)

பெண்களின் பல்கலைக்கழக கல்வி வளர்ச்சி 61.5 வீதமாக அதிகரித்துள்ளதாக நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

தெமட்டகொடை கைரியா மகளிர் கல்லூரியின் 140ஆவது வருட நினைவு தின நிகழ்வுகள் கொழும்பிலுள்ள தாமரை தடாக திரையரங்கில் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இந்நிகழ்வுகள் கல்லூரியின் அதிபா நஸீரா ஹசனார் தலைமையில் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களின் 1100 ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றில் இலங்கை முஸ்லிம் மக்கள் பாதுகாப்புத்துறை, பொருளாதாரத்துறை, நீதித்துறை, யுனானி வைத்தியத்துறை, இன ஐக்கியத்தினைக் கட்டி வளர்த்தல் போன்ற சகல விடயத்திலும் பங்காற்றி வந்துள்ள வரலாறு உள்ளது.

கொழும்பிலுள்ள முஸ்லிம் பெண்களுக்கு மட்டுமல்ல, ஏனைய பிரதேச வாழ் முஸ்லிம் பெண்களுக்கும் கல்வியை பெற்றுக்கொடுத்து சாதனையாளர்களையும் புத்திஜீவிகளையும் உருவாக்கியதொரு வரலாறுகொண்ட பாடசாலையாக தெமட்டகொடை கைரியா விளங்குகின்றது. இக்கல்லூரியின் 140 வருட நீண்ட கால பயணத்தின் வரலாறுகளை இங்கு மீள அவதானிக்கும்போது அதன் வளர்ச்சி கண்டு முஸ்லிம்கள் பெருமையடைவதுடன், இக்கல்லூரி அபிவிருத்தியிலும் கல்வி அபிவிருத்தி முன்னேற்றத்திற்காகவும் தம்மை அர்ப்பணித்த சகலருக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இக்கல்லூரி 140 வருடகாலமாக ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளைக் கொண்டதொரு பாடசாலையாக இயங்கி வருகிறது. கொழும்பில் 140 வருட கால வரலாறு கொண்ட ஒரே ஒரு முஸ்லிம் பெண்கள் பாடசாலையாக கைரியா மகளிர் கல்லூரி மட்டுமே இருக்கமுடியும் என நம்புகின்றேன்.

இக்கல்லூரியை உருவாக்கிய பல சாதனையாளர்கள், பெண் தலைவிகள் சிறந்து விளங்கியுள்ளார்கள். இக்கல்லூரியின் மாணவிகள் மும்மொழிகளிலும் நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களுக்கும் மருத்துவத் துறை, முகாமைத்துவம், சட்டம், கலைத்துறைகளுக்கு சென்று தமது உயர்கல்வியைத் தொடர்கின்றார்கள். இதற்காக சிறந்த சேவையாற்றிய சகல ஆசிரியைகள் சகல அதிபர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

நாட்டில் வாழும் 99 வீதமான மக்கள் சகல இனங்களுடன் ஐக்கியத்துடனும் சகோதரத்துடனும் சமாதானமாகவும் வாழ்ந்துவருகின்றனர். பெண்களின் பல்கலைக்கழக கல்வி வளர்ச்சி 61.5 வீதமாக அதிகரித்துள்ளது. தற்பொழுது அரசியலைத் தவிர ஏனைய சகல துறைகளிலும் பெண்கள் முன்னேறி வருகின்றனர். இதேபோன்று முஸ்லிம் பெண்களும் கல்வியில் வளர்ச்சி கண்டு வருகின்றனர்.

அமெரிக்காவில் கூட கடந்த ஆண்டு பல்கலைக்கழகம் செல்லும் பெண்கள் 58 வீதமாக வளர்ச்சிகண்டுள்ளது. இதற்காக பெண்களது வளர்ச்சிக்கும் தலைமைத்துவத்திற்கும் ஆண்கள்தம்மாலானசகல ஒத்துழைப்பினையும் நல்கவேண்டும். கொரோனா தொற்று பரவல் தீவிரமடைந்து காணப்பட்ட காலகட்டத்தில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்திருந்தோம். இன்றும் அதிலிருந்து விடுபடவில்லை.

அதற்காக உலக நாடுகள் பல மருந்துகளையும் தடுப்பூசிகளையும் கண்டுபிடிப்பிற்காக ஆராய்ச்சியில் இறங்கின. நாம் நமது குடும்பங்களை வேறாக்கி வாழப் பழகிவிட்டோம் காலத்தின் மாற்றத்திற்கேற்ப நாம் நம்மை மாற்றிக்கொண்டு வாழப் பழகிக்கொள்ளுதல் வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கும் துருக்கி தூதுவருக்கும் இடையில் சந்திப்பு

## இருத் தரப்பு உறவுகளை மேற்படுத்துவது தொடர்பில் விசேட கவனம்

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான துருக்கி தூதுவரான ரகீபீ டேமேட் சேகிர்ஜிஓலு (Rakibe Demet Sekerciolu) மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு அண்மையில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது.





இதன்போது, இலங்கை மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கிடையில் வரலாற்று ரீதியாக முன்னெடுக்கப்பட்டுவரும் கலாசார தொடர்கள் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலாள பொருளாதார அரசியல் மற்றும் பாதுகாப்பு தொடர்புகளை மேம்படுத்துவதற்கு காணப்படும் வாய்ப்புகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. அதேபோன்று, இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக்கு துருக்கி தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குமென துருக்கி தூதுவர் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கிடையில் நிலவும் தொடர்புகளை தொடர்ந்து பேணுவதற்கு இதுவோரு சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# முஸ்லிம் மக்களின் சமகால பிரச்சினைகள் தொடர்பில் புத்திஜீவிகளுக்கிடையில் ஆராய்வு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

சம காலத்தில் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளையும் ஆராயும் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் (20) கம்பஹா புத்திஜீவிகள் அமைப்பினால் கொழும்பு இஸ்லாமிக் சென்டரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி 3ஆவது கலந்துரையாடலில் மிக ஆக்கப்பூர்வமான கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. குறிப்பாக சம காலத்தில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளையும் ஆராய்ந்து அவற்றுக்கு முகங்கொடுத்து எமது உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று கொள்ள முற்படுவதுடன், பாதுகாப்பதுமே இவ்வமைப்பின் முக்கிய குறிக்கோளாகும்.

ஏற்கனவே இரு கூட்டங்கள் கம்பஹா மாவட்டத்தில் மல்வானையிலும் கஹட்டோவிட்டயிலும் நடைபெற்றுள்ளதுடன் கொழும்பு மாவட்டத்தில் இந்த மூன்றாவது கூட்டம் நடைபெற்றது.

ஆரம்பமாக மேல் மாகாணத்தில் இவ் அமைப்பை உருவாக்கி எதிர்காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இவ்வாறான கலந்துரையாடல்களை நடத்தி எமது சமூகம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதே இவ்வமைப்பின் முக்கிய நோக்கமாகும். இந்தக் கூட்டத்தின் முடிவுகள் அது சம்பந்தமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் காலகட்டத்தில் அமைப்பினால் ஊடகங்களில் வெளியிடப்படும் எனவும் அமைப்பின் ஏற்பாட்டாளர் முஸம்மில் ஹாஜி தெரிவித்தார்.



குறித்த கலந்துரையாடலில் முக்கிய சில துறைசார்ந்தவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் திருமணம் – விவாகரத்து என்பன தனியார் சட்டத்தால் ஆளப்பட வேண்டும்





(ரஸீன் ரஸ்மின்)

## புத்தளத்தில் பெண்கள் ஆர்ப்பாட்டம்

இலங்கையின் முஸ்லிம் தனியார் சட்டங்கள் தொடர்பான கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் (20) புத்தளம் - கொழும்பு முகத்திடலில் இடம்பெற்றது.

புத்தளத்திலுள்ள மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள், பெண்கள், யுவதிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்த கவனயீர்ப்பில் கலந்துகொண்டனர்.

தனியார் சட்டம் (முஸ்லிம் திருமண, விவாகரத்து சட்டம்) எமது அடிப்படை உரிமை எனும் தொனிப்பொருளில் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, "முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து தனியார் சட்டத்தால் ஆளப்பட வேண்டும்", "சிறுபான்மையினரின் மத சுதந்திரத்தை அழிக்காதே", "முஸ்லிம்களின் திருமண சட்டம் அடிப்படை உரிமை", "தனியார் சட்டத்தை நீக்குவது யாப்புக்கு முரண்பாடானது" இதுபோன்ற மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இலங்கையில் முஸ்லிம் தனியார் சட்டமானது மக்களின் நேசத்தை வென்ற தலைவர்களால் போராடி பெறப்பட்டதாகும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்த சட்டங்களை பற்றியும் அவற்றை சட்டமாக்கிய தலைவர்கள் பற்றியும் இன்றும் உலகில் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

இச்சட்டங்களே இலங்கை பல மதங்களை கொண்ட மனிதர்கள் வாழும் பன்முக கலாசார நாடாக உலகில் பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இந்தச் சட்டத்தை முழுமையாக இல்லாமலாக்க வேண்டும் என்று ஒரு தரப்பினரும், சில மாற்றங்களை செய்ய வேண்டும் என்று இன்னொரு தரப்பினரும் தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன், இதுதொடர்பில் ஒருசில அரசசார்பற்ற அமைப்புகள் ஒன்றிணைந்து, முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பில் பிழையான கருத்துகளை எடுத்துரைத்து அதனை முழுமையாக இல்லாமல் செய்யவேண்டும் என்ற வகையில் ஜெனீவாவுக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்துள்ளனர்.

எனவே, முஸ்லிம் தனியார் சட்டத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தப்பட வேண்டுமே தவிர, அதனை முழுமையாக இல்லாமல் செய்வதற்கு ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து, சர்வதேச மனித உரிமைகள் இயக்கங்கள் அமைப்பின் இலங்கைக்கான ஊடக ஒருங்கிணைப்பாளர் மஹ்ரூப் முஹம்மது ரிஸ்வியிடம் மகஜர் ஒன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



தமிழர்கள அடக்கத்தானாம் பயங்கரவாத தடைச்சட்டம் எண்டு வெட்கம் இல்லாம சந்திரிகா அம்மணி இப்ப கொக்கரிக்காவு எலுவா அவ ஜனாதிபதியாக இருந்த காலத்திலதானே நவாலி தேவாலயம் தொடக்கம் செம்மணி வரையும் எம்மாத்திரம் தமிழர கொலைசெய்ததும், நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள சிறையில் தள்ளினவ..பயங்கரவாததட சட்டத்த வைத்தித்து என்ன கூத்துக்காட்டினவ.. இப்ப ஏதோ உத்தமி மாதிரி தமிழருக்காக் முதல கண்ணீர் வடிக்கிறாவு!

# பயங்கரவாதத் தடைச் சட்டம் காட்டுமிராண்டித்தனமானது

## கல்முனை மாநகர முதல்வர் றகீப்

(பாறுக் ஷிஹான்)

பயங்கரவாதத் தடைச் சட்டமானது உண்மையிலேயே காட்டுமிராண்டித்தனமானது. மனிதகுலத்திற்கு தேவையற்றதாகும் - என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

கல்முனை பகுதியில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக்கோரி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணைச் செயலாளர் அ.நிதான்சன் தலைமையில் இடம்பெற்ற கையெழுத்து சேகரிப்புத் திட்டத்தில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

இந்த கையெழுத்து சேகரிப்புத் திட்டமானது இலங்கையில் காணப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாமல் செய்வதற்காகவேயாகும். பயங்கரவாதச் தடைச் சட்டமானது 1979ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது என்பதுடன், அது உண்மையிலேயே ஒரு காட்டுமிராண்டித்தனமான



சட்டமாகும். ஐக்கிய நாடுகள் சபையில் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் பட்டயத்தில் கூறப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் எதிராக கூறப்பட்ட சட்டமாகும். மனிதகுலத்திற்கு தேவையற்றதாகும். இயற்கை நீதி விதி கோட்பாட்டிற்கு எதிரான ஒரு சட்டம். இந்த சட்டத்தின் ஊடாக ஒருவர் கைதுசெய்யப்பட்டால் தன்னுடைய கருத்தை சொல்வதற்கு எந்த வாய்ப்பும் அவருக்கு கிடையாது எனக் குறிப்பிட்டார்.

மேலும் இந்த கையெழுத்து சேகரிப்பு திட்டத்தில் அம்பாறை மாவட்ட த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாவட்ட அமைப்பாளரும் காரைதீவு தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினரும் முன்னாள் மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் முன்னாள் செயலாளர் நாயகமும் தற்போதைய உப தலைவருமான ஹென்றி மகேந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் தலைவர் எஸ்.சேயோன், தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் கல்முனை மாநகர சபை முன்னாள் எதிர்கட்சித் தலைவருமான குஞ்சுத்தம்பி ஏகாம்பரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்களான அழககோன், விஜயரட்ணம், சோ.குபேரன், தி.இராசரட்ணம், சந்திரசேகரம் ராஜன், சிவலிங்கம், சமூகசேவகர் தாமோதரம் பிரதீபன் உள்ளிட்ட பிரமுகர்கள் கையெழுத்திட்டனர்.

அத்துடன், உங்கள் ஒவ்வொருவரினதும் கையொப்பங்களும் உங்கள் பாதுகாப்புக் கானதும் உங்கள் சந்ததியின் பாதுகாப்புக் கானதுமாகும் என இதில் கலந்துகொண்டவர்கள் தத்தமது உரையில் குறிப்பிட்டனர்.

வீழயோவைக் காண...

# மட்டு. மீராவோடை முன்பள்ளி மாணவர்களுக்கு பிரியாவிடை

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட மீராவோடை கிராமத்தில் தாருல் ஹுதா முன்பள்ளியின் 31ஆவது மாணவர் வெளியேற்று விழா அதன் நிர்வாகத் தலைவர் எம்.எல்.எம்.சலாஹுதீன் தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் கலந்து சிறப் பித்தார்.

விசேட அதிதியாக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சாஜஹான் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும்



கலந்துகொண்டனர். இதன்போது மாணவர்களின் விசேட கலை, கலாசார நிகழ்வுகள் பலரது கவனத்தையும் ஈர்த்ததுடன் தவிசாளரின் சொந்த நிதியிலிருந்து இம்மாணவர்களுக்கான நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

## கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

# கிழக்கு சுகாதார அமைச்சின் புதிய செயலருக்கு கல்முனை சுகாதார பணிமனையில் வரவேற்பு





(சாய்ந்தமருது நிருபர்)

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி ஜே.ஜே.முரளிதரனை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வும் சுகாதார நிறுவனங்களின் செயற்றிட் டங்கள் மற்றும் கருத்திட்டங்களை மீளாய்வு செய்யும் கூட்டமும் நேற்று (21) கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றன.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் விசேட அதிதியாக கலந்துகொண்டார்.

இதன்போது மாகாண சுகாதார அமைச்சின் புதிய செயலாளர், நினைவுச்சின்னங்கள் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் அண்மையில் வெளியிடப்பட்ட அரண் காலாண்டு சஞ்சிகையும் அவருக்கு வழங்கப்பட்டது.

அத்துடன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான பிரிவு மற்றும் சுகாதார தகவல் ஊடகப் பிரிவு என்பன மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் திறந்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.எம்.வாஜித், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹிர் உட்பட வைத்திய அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

# களுவாஞ்சிக்குடியில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுப்பு



(பாண்டிருப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரின் வழிகாட்டலில் களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியின் ஏற்பாட்டில் மாபெரும் தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டம் நேற்று (21) களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

கொவிட்-19 தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டை நிறைவுசெய்ய இது ஒரு பொன்னான சந்தர்ப்பம் எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற தடுப்பூசி ஏற்றும் நிகழ்வில் களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிராந்தியத்திற்குட்பட்ட 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்களுக்கான தடுப்பூசியினைப் பெற்றுக்கொண்டனர்.

களுவாஞ்சிக்குடி பிராந்தியத்தில் துறைநீலாவணை, பெரியகல்லாறு, கோட்டைக்கல்லாறு, ஒந்தாட்சிமடம், மகிழூர், குருமண்வெளி, எருவில், பட்டிருப்பு, களுவாஞ்சிக்குடி, களுதாவளை, தேற்றாத்தீவு, மாங்காடு, செட்டிபாளையம், குருக்கள்மடம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் தங்களுக்கான கொவிட்-19 தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இங்கு இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளா தவர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது, அத்துடன் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டு மூன்று மாதங்கள் பூர்த்தியானவர்களுக்கான பைசர் தடுப்பூசியும் ஏற்றப்பட்டன. களுவாஞ்சிக்குடி பிராந்தியத்தில் இதுவரை 22 ஆயிரத்து 187 பேருக்கு மூன்றாவது பைசர் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதாகவும், தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் விரைந்து தங்களுக்கான தடுப்பூசிகளை பிராந்திய சுகாதாரப் பணிமனையில் பெற்றுக்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# மாவடிவேம்பில் சௌபாக்கியா உற்பத்திக் கிராமம் திறந்துவைப்பு





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்பட்ட மாவடிவேம்பு கிராம உத்தியோகத்தர் பிரிவானது சௌபாக்கியா உற்பத்திக் கிராம திட்டத்தின்கீழ் பிரம்புசார் உற்பத்தி கிராமமாக பிரதேச செயலகத்தினால் தெரிவுசெய்யப்பட்டு 0.9 மில்லின் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பிரம்பு உற்பத்திக்கான பொதுக்கட்டடம் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் நேற்று முன்தினம் (20) ஞாயிற்றுக்கிழமை மாலை திறந்துவைக்கப்பட்டதுடன், தெரிவுசெய்யப்பட்ட 45 பிரம்பு கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு துவிச்சக்கரவண்டி மற்றும் பிரம்பு உற்பத்திக்கான பொருட்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

செங்கலடி பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார்.

இத்திட்டத்திற்காக லிப்ட் தன்னார்வ தொண்டு நிறுவனம் பாரிய பங்காற்றியிருந்ததுடன், இந்நிகழ்வில் லிப்ட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி ஜானு முரளிதரன் கலந்துகொண்டிருந்ததுடன், பொதுமக்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# இளைஞர்களுக்கு முரண்பாட்டு நிலைமாற்றத்துக்கான பன்மைத்துவ செயற்பாடு தொடர்பான பயிற்சிநெறி





(மட்டக்களப்பு நிருபர்)

இளைஞர், யுவதிகளான இளந்தலைவர்களுக்கு முரண்பாட்டு நிலைமாற்றத்துக்கான பன்மைத்துவ செயற்பாடு எனும் பயிற்சிநெறி மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தனியார் விடுதியில் நேற்று (21) இடம்பெற்றது.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையில் இந்நிகழ்வு ஏற்பாடுசெய்யப் பட்டிருந்தது. தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதக் குழு இணைப்பாளர் ஆர்.மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த வேறுபட்ட இளைஞர் அமைப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 40 இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர்.

இனவாத அடிப்படையிலான வன்முறைகளைத் தவிர்த்தல், வெறுப்புப் பேச்சு, அஹிம்சை வழிச் செயற்பாடுகள் உள்ளிட்ட தொனிப்பொருள்களில் விளக்கவுரைகளும் செயன்முறைப் பயிற்சிகளும் இங்கு இடம்பெற்றன. பயிற்சிநெறியில் வளவாளர்களாக பி.பெனிகஸ் மற்றும் ரீ.சில்வயன் ஆகியோர் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

பழைமைவாதத்தையும், வன்முறை சார்ந்த மனப்பாங்குகளையும் தவிர்த்துக்கொண்டு புதிய போக்கில் இயல்பான வாழ்க்கை முறையினூடாக சமாதான சகவாழ்வைக் கட்டியெழுப்புவதன் அவசியம் இந்தப் பயிற்சிநெறியினூடாக வலியுறுத்தப்பட்டது. பயிற்சிநெறியில் பங்குபற்றிய தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் முற்றிலும் சமாதான சகவாழ்வுக்கான புதிய போக்கில் தமது சிந்தனைக் கருத்துக்களை வெளிப்படுத்தியதாகபயிற்சியளித்த வளவாளர்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதக்குழு உதவி இணைப்பாளர் எம்.ஐ.அப்துல்ஹமீட் உட்பட இளைஞர், யுவதிகளின் பெற்றோரும் கலந்துகொண்டனர்.

# கிழக்குப் பல்கலை உபவேந்தர் கனகசிங்கத்துக்கு மட்டக்களப்பு கிரான்குளத்தில் கௌரவிப்பு விழா





(வெல்லாவெளி நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 10ஆவது உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள கிரான்குளம் மண்ணின் மைந்தன் பேராசிரியர் வ.கனகசிங்கத்தை கௌரவிக்கும் கௌரவிப்பு விழா கிரான்குளம் தனியார் விடுதியில் தலைமை விழாக் குழுத்தலைவரும், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரான எஸ்.புவனேந்திரனின் தலைமையில் இடம்பெற்றது.

இதன் ஆரம்ப நிகழ்வு கிராங்குளம் பிரதான வீதியிலிருந்து மலர்மாலைகள் அணிவித்து ஆரம்பக் கல்வியை கற்ற பாடசாலையான விநாயகர் வித்தியாலயம் வளாகத்திலுள்ள சரஸ்வதி சிலைக்கு மலர்மாலை போடப்பட்டு தொடர்ந்தும் இதன் பிரதான நிகழ்வு கிராங்குளம் தனியார் விடுதியில் இடம்பெற்றபோது ஒவ்வொரு அதிகாரிகளும் அவரை பாராட்டி கௌரவப்படுத்தி அவரின் சிறப்பு, பண்பு, ஆளுமை என பல கருத்துகளை புகழாரம் சூடி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது 10ஆவது உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள இவரை கலாநிதி சி.அமலநாதன் பாராட்டியதோடு அவரின் மூன்று வருட காலத்தில் பேராதெனிய பல்கலைக்கழகத்தை எல்லா வசதிகளுமுள்ள பல்கலைக்கழகத்தை போன்று கிழக்கு பல்கலைக்கழகம் எல்லா வசதிகளையும்போன்று தரம் உயர்த்தப்பட்டு தேசிய பல்கலைக்கழகமாக மாற்றப்பட வேண்டும் என்று பொறுப்பளிக்கப்பட்டது என்பதை தனது உரையில் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டுள்ள பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு, சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி சி.அமலநாதன் பிரதம அதிதியாகவும், கிழக்கு பல்கலைக்கழகம் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோர்ன்ஸ் பாரதி கென்னடி மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அ.பகீரதன் சிறப்பு அதிதிகளாகவும், பிரதேச சபை உறுப்பினர்கள் கௌரவ அதிதிகளாகவும் ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர், களுதாவளை சுயம்பிலிங்கப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.பாஸ்கரன் மற்றும் கல்வி மான்கள் கிராமமட்ட அமைப்புகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

பிரதம அதிதி கலாநிதி சி.அமலநாதனின் தந்தையார் கிரான்குள மண்ணின் சொந்தக்காரன் என்ற வகையில் அவரின் ஞாபகார்த்தமாக க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளை பெற்று சித்தியடைந்து அவர் எதிர்கால கல்வி வளர்ச்சிக்காக நினைவுப்பரிசும் ரூபா 10,000 பெறுமதியான காசோலைகளும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மனித உரிமைகள் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பில் திருமலையில் செயலமர்வு





(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலையில் 'நீதிக்காக எங்கள் குரல்' எனும் தொனிப்பொருளில் பெண்களினால் முன்னெடுக்கப்படுகின்ற மனித உரிமைகள் மேம்பாட்டுj; திட்டம் தொடர்பான செயலமர்வொன்று இடம்பெற்றது.

திருகோணமலை கல்லூரி வீதியில் அமைந்துள்ள ஜுப்லி மண்டபத்தில் இன்று (21) கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மதிவண்ணனின் தலைமையில் இடம்பெற்றது.

இச்செயலமர்வு விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் திருகோணமலை மாவட்ட பெண்கள் சமாசம், அமரா பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் மற்றும் இளையோர் தன்னார்வ அமைப்பினரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாட்டின் ஏனைய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள விசேட தேவையுடையவர்களுக்கான ஆற்றுபடுத்தல் மையம் திருகோணமலை மாவட்டத்தில் இல்லை எனவும் வைத்தியசாலைகளில் விசேட தேவையுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லை மற்றும் அண்மையில் அரசினால் வழங்கப்பட்ட வேலை வாய்ப்பில் விசேட தேவையுடையவர்கள் அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்பட்டமை, மாற்று திறனாளிகளுக்கான ஒரு தனியான ஆணைக்குழு அமைக்கப்பட்டு அவர்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் எனபன நாட்டில் நிலவுகின்ற பாரபட்சம் தலைதூக்கியுளமை தொடர்பில் ஆய்வுகள் மூலம் சேகரிக்கப்பட்ட பிரச்சினைகள் அதற்கான தீர்வுகளும் அடங்கிய ஆய்வு அறிக்கை ஒன்று குறித்த அமைப்புகளினால் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மதிவண்ணனிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் சுகந்தினி விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் உறுப்பினர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாணக் கல்வித்துறையில் அரசியல் தலையீடு அதிகரித்துள்ளது

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு!

வீடியோவைக் காண...

(கல்லடி நிருபர்)

கிழக்கு மாகாணக் கல்வித்துறையில் அரசியல் தலையீடுகள் பாரிய பிரச்சினையாகவுள்ளன - என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் கடந்த சனிக்கிழமை (19) நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது,

கிழக்கு மாகாணத்தின் கல்விச் செயற்பாடுகள் ஏனைய ஒன்பது மாகாணங்களை விட, விசேடமான முறையில் அமுல்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக அதிபர்கள், ஆசிரியர்கள் பல்வேறு



பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பில் பல தடவைகள் கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்கு வலயக்கல்விப் பணிப்பாளர்களினால் கொண்டுசெல்லப்படுகின்றபோதிலும் எந்தவித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதில்லை.

இதற்கான முக்கிய காரணமாக காணப்படுவது அரசியல் தலையீடாகும். கிழக்கு மாகாணக் கல்வித்துறையில் காணப்படும் அரசியல் தலையீடு என்பது பாரிய பிரச்சினையாகவுள்ளது.

இதற்குப் பின்னணியில் யார் யார் உள்ளனர்? என்பது எமக்குத் தெரியும். வலயக்கல்விப் பணிப்பாளர்கள் நியமனம் மற்றும் அதிபர்கள் நியமனங்களின்போது உரிய தகைமையுள்ளவர்களுக்கு வழங்கப்படாமல் அல்லது நியமனக் கொள்கைகளுக்கு மாறாக நியமனங்கள் வழங்கப்படுகின்றன. அதிபர்கள், ஆசிரியர்கள் இடமாற்றங்கள் தொடர்பிலும் இவ்வாறான பிரச்சினைகள் உள்ளன.

அரசியல்வாதிகளுக்குத் தேவையான விதத்திலேயே இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தச் செயற்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. கல்வியை ஜனநாயக முறையில் கொண்டுசெல்ல வேண்டும். பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுவதற்காக நியமனம் செய்யப்படுகின்றவர்களும் இன்று அரசியல் ரீதியாகவே நியமிக்கப்படுகின்றனர்- என்றார்.

# Toast Masters International அமைப்பின் 2022 புதிய நிறைவேற்று உறுப்பினர்களின் நியமனம்

### தென்கிழக்குப் பல்கலை உபவேந்தர் றமீஸால் வழங்கிவைப்பு



(நூருல் ஹுதா உமர்)

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தை அமுல்படுத்தும் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் எண்ணக்கருவில் உருவான பல்கலைக்கழகத்திற்கும், சமூக கல்வி நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்பினை இணைத்தலின் 11ஆவது அங்கம் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் கடந்த சனிக்கிழமை (19) முற்பகல் தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்துகொண்டு சர்வதேச Toast masters அமைப்பைப் பற்றி கருத்து தெரிவிக்கையில்,

Toast Master இன்டர்நேஷனல் அமைப்பானது, 1924இல் உருவாகியது. இந்நிறுவனம் அமெரிக்காவை தலைமை மையமாகக்கொண்டு இயங்குகின்றது. தலைமைத்துவம், பேச்சுத்திறமை போன்றவற்றையும் மேம்படுத்துகின்ற நோக்கில் இயங்குகின்ற கல்வி அமைப்பாகும். இவ்வமைப்பானது 150இற்கும் மேற்பட்ட நாடுகளில் தமது கழகங்களை கொண்டுள்ளதுடன், இலங்கையில் 200இற்கும் மேற்பட்ட கழகங்களைக்கொண்டு காணப்படுகிறது. ஆனால், கிழக்கிலங்கைக்கு 2019இலிருந்து அறிமுகமானதுடன், தற்போது மூன்று கழகங்கள் காணப்படுகின்றன.

இம்மூன்று கழகங்களாவன அம்பாறை - (Ampara Toast masters Club), மட்டக்களப்பு - (Batticaloa Toast masters Club), தென்கிழக்கு - (South Eastern Toast masters Club) ஆகும் எனக் குறிப்பிட்டார். இந்நிகழ்வின் இறுதியில் Toast masters International அமைப்பின்-2021/2022 ஆண்டுக்கான புதிய நிறைவேற்று உறுப்பினர்களுக்கு நியமனங்கள் கையளிக்கும் நிகழ்வுகள் உபவேந்தர் தலைமையில் இடம்பெற்றன. Toastmasters International நிறுவனத்தின் இலங்கைக்கான உயர் அதிகாரி மற்றும் நிர்வாகச் சபையின் உறுப்பினர்கள் இணைந்து உபவேந்தருக்கு நினைவுச்சின்னமொன்றைக் கையளித்தனர்.

இந்நிகழ்வுக்கு கௌரவ அதிதியாக Toast masters - Sri Lankaவின் (District 82) இலங்கைக்கான உயர் அதிகாரிகள், பல்கலைக்கழக பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# கிழக்கில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு; கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகளும் தீவிரம்

(காரைதீவு நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் சில தினங்களாக உல்லாசப் பயணிகளின் வருகை வெகுவாக அதிகரித்து காணப்படுவதுடன் பூட்டப்பட்டிருந்த பல உல்லாச ஹோட்டல்கள் புதுப்பொலிவுடன் திறக்கப்பட்டு வருகின்றன.

கடந்த பல வருடங்களாக நிலவிய அசாதரண சூழ்நிலை காரணமாக உல்லாசப்பயணிகளின் வருகை மிகவும் அரிதாக காணப்பட்டது. கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் பணிகள் இடம்பெற்று வருவதால் கொவிட்-19 தொற்று குறைந்த சூழல் உருவாகியுள்ளதாலேயே உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்திபெற்ற பாசிக்குடா கடற்கரைக்கும் தினந்தோறும் உள்ளூர், வெளியூர் உல்லாசப் பயணிகள் பெருமளவில் வருகை தருவதுடன் விடுமுறை தினங்களில் இத்தொகை அதிகரித்து காணப்படுகின்றது.

இவ்வாறே அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் அறுகம்பை, உல்லை ஆகிய பகுதிகளுக்கும் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துக் காணப்படுவதுடன் இங்கு நிறுவப்பட்டு மூடப்பட்ட நிலையில் உள்ள உல்லாச ஹோட்டல்கள் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் திறக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பிரதேச மக்களின் பொருளாதார நிலையானது வளர்ச்சியடைந்துகொண்டு வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளர் கடமைகளை பொறுப்பேற்பு



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் இராஜாங்க அமைச்சின் செயலாளர் கடமைகளை நேற்று (21) பொறுப்பேற்றார்.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய சமன் தர்சன பாண்டிகோராள கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுபோக பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அதனோடு இணைந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் புதிய செயலாளராக கடந்த 18ஆம் திகதி ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டார்.

நேற்று திங்கட்கிழமை சமய ஆசீர்வாதங்களுக்கு மத்தியில் தம் கடமைகளை கொழும்பு சுகுருபாயவில் அமைந்துள்ள இராஜாங்க அமைச்சில் சுபநேரத்தில் பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சின் அதிகாரிகள், திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், திருகோணமலை மாவட்ட பிரதம கணக்காளர் எஸ்.பரமேஸ்வரன், மாவட்ட செயலக நிர்வாக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ்.குருகுலசூரிய, சக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஓட்டமாவடி முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாசலில் இரத்ததான முகாம்





(கல்குடா நிருபர்)

ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள சமூக விழிப்புணர்வு ஒன்றியம், கல்குடா டைவர்ஸ், நியாஸ் ஹாஜியார் பவுண்டேசன் ஆகிய அமைப்புகளின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் ஓட்டமாவடி முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.டீ.டீ.நிலங்க, வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார, ஓட்டமாவடி வர்த்தக சங்கத் தலைவர் ஏ.ஜி.நியாஸ் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர் எஸ்.விருஷ் தலைமையிலான மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு இரத்த தானத்தினை திறம்பட மேற்கொண்டனர்.

இதில் ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள பெரும்பாலான மக்கள் கலந்துகொண்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்திசெய்யும் வகையில் இரத்த தானம் வழங்கினர்.

# புகையிரதம் மோதியதில் பெண்ணொருவர் பலி

### சந்திவெளியில் சம்பவம்

(மீராவோடை நிருபர்)

புகையிரதம் மோதியதில் பெண்ணொருவர் மரணமடைந்துள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் (20) இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி சென்றுகொண்டிருந்த புகையிரதம் சந்திவெளி பகுதியில் வைத்து பெண்ணொருவர்மீது மோதியதில் அப்பெண் மரணித்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மரணமடைந்துள்ள பெண் தொடர்பான விபரங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்றும், அப்பெண் 40 வயது மதிக்கத்தக்கவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மரணமடைந்த பெண்ணின் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இந்த சம்பவம் விபத்தா? தற்கொலையா? எனும் கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஆயித்தியமலை தூய சதா சகாய அன்னையின் மாசி மாத திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவு




(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பிரசித்திபெற்ற திருத்தலமான ஆயித்தியமலை தூய சதா சகாய அன்னையின் மாசி மாத திருவிழா நேற்று முன்தினம் (20) ஞாயிற்றுக்கிழமை கொடியிறக்கத்துடன் நிறைவுபெற்றது.

தூய சதாசகாய அன்னையின் திருத்தலத்தின் மாசி மாத திருவிழா கடந்த 16ஆம் திகதி பங்குத்தந்தை அருட்பணி இருதயநாதன் ஜெமில்டன் அடிகளார் தலைமையில் கொடி ஏற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து நவநாட் திருவிழா வழிபாடுகள் இடம்பெற்றன.

கடந்த சனிக்கிழமை காலை மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி அலெக்ஸ் றொபட் அடிகளார் தலைமையில் நற்கருணை மற்றும் உறுதிப்பூசுதல் திருச்சடங்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன், அன்றைய தினம் மாலை நற்கருணை எழுந்தேற்றம் அருட்பணி ரமேஸ் கிறிஸ்டி அடிகளாரினால் வழிநடத்தப்பட்டிருந்தது.

அன்னையின் திருவிழா கூட்டுத் திருப்பலி அருட்பணி லெபோன் சுதன் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அன்னையின் திருச்சொரூபத்தினை தாங்கியவண்ணம் ஆலயத்தின் உள்வீதி வலம்வந்தது. அன்னையின் ஆசீரைத் தொடர்ந்து, பங்குத்தந்தை இருதயநாதன் ஜெமில்டன் மற்றும் பங்கு மக்களால் கொடியிறக்கம் நிகழ்வு இடம்பெற்றதையடுத்து இவ்வருட மாசி மாத திருவிழா நிறைவுபெற்றது.

கொவிட் சூழ்நிலையினைக் கருத்திற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான குருக்கள் மற்றும் துறவியர்கள் அடங்கலான பக்தர்களின் பிரசன்னத்துடன் இவ்வாண்டு ஆலய திருவிழா இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாணி அறநெறிப் பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய நிர்வாகத்தினரின் வேண்டுகோளை ஏற்று மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பு வாணி அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு அறநெறிக் கல்வியை மேம்படுத்தும் முகமாக 100 மாணவர்களுக்கு எமக்காக நாம் அமைப்பின் ஊடாக நேற்று முன்தினம் (20) கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

எமக்காக நாம் அமைப்பின் தலைவர் லோ.தீபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதன் இணைப்பாளர்களான நே.பிருந்தாபன் (இந்துகலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், வாழைச்சேனை), மேகராஜ், ஆலயத் தலைவர் தலைவர் லோகிதராஜா மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் சரியை தொண்டர் அமைப்பின் தலைவர், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், வாணி அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு கற்றல் உபகரணங்கள் வழங்கினர்.

# மருதமுனை கைத்தறி உற்பத்தி நிலையத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் விஜயம்



(மருதமுனை நிருபர்)

கல்முனை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.முகர்ரபின் அழைப்பின்பேரில் மருதமுனைக்கு வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான், 4G Handloom கைத்தறி உற்பத்தி நிலையத்தை அண்மையில் பார்வையிட்டார்.

இங்கு நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பதுறுஸ்மான் பஹத்ஸமானிடம் கைத்தறி நெசவாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாகவும், மூலப்பொருட்கள் தட்டுப்பாடு காரணமாகவும் உற்பத்தியிலும், விற்பனையிலும் பெரும் வீழ்ச்சி காணப்படுவதாக இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் கைத்தறி உற்பத்திப் பொருட்களையும் பார்வையிட்டு கொள்வனவு செய்தார்.

# பொத்துவிலில் கொரோனா தடுப்பூசி வழங்கிவைப்பு

(பொத்துவில் நிருபர்)

பொத்துவில் பிரதேசத்தில் கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.யூ.அப்துல் சமட்டின் மேற்பார்வையின்கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பொத்துவில் ஆதார வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், அல்-ஹுதா வித்தியாலயம் ஆகிய தடுப்பூசி வழங்கும் நிலையங்களில் நேற்று (21) தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கும், பூஸ்டர் தடுப்பூசியினை பெற்றுக்கொள்வோருக்குமே குறித்த நிலையங்களில் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக்கோரி மட்டக்களப்பில் கையொப்பம் சேகரிக்க அழைப்பு

(வீரமுனை நிருபர்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்கக்கோரி கையொப்பம் சேகரிக்கப்பட வேண்டும் என கடந்த ஜனவரி 30ஆம் திகதி இலங்கை தமிழரசுக் கட்சி மத்திய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாக தமிழரசுக் கட்சியின் வாலிபர் அணி வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

இதனடிப்படையில், மட்டு. காந்தி சதுக்கத்தில் கையொப்பமிடும் நிகழ்வு தமிழரசுக் கட்சியின் வாலிபர் அணித் தலைவர் லோ.திவாகரன் தலைமையில் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகரசபை முதல்வர், பிரதி முதல்வர் உள்ளிட்ட உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதி தவிசாளர்கள், அதன் உறுப்பினர்கள், வாலிபர் அணி, மகளிர் அணி உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பலதரப்பட்டவர்களும் இனம், மதம், கட்சி வேறுபாடுகளின்றி கலந்துகொள்ளவுள்ளதாக வாலிபர் அணிச் செயலாளர் க. சஷீந்திரன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் கடந்த 1979ஆம் ஆண்டு தற்காலிக ஏற்பாட்டு சட்டமாக நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டு இன்று 42, ஆண்டுகளை கடந்தும் அந்த சட்டம் தொடர்கிறது. இந்தச் சட்டம் ஆரம்பத்தில் தமிழர்களுக்கு எதிராகவே கூடியவரை பயன்படுத்தப்பட்டு பல வதைகளுடன் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டதுடன் தற்போதும் ஏறக்குறைய 388பேர் இந்த சட்டம் ஊடாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் தற்போது நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களும் இந்தச் சட்டத்தின் ஊடாக பல துன்பியலை அனுபவித்து வருகின்றனர். தற்போது சர்வதேச சமூகம், ஐரோப்பிய ஒன்றியம், இலங்கையில் உள்ள பல மனித உரிமை அமைப்புகளையெல்லாம் இந்தக் கொடிய சட்டத்தை உடனே முற்றாக நீக்குமாறு இலங்கை அரசுக்கு வேண்டுகோளை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், காந்தி பூங்காவுக்கு 27ஆம் திகதி அனைவரும் வருகை தந்து கையொப்பம் இட்டு முழு ஆதரவை வழங்குமாறு வாலிபர் அணி வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தேசிய காங்கிரஸ் கட்சியின் 18ஆவது பேராளர் மாநாடு





(பாலமுனை நிருபர்)

எமது நாட்டில் இனங்களுக்கிடையிலான இனவாதத்தையும் மதவாதத்தையும் தோற்றுவிக்கும் சர்வதேச சக்திகளின் தலையீட்டிலிருந்து எமது நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டும் என்கின்ற நல்ல நோக்கிலேயே தேசிய காங்கிரஸ் கட்சி பயணித்துக் கொண்டிருக்கின்றது என்று தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா தெரிவித்தார்.

கிழக்குவாசலில் நேற்று நடந்த தேசிய காங்கிரஸ் கட்சியின் 18ஆவது பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட்டபோதும் தேசிய காங்கிரஸ் கட்சி அவரை ஆதரித்தது. அதில் வெற்றிபெற்றது. அந்த தேர்தலிலும் மஹிந்த ராஜபக்ஷவிடம் தேசிய காங்கிரஸ் கட்சி முன்வைத்த கோரிக்கையை எமது அரசியல் கட்சிகளின் தலைவர்கள் விமர்சித்தனர். ஏளனம் செய்தனர். நாம் அன்று மஹிந்த ராஜபக்ஷவிடம் முன்வைத்த கோரிக்கை என்னவென்றால், காரணமின்றி இணைக்கப்பட்ட வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டு எமது நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினையை தீர்த்துவைத்து இந்த நாட்டில் மூவின மக்களும் சுதந்திரமாகவும் இன ஐக்கியத்துடனும் வாழ வேண்டிய சூழ்நிலையினை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையாகும்.

எமது கட்சிசார்பாக நாங்கள் அப்போது முன்வைத்த கோரிக்கையினை மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் நிறைவேற்றித் தந்தார். அதற்கு நன்றிக்கடனாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ காட்டிய வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்தோம். எமது சமூகம் நன்றிகெட்டவர்கள். தொப்பி பிரட்டிகள் என்ற கருத்துக்கு மாற்றமாக எமது கட்சி நன்றிகடன் செலுத்தி முஸ்லிம் சமூகத்தின் மீதான தப்பபிப்பிராயத்தை நீக்கியுள்ளோம்.

இந்த நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மை சமூகங்கள் அதிலும் குறிப்பாக முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட மற்றும் எதிர்கொள்கின்ற எமது சமூகத்தின் மீதான சதிகாரர்களினால் வேண்டுமென்றே முத்திரை குத்தப்பட்ட பயங்கரவாத சவால்களை முறியடிப்பதற்காகவும் எமது சமூகத்துக்கு எதிரான சர்வதேச சக்திகளின் சதிவலைப் பின்னலில் இருந்து எமது சமூகத்தையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்கும் பாதுகாப்பான நாடொன்றை கட்டியெழுப்ப வேண்டும் என்கின்ற தூய நோக்கில் தேசிய காங்கிரஸ் கட்சி பயணித்துக் கொண்டிருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தின் போது எனக்கு கிடைத்த அதிகாரங்களை வைத்து இனவேறுபாடின்றி மூவின மக்களும் நன்மைபெறும் வகையில் சமமான சேவையினை வழங்கினேன். எமது கட்சி இனவாதக் கட்சியல்ல. பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிரான போராட்டத்தில் எமது கட்சியும் நாங்களும் பயணிப்போம். எமது கட்சியும் நாங்களும் இந்த நாட்டையும் மக்களையும் நேசிக்கின்ற ஒரு அணியாகும். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எமது அரசியல் பயணம் தூய்மையானது. சந்தர்ப்பவாத அரசியல் எம்மிடம் இல்லை.

மறைந்த தலைவர் அஷ்ரப்பினது அரசியல் முஸ்லிம்களுக்காக மாத்திரமல்ல, நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்குமானதாகும். நுஆ என்ற கட்சியை உருவாக்கிய காலத்திலும் அவ்வாறுதான் அவரது அரசியல் காணப்பட்டது.

முஸ்லிம் மக்களுக்கான தீர்வு என்பது முஸ்லிம்களால் மட்டும்பெறமுடியாது. எல்லோருக்குமான தீர்வு என்கின்ற போதுதான் நமக்கும் தீர்வுவரும். ஆகவே அவர் முஸ்லிம் என்று ஆரம்பித்த கட்சியினுடைய முஸ்லிம் என்ற பெயரைக்கூட அவர் மாற்றினார். என்பதை விடவும் அந்தபெயரை தற்காலிகமாக நிறுத்திவிட்டு தேசிய ஐக்கிய முன்னணி நுஆ என்ற கட்சியை ஆரம்பித்தார் என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும்.

ஆகவே, அந்த பாசறையில் இருந்த பலர்தான் இன்று தேசிய காங்கிரஸில் இருக்கின்றோம். எமது மக்களுக்கான விடிவை நோக்கி எமது அரசியல் பயணம் தொடர வேண்டும். தலைவர் அஷ்ரப் விட்ட இடத்திலிருந்து அரசியல் பயணம் தொடர வேண்டும் என்கின்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில்தான் தேசிய காங்கிரஸ் கட்சியின் உருவாக்கம்.

தலைவர் அஷ்ரப் மரணித்ததன் பிற்பாடு அந்த கட்சியை வைத்திருந்தவர்கள்கூட அவர்கள் எடுத்த எந்த தீர்மானம் மக்களுக்கு நன்மை அளித்திருக்கின்றது. அல்லது முஸ்லிம் சமூகத்துக்கு எதனை சாதித்துள்ளனர் என்று பார்த்தால் ஒன்றுமே நடைபெறவில்லை. ஆனால், 18 ஆண்டுகள் மாத்திரம் உருவாகி இருக்கின்ற தேசிய காங்கிரஸ் சமூகத்துக்கான நிறைய விடயங்களை செய்திருக்கின்றது. சாதித்திருக்கின்றது என்றார்.

# சிறுபான்மை மக்களும் அரசியல் சூழலும் செயலமர்வு





(மருதமுனை நிருபர்)

சிறுபான்மை மக்களும் அவர்களது தற்கால அரசியல் சூழலும் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயலமர்வும் கடந்த சனிக்கிழமை (19) கல்முனை கிறிஸ்டா இல்லத்தில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் பிரதி இணைப்பாளர் ஏ.மதன் தலைமையில் இடம்பெற்றது.

சிறுபான்மை மக்களின் அரசியல் பற்றிய அரசியல்சார் கருத்துகளை பகிர்ந்துகொள்ளும் இச்செயலமர்வு ஏற்கனவே திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்றதுடன், இரண்டாவது செயலமர்வானது அம்பாறையில் இடம்பெற்றது.

இச்செயலமர்வின் பிரதான வளவாளராக அரசியல் ஆய்வாளர் ஏ.யதிந்திரா கலந்துகொண்டு கருத்துகளை வழங்கினார். இதன்போது இலங்கையின் சமாதான முன்னெடுப்பு, சமாதானத்துக்கான மேற்குலக நாடுகளின் தலையீடுகள், இலங்கை மீதான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள், பேரவையின் கட்டமைப்பு, சர்வதேச நீதி பொறிமுறை என்றால் என்ன? அது எந்தளவுக்கு செல்வாக்குமிக்கது, நீதியை உறுதிப்படுத்துவதற்கான உலக ஏற்பாடு, 72 மற்றும் 78ஆம் ஆண்டு அரசியலமைப்பு யாப்பில் சிறுபான்மையினரின் நிலை, பொறுப்பு கூறல் தொடர்பான சர்வதேச அழுத்தமும் அதன் பலவீனங்களும் அதனூடான தீர்வு போன்ற பல தலைப்புகளில் தனது கருத்துகளை வழங்கினார்.

இச்செயலமர்வில் (ஏ.எச்.ஆர்.சி) நிறுவனத்தின் செயற்றிட்ட முகாமையாளர் என்.அஞ்சலி தேவி, திட்ட முகாமையாளர் எஸ்.சுதர்சினி, திட்ட இணைப்பாளர்கள் பி.ஜெகதீஸ், எஸ்.அனுஜா, கணக்காளர் ஆர்.பிரியாளினி, பிரதி கணக்காளர் சி.எஸ்.ஏன்ஜல் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சிவில் செயற்பாட்டாளர்கள், அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், இளைஞர், யுவதிகள், பெண்கள், அரச உத்தியோகத்தர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டார்கள்.

# திருமலை பன்குளம் வாய்க்காலில் விழுந்துகிடந்த யானை உயிரிழப்பு



(பதுர்தீன் சியானா)

திருகோணமலை பன்குளம் பகுதியில் வாய்க்காலில் விழுந்து கிடந்த யானை நேற்று முன்தினம் (20) மாலை உயிரிழந்துள்ளது.

கடந்த 07ஆம் திகதி முதல் பன்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள தனியார் காணியொன்றின் வாய்க்காலில் விழுந்து கிடந்த யானையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

யானை உயிரிழந்தமை தொடர்பில் நேற்று விசேட வைத்தியர் பரிசோதனைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆனாலும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் யானையைக் காப்பாற்றுவதற்கான சிகிச்சைகள் அளிக்கப்பட்டும் சிகிச்சை பயனளிக்கவில்லை எனவும் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# ரிஷாட், ஹக்கீம், அதாஉல்லா எம்.பிக்களால் அம்பாறை மக்களுக்கு எவ்வித நன்மைகளும் கிடைக்கவில்லை

## விரைவில் புதிய கட்சி உதயமாகிறது என்கிறார் நாபீர்

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டத்தில் அரசியல் அறிவு ரீதியாக பாரிய பின்னடைவு இருக்கிறது. அதனால் எமது மக்களுக்கு எவ்வாறான அரசியல் தலைமைத்துவங்களை உருவாக்கலாம் என்பது தொடர்பில் நாபீர் பௌண்டேஷன் ஊடாக ஒவ்வொரு ஊருக்கும் சென்று சமூக அமைப்புகளை நாடி கலந்துரையாடி தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம். அதனூடாக அம்பாறை மக்களுக்கு ரிஷாட், ஹக்கீம், அதாஉல்லா போன்றவர்களினால் எவ்வித நன்மைகளும் கிடைக்கவில்லை என்பதை அறிந்து நாபீர் பௌண்டேஷனை எதிர்வரும் தேர்தலின்போது அரசியல் கட்சியாக பரிணமிக்கச்செய்யும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருவதாக சம்மாந்துறை ஈ.சி.எம்.நிறுவன முகாமைத்துவ பணிப்பாளரும், நாபீர் பௌண்டேஷன் தவிசாளருமான பொறியியலாளர் கலாநிதி உதுமானக்கண்டு நாபிர் தெரிவித்தார்.





இன்று அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், அரசியல் செய்வது, தேர்தல் நடத்துவது எல்லாம் மக்களின் நன்மைக்கே. கடந்த காலங்களில் நாங்கள் மக்களின் தேவைகளை பூர்த்திசெய்யும் பல வேலைத்திட்டங்களை மக்களுக்காக செய்து வந்தோம். நாபீர் பௌண்டேஷனாக இயங்கிவந்த எங்களின் அமைப்பை எதிர்வரும் தேர்தல் காலங்களில் அரசியல் கட்சியாக மாற்றியமைத்து பொதுத்தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் களமிறங்க தயாராகி வருகிறோம். கூட்டிணைந்தா அல்லது தனித்தா என்பதை காலமே தீர்மானிக்கும்.

தேர்தல்களை மையமாகக் கொண்டு எமது அமைப்பின் முக்கியஸ்தர்கள் மக்களை நேரடியாக சந்தித்து எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை பற்றி தெளிவூட்டி ஆதரவு திரட்டி வருகிறார்கள். அதன் ஒரு பகுதியாக வறுமையில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களை எப்படி அந்த நிலையிலிருந்து மீட்டெடுக்க முடியுமென்று ஆராய்ந்து தொழில்வாய்ப்பில்லா நிலையிலிருந்து உடனடியாக மீட்க இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். எதிர்காலத்தில் நிறைவான தொழில்வாய்ப்புகளை மேற்கொள்ள நாங்கள் தயாராகி வருகிறோம். இதனூடாக தேசிய பொருளாதாரத்திலும் உயர்வை கொண்டுவர முடியும் என்று நம்புகிறோம்.

எந்த ஒரு பணியையும் இறைவனுக்கு பயந்து உளத்தூய்மையுடன் செய்தால் அதில் வெற்றியுள்ளது. அரசியல் என்றாலும் சரி, என்னுடைய தொழில் என்றாலும் சரி எனக்கிருக்கும் நல்லபெயரை கொண்டு பல்வேறு வேலைத்திட்டங்களை நான் எதிர்காலத்தில் முன்னெடுக்க தயாராக உள்ளேன். கல்முனை மாநகர சபை முதல்வராக நான் இருந்திருந்தால் பல்வேறு அபிவிருத்திகளை நான் செய்திருப்பேன். சம்மாந்துறை பிரதேச சபையின் ஆட்சியை எதிர்வரும் காலங்களில் கைப்பற்ற தேர்தல்பணிகளை முடுக்கி விட்டுள்ளேன் என்றார்.

# மகளிர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுக்கு சுயதொழில் உபகரணங்கள் வழங்கிவைப்பு!





(மாளிகைக்காடு நிருபர்)

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை உறுப்பினரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கல்முனை தொகுதி முக்கியஸ்தருமான ரிஸ்லி முஸ்தபாவின் நிதியின் மூலம் சம்மாந்துறை ஸ்டார் லைப் மகளிர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சுயதொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சம்மாந்துறை ஸ்டார் லைப் மகளிர் அபிவிருத்தி சங்க செயலாளர் ஐ.எல்.பரீதாவின் நெறிப்படுத்தலில் சங்கத்தலைவி எம்.எம்.ரபீக் பாயிஸாவின் தலைமையில் சம்மாந்துறையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை உறுப்பினரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கல்முனை தொகுதி முக்கியஸ்தருமான ரிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்துகொண்டு காலை உணவை தயாரித்து விற்பனை செய்யும் வாழ்வாதார பொருட்களை வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை ஸ்டார் லைப் மகளிர் அபிவிருத்தி சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# காரைதீவு பிரதேச அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டோருக்கு கொடுப்பனவுகள்



(மருதமுனை நிருபர்)

காரைதீவு பிரதேச செயலக எல்லைக்குள் 2021ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் காற்று மற்றும் மின்னல் தாக்க அனர்த்தத்தில் வீடு மற்றும் வீட்டு உபகரணப் பொருட்கள் பாதிப்படைந்த காரைதீவு-01, 06 ஆகிய பிரிவுகளினை சேர்ந்த 07 பயனாளிகளுக்கான இரண்டாம் கட்ட கொடுப்பனவுக்கான 103,500/- பெறுமதியான காசோலைகளும், 2022 ஜனவரி மாதம் ஏற்பட்ட கடும் காற்று மற்றும் மழை காரணமாக வீட்டுக் கூரை பாதிப்படைந்த காரைதீவு-01, 11 ஆகிய இரு பிரிவுகளினைச் சேர்ந்த இரண்டு பயனாளிகளுக்கான கொடுப்பனவாக 20,000ரூபா பெறுமதியான காசோலைகளும் வழங்கப்பட்டன.

அத்தோடு கடந்த 2020ஆம் ஆண்டு காட்டு யானைத்தாக்கம் காரணமாக சொத்துகள் பாதிப்படைந்த காரைதீவு -07 மற்றும் மாளிகைக்காடு மேற்கு ஆகிய பிரிவுகளினைச் சேர்ந்த 03 பயனாளிகளுக்கான நஷ்ட ஈட்டுக்கொடுப்பனவாக 85,000ரூபா பெறுமதியான காசோலைகளும் பிரதேச செயலாளர்சிவஞானம் ஜெகராஜனால் வழங்கப்பட்டது. இதில் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்களான ஐ.சாறூன், எம்.ஐ.ஹசீனா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நிந்தவூர் ஸைத் இப்னு ஸாபித் குர்ஆன் புதிய மத்ரஸாவை கையளிக்கும் நிகழ்வு





(மாளிகைக்காடு நிருபர்)

குவைத் நாட்டின் அந்-நஜாத் சர்வதேச தொண்டு நிறுவன நிதி அனுசரணையில் இலங்கை அந்நூர் சமூக அமைப்பினால் முழுமையாக கட்டிமுடிக்கப்பட்ட நிந்தவூர் ஸைத் இப்னு ஸாபித் குர்ஆன் மத்ரஸாவை மாணவர்களுக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (19) நடைபெற்றது.

அரச காரியாலயங்கள், பாடசாலைகள், பள்ளிவாசல்களுக்கு இலவச குடிநீர் வழங்குதல் மற்றும் பல சமூகநல வேலைத்திட்டங்களை அந்நூர் சமூக அமைப்பு மக்களுக்காக தொடர்ந்தும் பல ஆண்டுகளாக நாடளாவிய ரீதியில் செய்து வருகின்றது. அவர்களின் வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக அந்நூர் சமூக அமைப்பின் பிரதேச இணைப்பாளர் ஐ.எல்.றஸ்மியின் ஒழுங்கமைப்பில் இலங்கை அந்நூர் சமூக அமைப்பின் தலைவர் எஸ்.எம். அலியார் பிரதம அதிதியாக கலந்துகொண்டு குர்ஆன் பாடசாலை மாணவர்களின் நலன்கருதி இவ்வேலைத்திட்டத்தை பாடசாலை நிர்வாகிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். இந்நிகழ்வில் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.தாஹீர், ஏறாவூர் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எம்.ஐ.தஸ்லீம், இலங்கை அந்நூர் சமூக அமைப்பின் தேசிய இணைப்பாளர் ஏ.எம்.நளீம், அல்-மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்காவின் தவிசாளர் யூ.எல்.என்.ஹுதா, அந்நூர் சமூக அமைப்பின் செயற்பாட்டாளர்கள், உலமாக்கள் உட்பட மத்ரஸா ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# இந்திய செய்திகள்

# தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ரூ. 20 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்

## நாட்டுப்படகுடன் 8 பேர் கைது



தூத்துக்குடியில் நாட்டுப்படகு மூலம் இலங்கைக்கு கடத்த முயன்ற 20 கோடி ரூபா (இந்திய ரூபாபடி) மதிப்பிலான போதைப்பொருள் இந்திய க்யூ பிரிவு தனிப்படை பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு சம்பவத்துடன் தொடர்புடைய 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகேயுள்ள வேம்பர் கடற்கரை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு சந்தேகப்படும்படி நபர்கள் இருப்பதாக க்யூ பிரிவு பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து க்யூ பிரிவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் விஜயாஅனிதா தலைமையிலான தனிப்படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்திற்கிடமாக நாட்டுப்படகொன்று கிளம்புவதை பார்த்த பொலிஸார் விரைந்தபோது, நாட்டுப்படகு அதிவேகமாக கடலுக்குச் சென்றுள்ளது.

இதனையடுத்து விசைப்படகு மூலமாக அந்த படகை சுற்றிவளைத்த பொலிஸார் படகை பரிசோதித்தபோது 10 கிலோ கிரிஸ்டல் மெத்தாம்பேட்டமைன் என்ற போதைப்பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதுடன், இலங்கைக்கு கடத்தப்படவிருந்தமையும் தெரியவந்துள்ளது.

இதையடுத்து நாட்டுப்படகிலிருந்த கீழவைப்பார் பகுதியைச் சேர்ந்த இருதயவாஸ், கிங்கப்பன், சிலுவை, அஸ்வின், வினிஸ்டன், சுபாஷ், கபிலன், சிப்பிகுளத்தினை சேர்ந்த சைமன் ஆகிய 8 பேரை கைதுசெய்ததுடன், கடத்தலுக்கு பயன்படுத்திய நாட்டுப்படகையும் பறிமுதல் செய்தனர்.

மேலும் அவர்களிடமிருந்து 10 கிலோ கிரிஸ்டல் மெத்தாம்பேட்டமைன் என்ற போதைப்பொருளை பறிமுதல் செய்துள்ளனர். உலகளவில் இதன் சந்தை மதிப்பு 20 கோடி ரூபா என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## செல்பி வித் ஸ்டூடன்ஸ்



"குடியரசு நாள் விழா அணிவகுப்பில் இடம் மறுக்கப்பட்ட தமிழ்நாட்டின் ஊர்தி, உங்கள் நெஞ்சங்களில் இடம்பிடித்து, மாணவர்களையும் ஈர்த்துள்ளது. மெரினாவில் ஊர்திகளைக் காணவந்த மாணவச் செல்வங்களுடன் பெருமகிழ்வுடன் செல்ஃபி எடுத்துக்கொண்டேன். தமிழ்நாடு வெல்லும்'' - இவ்வாறு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# காலில் விழுந்த கட்சி நிர்வாகியின் காலைத் தொட்டு வணங்கிய மோடி







உத்தரப்பிரதேச தேர்தல் பிரசாரத்தின்போது தனது காலை தொட்டு வணங்கிய கட்சி நிர்வாகிக்கு, அவ்வாறு செய்யவேண்டாம் என அறிவுறுத்திய பிரதமர், அந்த நிர்வாகியின் காலையும் தொட்டு வணங்கினார்.

உன்னாவ் பகுதியில் நடந்த சட்டமன்றத் தேர்தல் பரப்புரையின்போது பிரசார மேடையில் பா.ஜ.கவின் மாவட்ட தலைவர் அவதேஷ் கட்டியார் பிரதமருக்கு இராமர் சிலையை பரிசளித்தார்.

அப்போது அவர் பிரதமரின் காலை தொட்டு வணங்கிய நிலையில், தன்னுடைய பாதங்களை தொடவேண்டாம் என பிரதமர் மோடி சைகை காட்டினர். இதனையடுத்து, யாரும் எதிர்பாரா வகையில் அவதேஷின் காலில் வீழ்ந்து பிரதமர் வணங்கினார். இக்காட்சியை பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் சாம்பித் பத்ரா சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தார்.

# அல்லு அர்ஜுனின் 'புஷ்பா'வுக்கு 'தாதா சாகேப் பால்கே' விருது




தெலுங்கில் அல்லு அர்ஜுன், ரஷ்மிகா மந்தனா நடித்து பல்வேறு இந்திய மொழிகளில் வெளியான 'புஷ்பா' படத்திற்கு கடந்த (2021) ஆண்டுக்கான சிறந்த படமாக தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான தாதா சாகேப் பால்கே சர்வதேச திரைப்பட விருதுகள் வழங்கும் விழா நேற்றுமுன்தினம் டில்லியில் நடைபெற்றது. இந்திய சினிமாவுக்கு சிறந்த பங்களிப்பு செய்த கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. வாழ்நாள் சாதனையாளர் விருது பழம்பெரும் நடிகை ஆஷா பாரேக்கிற்கு வழங்கப்பட்டது

83 படத்தில் நடித்த ரன்வீர் சிங் சிறந்த நடிகராகவும், மிமி படத்தில் நடித்த கீர்த்தி சனோன் சிறந்த நடிகையாகவும் விருது பெற்றனர். சித்தார்த் மல்ஹோத்ரா, கியாரா அத்வானி உள்ளிட்ட இளம் நட்சத்திரங்களுக்கு விமர்சகர்களின் விருது அளிக்கப்பட்டது.

ஷேர்ஷா சிறந்த படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சி தொடர்கள், வெப் சீரிஸ்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

# லாலு பிரசாத்திற்கு 5 ஆண்டுகள் சிறை



பீகார் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் மீது மாட்டுத் தீவன ஊழல் தொடர்பாக ஐந்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இதில் ஏற்கனவே முதல் நான்கு வழக்குகளில் அவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டதுடன், நான்கு வழக்குகளிலும் சேர்த்து மொத்தமாக 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இருப்பினும் இந்த நான்கு வழக்குகளின் தீர்ப்புகளுக்கும் எதிராகவும் மேன்முறையீடு செய்துள்ள லாலு பிரசாத் யாதவ், குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட அனைத்து வழக்குகளிலுமிருந்து ஜாமீன் பெற்றுள்ளார்.

இந்நிலையில், கடந்த வாரம் மாட்டுத் தீவன ஊழல் தொடர்பான ஐந்தாவது மற்றும் இறுதி வழக்கான டொராண்டா கருவூலத்திலிருந்து 139.35 கோடி சட்டவிரோதமாக எடுக்கப்பட்ட வழக்கிலும் குற்றவாளி என அவர் அறிவிக்கப்பட்டார்.

மேலும், லாலு பிரசாத் யாதவோடு சேர்த்து மொத்தம் 75 பேர் இந்த வழக்கில் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட நிலையில், 35 பேருக்கு தலா மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து வழக்கை விசாரித்த சிபிஐ நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் லாலு பிரசாத் உள்ளிட 40 பேருக்கு நேற்று தண்டனை அறிவிக்கப்பட்டது. அதில் லாலுவிற்கு 5 ஆண்டுகால சிறைத்தண்டனையும், 60 இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையை இந்தியா கண்டிக்காததாலேயே அத்துமீறல்கள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன



தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் அடாவடியாகக் கைது செய்வதும் அவர்களின் படகுகளைக் கைப்பற்றி இலங்கைக்கு கொண்டுசெல்வதும் வாடிக்கையான ஒன்றாக மாறிவிட்டது. கேட்டால் எல்லையைத் தாண்டி மீன் பிடித்ததாக குற்றஞ்சாட்டுகிறார்கள். இதனை கண்டுகொள்ளவேண்டிய இந்திய அரசு இலங்கையிடம் மென்மையான போக்கைக் கடைப்பிடிக்கிறது. அதனை வன்மையாகக் கண்டிப்பதில்லை. இதனால் இந்த அத்துமீறல்கள் தொடர்ந்து அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. - இவ்வாறு பா.ம.க. நிறுவுனர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாகை மீனவர்கள் 21 பேரை விடுதலைசெய்து இலங்கை பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும்போது, எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படை அவர்களை கைதுசெய்து வருவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பின்னர் தமிழக அரசு வலியுறுத்தலின்பேரிலோ அல்லது நீதிமன்ற உத்தரவினால் அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள்.

இந்நிலையில், நாகையைச் சேர்ந்த மீனவர்கள் 21 பேரை விடுதலைசெய்து இலங்கை பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவர்கள், எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி கடந்த ஜனவரி 31ஆம் திகதி இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விடுதலை செய்யப்பட்ட 21 மீனவர்களும் ஓரிரு நாளில் தமிழகம் திரும்பவுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 21 நாட்களுக்குப் பின்னர் மீனவர்கள் விடுதலையாகியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இவர்கள் தவிர சிலநாட்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்ட 6 மீனவர்கள் உட்பட மொத்தம் 29 மீனவர்கள் இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரையும் விரைவாக விடுதலைசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடந்த பல ஆண்டுகளில் தமிழக மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட படகுகள் இலங்கை துறைமுகங்களில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. அவற்றையும் மீட்பதற்கு மத்திய, மாநில அரசுகள் விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும்" என குறிப்பிட்டுள்ளார்.

# சகுந்தலையின் காதல் கதையில் சமந்தா





சமந்தா நடித்துவரும் 'சகுந்தலம்' படத்தின் முதல் பார்வை போஸ்டர் இணையதளங்களில் வைரலாகி வருகிறது. ருத்ரமாதேவி உள்ளிட்ட படங்களை இயக்கிய குணசேகர் இந்தப் படத்தை இயக்குகிறார்.

புராண கதையான சகுந்தலையின் கதையை அடிப்படையாகக்கொண்டு இந்தப் படம் உருவாகி வருகிறது. சகுந்தலை வேடத்தில் சமந்தா நடிக்கிறார். முதல் பார்வை போஸ்டரில் வனம் ஒன்றில் மான்கள் மற்றும் பறவைகள் சூழ வெள்ளை உடையில் சமந்தா அமர்ந்திருக்கிறார்.

புராணத்தில் இடம்பெற்ற சகுந்தலையின் காதல் கதையை அடிப்படையாகக்கொண்டு இந்தப் படம் உருவாகிறது. மணிஷர்மா இந்தப் படத்துக்கு இசையமைக்கிறார். நீலிமா குணா இந்தப் படத்தை தயாரிக்கிறார். இந்தப் படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளியாகிறது.

# 8 வயதில் 6.6 அடி உயரம்; வருடத்திற்கு 4 அங்குலம் வளரும் சிறுவன்



உத்தரப்பிரதேசம் மீரட்டை சேர்ந்த கரண் சிங் என்ற 8 வயதான சிறுவனின் உயரம் 6.6 அடி. அப்பகுதியிலுள்ள பாடசாலையில் மூன்றாம் வகுப்பு படித்துவரும் அவர், தன் நண்பர்களை விட இரண்டு மடங்கு உயரமாக இருக்கிறார். கரண் சிங் ஒவ்வொரு வருடத்திற்கும் 4 அங்குலம் வளர்வதாக அவருடைய பெற்றோர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கரண் சிங் பிறக்கும்போதே 2 அடி உயரம் இருந்தாராம். இரண்டரை வயதில் கரண் சிங்கின் உயரம் 4 அடி 5 அங்குலமாக உயர்ந்துள்ளது.

இதுதொடர்பாக குழந்தையின் தாய் தெரிவிக்கையில்,

''அவன் பிறக்கும்போதே மற்ற குழந்தைகளை விட அதிக உயரமாகத்தான் இருந்தான். நாளடைவில் அவரின் உயரம் மேலும் கிடுகிடுவென உயரத் தொடங்கியது. இதனால் குழந்தைகள் போடும் எந்த உடையும் அவனுக்கு பொருந்தவில்லை. இதனால் பெரியவர்கள் உடுத்தும் ஆடையை அவன் அணிந்து வருகிறான். இதோடு வளர்வது நின்றால் கூட பரவாயில்லை, மேலும் அளவு உயர்ந்தால் என்ன செய்வது என்று தெரியவில்லை" - என்றார்.

இந்நிலையில், மகனின் அளவுக்கு அதிகமான வளர்ச்சியினால் அவனை பாடசாலையில் சேர்க்க கஷ்டப்பட்டதாகவும், பிறப்பு சான்றிதழ் காட்டித்தான் அவனை பாடசாலையில் சேர்த்ததாகவும் கரண் சிங்கின் தந்தை தெரிவித்துள்ளார்.

# பாடலாசிரியர் லலிதானந்த் காலமானார்



பிரபல தென்னிந்திய பாடலாசிரியர் லலிதானந்த் உடல்நலக்குறைவால் தனது 47ஆவது வயதில் காலமானார்.

'இதற்கு தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா' திரைப்படத்தில் "என் வீட்டுல நான் இருந்தேனே, எதிர் வீட்டுல அவ இருந்தாளே.." என்ற பாடலின் மூலம் பிரபலமானவர் லலிதானந்த். அதேநேரம் இவர், அதே இடம் திரைப்படத்தில் அனைத்து பாடல்களையும் எழுதி தமிழ் சினிமா உலகில் பாடலாசிரியராக அறிமுகமானவர்.

மேலும் இவர் கோகுல் இயக்கத்தில் 'ரௌத்திரம்', லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 'மாநகரம்', கார்த்தி நடிப்பில் 'காஸ்மோரா', விஜய்சேதுபதி நடித்த 'ஜூங்கா', சேரனின் இயக்கத்தில் 'திருமணம்', 'அன்பிற்கினியாள்' போன்ற படங்களுக்கு பாடல்கள் எழுதியுள்ளார். மேலும் இவரது பாடல் வரிகளில் சிம்பு நடிப்பில் 'கொரோனா குமார்' உட்பட இன்னும் சில படங்கள் வெளியீட்டுக்கு தயாராக இருக்கின்றன. 'லெமூரியாவில் இருந்த காதலி வீடு', 'ஒரு எலுமிச்சையின் வரலாறு' என்ற இரு கவிதை தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் லலிதானந்த் உடல்நலக்குறைவால் நேற்றுமுன்தினம் மதியம் 3.35 மணியளவில் காலமானார். அவரது மறைவுக்கு திரையுலகினர் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## ரஷ்ய இராணுவ ஆதரவுடன் உக்ரைனில் கிளர்ச்சிப்படை பீரங்கிக்குண்டு தாக்குதல்

# உக்ரைன் - ரஷ்ய எல்லையில் உச்சகட்ட போர்ப் பதற்றம்



## புட்டினை சந்தித்து பேச பைடன் ஒப்புதல்

ரஷ்ய இராணுவத்தின் ஆதரவுடன் கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சிப்படை பீரங்கி மூலம் குண்டு மழை பொழிந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால், உச்சகட்ட போர்ப் பதற்றம் நிலவி வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்காமலிருந்தால் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினைச் சந்தித்துப் பேசுவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளார்.

வொஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய ஜனாதிபதி மாளிகைச் செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி,

“உக்ரைன் மீது படையெடுக்குமளவுக்கு எல்லைக்கு அருகிலேயே ரஷ்யப் படைகள் நிலைகொண்டுள்ளன. ரஷ்யா தனது படைகளை உக்ரைனை நோக்கி அனுப்பாமலிருந்தால், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அந்தோனி பிளிங்கன், ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜீ லாவ்ரோவ் ஆகியோரின் சந்திப்பு எதிர்வரும் வியாழனன்று ஐரோப்பாவில் நடைபெறும்.

உக்ரைன், ரஷ்யா இடையிலான மோதலை தீர்க்க பேச்சு நடத்த அமெரிக்கா தயாராகவுள்ளது’’ என ஜென் சாகி மேலும் தெரிவித்துள்ளார்.







**உக்ரைன் ஜனாதிபதியை சந்தித்த அமெரிக்க துணை ஜனாதிபதி**

இதேவேளை, உக்ரைன் எல்லையில் ரஷ்யப் படைகள் மாபெரும் போர் பயிற்சியில் ஈடுபட்டுவரும் நிலையில், உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஷெலோன்ஸ்கியை அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் ஜேர்மனியின் முனிச் நகரில் சந்தித்துப் பேசியுள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா எந்தநேரமும் படையெடுப்பு நடத்த வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்படும் நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜேர்மனிக்கு சென்றுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இந்த இக்கட்டான சமயத்தில் உக்ரைன் மக்களுடன் இருக்க ஜனாதிபதிக்கு ஜோ பைடன் நிர்வாகம் தனிப்பட்டமுறையில் அறிவுறுத்தியதாக அமெரிக்காவின் சி.என்.என். நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே, உக்ரைன் மீது போர் தொடுத்தால் ரஷ்யா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகள் விதிக்கும் என அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் எச்சரித்துள்ளார்.

**எல்லையில் உச்சகட்ட போர்ப் பதற்றம்**

இதேவேளை, ரஷ்ய இராணுவத்தின் ஆதரவுடன் கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சிப்படை பீரங்கி மூலம் குண்டு மழை பொழிந்துள்ளது. இதனால், உச்சகட்ட போர்ப் பதற்றம் நிலவி வருகிறது.

நேட்டோ அமைப்பில் அண்டை நாடான உக்ரைன் சேர்வதை தடுக்க, அந்நாட்டை கைப்பற்ற ரஷ்யா முடிவுசெய்துள்ளது. இதற்காக உக்ரைன் எல்லையை சுற்றில் 1.90 இலட்சம் வீரர்களை குவித்துள்ளது. உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் களமிறங்கியுள்ளதால், 3ஆம் உலகப் போர் ஏற்படும் அபாயம் நிலவி வருகிறது.

இதற்கிடையே சர்வதேச நாடுகளின் அழுத்தம் இருப்பதால், ரஷ்யா மறைமுக போரை தொடங்கியுள்ளது. கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சிப் படைகள் மூலம் அங்கு தாக்குதலை அரங்கேற்றியுள்ளது. கிழக்கு உக்ரைனில் கடந்த 2014ஆம் ஆண்டு முதல் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சிப் படைகள் போரிட்டு வருகின்றன. இதில் சுமார் 14,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 2015இல் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. லுஹான்ஸ்க் மற்றும் டொனெட்ஸ்க் பகுதிகள் கிளர்ச்சிப் படை வசமுள்ளன. இதுவரை அங்கு பெரியளவில் தாக்குதல்கள் நடக்காத நிலையில், ரஷ்யா படைகளை குவித்துள்ள நிலையில், கிளர்ச்சிப் படைகள் உள்நாட்டுப் போரை தொடங்கியுள்ளன.



இங்கு கடந்த சில நாட்களாக குண்டு சத்தங்கள் கேட்கின்றன. மேலும், கிளர்ச்சிப் படை வசமுள்ள பகுதிகளில் வசிக்கும் 7 இலட்சம் மக்களுக்கு ரஷ்ய அகதிகள் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் பத்திரமாக ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து கிளர்ச்சியாளர்கள் தங்கள் படையை மாகாண எல்லைக்கு நகர்த்தியுள்ளனர். நேற்றுமுன்தினம் லுஹாஸ்க், டொனெட்ஸ்க் பகுதிகளிலிருந்து பீரங்கி குண்டு சத்தங்கள் அடுத்தடுத்து கேட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சுமார் 1,400 தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், உக்ரைன் இராணுவம் வான்வழியாக கிளர்ச்சிப் படை மீது தாக்குதல் நடத்த முயன்றதாகவும் அது முறியடிக்கப்பட்டதாகவும் கிளர்ச்சிப் படை தெரிவித்துள்ளது. ஆனால், இதை உக்ரைன் அரசு மறுத்துள்ளது. இதனால் உக்ரைனில் எந்த நேரத்திலும் போர் மூளும் என்பதால் ஜேர்மனி, ஆஸ்திரியா நாடுகள் தங்கள் நாட்டு மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற உத்தரவிட்டுள்ளது. இதற்கிடையே, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சோதனை செய்த ரஷ்யா, சனிக்கிழமை பிரம்மாண்டமான அணு ஆயுதப் பயிற்சியை தொடங்கியது. இப்பயிற்சி நேற்றுமுன்தினமும் தொடர்ந்தது. இதற்கிடையே, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவெல் மெக்ரோன் கடைசி கட்ட முயற்சியாக ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடன் தொலைபேசியில் நேற்றுமுன்தினம் உரையாற்றினார். இதில் கிழக்கு உக்ரைனில் தாக்குதலை நிறுத்த ரஷ்யா நடவடிக்கை எடுப்பதாக புட்டின் உறுதியளித்துள்ளதாக பிரான்ஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உலகம் முழுவதும் எதிரொலிக்கும்**

பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவிக்கையில்,

‘‘உக்ரைன் மீது ரஷ்யா போரை தொடங்கும் பட்சத்தில் இதுவரை இல்லாத வகையில் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை அறிவிக்கவுள்ளோம். ரஷ்ய நிறுவனங்கள் பவுண்டுகள் மற்றும் அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்தி வர்த்தகம் செய்யத் தடை விதிக்கப்படும்.

இது ரஷ்யப் பொருளாதாரத்தைக் கடுமையாகப் பாதிக்கும். ரஷ்யா ஏற்கனவே தங்கள் திட்டத்தைச் செயற்படுத்த தொடங்கிவிட்டனர். கிழக்குப் புறத்திலிருந்து டான்பாஸ் வழியாக உக்ரைனுக்குள் நுழைவது மட்டும் அவர்கள் திட்டமில்லை. தலைநகர் கீவ் மீதும் அவர்கள் தாக்குதல் நடத்துவார்கள்.

1945ஆம் ஆண்டிற்குப் பின்னர், ஐரோப்பா மீது ஒரு மாபெரும் போரைத் தொடங்க ரஷ்யா திட்டமிட்டிருக்கலாம். உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தால், அது அத்துடன் நின்றுவிடாது. உலகம் முழுவதும் கண்டிப்பாக எதிரொலிக்கும்” - என்றார்.

**இந்தியர்கள் உடனடியாக வெளியேற அறிவுறுத்தல்**

உக்ரைனில் போர்ப் பதற்றம் தீவிரமடைந்துள்ள நிலையில், அங்குள்ள இந்தியர்கள் தற்காலிகமாக உடனடியாக வெளியேறவேண்டுமென இந்திய மத்திய வெளியுறவு அமைச்சு மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியுள்ளது. இந்தியர்களை அழைத்து வர 22, 24, 26ஆம் திகதிகளில் உக்ரைனுக்கு சிறப்பு விமானங்கள் இயக்கப்படவுள்ளன. அங்கு சுமார் 20 ஆயிரம் மாணவர்கள் உள்ளிட்ட இந்தியர்கள் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# உலக செய்திகள்

## மெக்சிக்கோவில் காணாமல்போனவர்களை அணை படுக்கையில் தேடும் உறவினர்கள்



மெக்சிக்கோவின் சாண்டியாகோ நகரில் அணை வறண்டுதல், காணாமல்போன தங்கள் உறவினர்கள் யாரேனும் அங்கு புதைக்கப்பட்டுள்ளனரா என மக்கள் தேடி வருகின்றனர்.

மெக்சிக்கோவில் இதுவரை 95,000 பேர் கடத்தப்பட்டு மாயமாகி யுள்ளதாக ஐக்கிய நாடுகள் தெரிவிக்கின்றன. மெக்சிகோ - அமெரிக்கா எல்லை அருகே அமைந்துள்ள சாண்டியாகோ நகர் கடத்தல் மற்றும் குற்றச்சம்பவங்களுக்கு பெயர்பெற்றது.

அங்கு கடத்தி கொலை செய்யப்படுபவர்களின் உடல்கள் அருகிலுள்ள அணையில் வீசப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் உறவினர்கள், தற்போது அணை வறண்டதால், அணை படுக்கையை மண்வெட்டியால் தோண்டி ஏதேனும் தென்படுகிறதா எனத் தேடி வருகின்றனர்.

## நேபாளத்தில் வெடித்தது வன்முறை: போராட்டத்தில் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு











நேபாளத்தின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி விரட்டி அடித்தனர். இதனால் அங்கு வன்முறை வெடித்துள்ளது.

நேபாளத்தில் 300 கிலோமீற்றர் தூரத்துக்கு மின்தடம் அமைக்கவும், வீதிகளை மேம்படுத்தவும் அமெரிக்க அரசு 3,700 கோடி ரூபா நிதியுதவி அளித்துள்ளது. இதன் மூலம் 80 சதவீத மக்கள் பயனடைவர் என அரசு தெரிவித்துள்ளது.

இருந்தபோதும், இத்திட்டங்களை வழிநடத்தும் வாரியத்தில் நேபாள அரசுக்கு எவ்வித உரிமையும் இல்லை என எதிர்கட்சியினர் குற்றஞ்சாட்டியதால் போராட்டங்கள் வெடித்தன. பொலிஸார் தண்ணீரை பீய்ச்சி அடித்து போராட்டக்காரர்களை அப்புறப்படுத்தினர்.

## எத்தியோப்பியாவுக்கு ஒளிபாய்ச்சும் நைல் நதி




ஆபிரிக்க கண்டத்தின் மிகப்பெரிய நீர்மின் உற்பத்தி நிலையமாக நைல் நதியின் குறுக்கே எத்தியோப்பியாவில் கட்டப்பட்டுள்ள மாபெரும் அணையில் மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

எத்தியோப்பியாவில் பாயும் இந்த நதியில் பிரம்மாண்டமாக உயர்ந்து நிற்கிறது கிரேண்ட் எத்தியோபியன் ரிலையன்ஸ் அணை. 1.8 கிலோ மீற்றர் அகலமும், 145 மீற்றர் உயரத்திலும் பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ள அணையில் மின்சார உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டு பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் மின் உற்பத்திக்கான பணிகள் தொடங்கப்பட்டன.

தற்போது 83.9 விகிதம் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், பிரதமர் அபே அகமது காணொளி வழியாக மின்சார உற்பத்தியை தொடங்கி வைத்தார். அடுத்த 5 ஆண்டுகளில் பணிகள் முழுமையாக நிறைவடைந்தால் அந்நாட்டின் மின்சார தேவையை விட இருமடங்கு கூடுதலாக 6,000 மெகாவோட் மின்சாரம் உற்பத்திசெய்யப்படும் திறன் கொண்டுள்ளது. முதற்கட்டமாக 750 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இருள் சூழ்ந்த எத்தியோப்பியாவிற்கு இந்த மின் உற்பத்தி ஒளி பாய்ச்சும் என்பதில் சந்தேகமில்லை.

ஏனெனில், இப்போதும் எத்தியோப்பியாவில் 60 வீத மக்கள் மின்சாரம் இல்லாமல் இருளிலேயே உள்ளனர். உபரி மின்சாரத்தை அண்டை நாடுகளுக்கும் வழங்கும் திறன் இருப்பதால் எத்தியோப்பியாவிற்கு மட்டுமல்ல, ஆபிரிக்க கண்டத்திற்கும், நைல் நதி பாயும் நாடுகளுக்கும் இது நற்செய்தி என்று பிரதமர் அபே அகமது தெரிவித்துள்ளார். ஆனால், வேளாண் மற்றும் குடிநீர்த் தேவைகளுக்கு 97 வீத நைல் நதியை சார்ந்துள்ள எகிப்து, இந்த ஆணையால் தங்கள் நாட்டிற்கான நீரின் பங்கு பெருமளவு குறையக்கூடுமோ என கவலை தெரிவித்துள்ளது.

அதேபோல் நைலை ஆதாரமாகக்கொண்ட சூடானும், ஆணையால் ஏற்படக்கூடிய பாதுகாப்பு குறித்து அச்சமடைந்துள்ளது. வறுமையில் நுழைந்த எத்தியோப்பியாவின் பொருளாதார எலும்பை நிமித்தம் ஆதாரமாக இது இருக்கும் என்பதால் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்கிறது எத்தியோப்பியா. இத்தகைய மாபெரும் திட்டம் முழுக்க முழுக்க மக்கள் நிதியிலிருந்து நிறைவேற்றப்படுகிறது என்பது கூடுதல் வியப்பு.





# நிறைவடைந்தது பீஜிங் குளிர்கால ஒலிம்பிக்

## 9ஆவது முறையாக முதலிட அரியணையில் ஏறிய நோர்வே




கொரோனா வைரஸின் கோரத்தாண்டவத்துக்கு மத்தியில், பல்வேறு சவால்களை எதிர்கொண்டு 24ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நேற்று முன்தினம் சீனாவின் தலைநகர் பீஜிங்கில் கண்கவர் கலை நிகழ்வுகளுடன் நிறைவுக்கு வந்தது.

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் கடந்த 4ஆம் திகதி ஆரம்பமானது. 15 வகையான விளையாட்டுப் போட்டிகளில் சீனா, அவுஸ்திரேலியா, பிரேஸில், அமெரிக்கா, நோர்வே, இங்கிலாந்து, ஜேர்மனி, ஜப்பான் உள்ளிட்ட 91 நாடுகளைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்கேற்றனர்.



பதக்கப்பட்டியலில் 16 தங்கம், 08 வெள்ளி, 13 வெண்கலம் என மொத்தமாக 37 பதக்கத்துடன் நோர்வே முதலிடத்தை பிடித்தது. நோர்வே முதலிட அரியணையில் அமர்வது இது ஒன்பதாவது முறையாகும். ஜேர்மனி 12 தங்கம், 10 வெள்ளி, 05 வெண்கலம் என மொத்தமாக 27 பதக்கத்துடன் இரண்டாவது இடத்தை பிடித்தது.




போட்டியை நடத்திய சீனா மூன்றாவது இடத்தையும் (09 தங்கம், 04 வெள்ளி, 02 வெண்கலம் உட்பட 15 பதக்கம்), அமெரிக்கா (08 தங்கம், 10 வெள்ளி, 07 வெண்கலம் உட்பட 25 பதக்கம்) நான்காவது இடத்தையும் சுவீடன் (08 தங்கம், 05 வெள்ளி, 05 வெண்கலம் உட்பட 18 பதக்கம்) ஐந்தாவது இடத்தையும் பெற்றன.

பனிச்சறுக்கில் அந்தரத்தில் பல்டி அடித்து சாகசம் பல நிகழ்த்திய 18 வயதான சீன வீராங்கனை எய்லீன் கு இரு



தங்கம், ஒரு வெள்ளி வென்று நட்சத்திர வீராங்கனையாக வலம் வந்தார். ரஷ்ய இளம் ஸ்கேட்டிங் வீராங்கனை கமிலா வலியேவா மீதான ஊக்கமருந்து புகார், சீனாவின் மனித உரிமை மீறல்களை கண்டித்து சில நாடுகளின் தூதரக ரீதியான புறக்கணிப்பு போன்ற சர்ச்சைகளுக்கு மத்தியில் ஒரு வழியாக சீனா போட்டியை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறது.



பீஜிங் தேசிய மைதானத்தில் பிரமாண்டமான கலை நிகழ்ச்சிகள், வீர, வீராங்கனைகளின் அணிவகுப்புடன் இந்தப் போட்டி நிறைவடைந்தது. இறுதியில் ஒலிம்பிக் தீபம் அணைக்கப்பட்டு இதற்கான கொடி, அடுத்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியை (2026ஆம் ஆண்டு) நடத்தும் இத்தாலியிடம் ஒப்படைக்கப்பட்டது.

2026 குளிர்கால ஒலிம்பிக் போட்டி இத்தாலியின் மிலான், கார்ட்டினா நகரங்களில் நடைபெறவுள்ளன. கோடை கால ஒலிம்பிக் மற்றும் குளிர்கால ஒலிம்பிக் ஆகிய இரு ஒலிம்பிக்களையும் நடத்திய முதல் நாடு என்கிற பெருமையையும் சீனா பெற்றது.



### நினைவில் கொள்ளவேண்டிய பிற தருணங்கள்

ஏறக்குறைய சரியான ப்ரீ ஸ்கேட் மற்றும் சாதனை படைக்கும் குறுகிய திட்டத்துடன், 22 வயதான ஃபிகர் ஸ்கேட்டர் நாதன் சென் 2010 முதல் தனது விளையாட்டில் முதல் அமெரிக்க தங்கப் பதக்கம் வென்றார்.

நோர்வே 05 மில்லியன் மக்கள்தொகை கொண்ட நாடு. குளிர்கால ஒலிம்பிக்கின் வல்லரசாக திகழ்கிறது.

2018 இல் பியோங்சாங்கிற்குப் பிறகு, ஆறு மாதங்களுக்கு முன்பு தாமதமான டோக்கியோ கோடைகால விளையாட்டுகளுக்குப் பிறகு, ஆசியாவில் நடந்த இந்த மூன்றாவது நேரான விளையாட்டுகளும் இரண்டாவது தொற்றுநோய் விளையாட்டுகளாகும். 16,000 விளையாட்டு வீரர்கள் மற்றும் பிற சர்வதேச பார்வையாளர்கள் கலந்துகொண்டனர்.

நிறைவு விழாவில் ஒலிம்பிக் கொடி 2026 ஒலிம்பிக் குளிர்கால விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் நகரங்களான மிலன், கார்டினா டி ஆம்பெஸ்ஸோ நகரங்களின் மேயர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பீஜிங் மேயர் சென் ஜினிங் ஒலிம்பிக் கொடியை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் தோமஸ் பாக்கிடம் வழங்கினார். பின்னர் அவர் அதை 2026இல் நடத்தும் நகரங்களின் மேயர்களிடம் ஒப்படைத்தார்.

# மே.இ. தீவுகளை வெள்ளையடிப்பு செய்த இந்தியா!

## 6 ஆண்டுகளின் பின் தரவரிசையில் முதலிடத்தில்




சுற்றுலா மேற்கிந்திய தீவுகள் அணியுடனான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரையும் இந்திய அணி 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றி மேற்கிந்திய தீவுகள் அணியை ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடர்களில் வெள்ளையடிப்பு செய்தது.

ஒருநாள் தொடரையும் மேற்கிந்திய தீவுகள் அணி 0-3 என்ற அடிப்படையில் இழந்த நிலையில் இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் முதல் இரண்டு போட்டிகளில் தோல்வி கண்டநிலையில், மூன்றாவதும் இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்ய, முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, சூர்யகுமார் யாதவ் மற்றும் வெங்கடேஷ் ஐயர் ஆகியோரின் அதிரடி மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 05 விக்கெட்களை இழந்து 184 ஓட்டங்களை குவித்தது.

185 என்ற கடின வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி ஆரம்பத்தில் அதிரடியை காண்பித்தாலும், இடையிடையில் விக்கெட்களை இழந்ததன் காரணமாக 20 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்களை இழந்து 167 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 17 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

போட்டியின் ஆட்டநாயகனாக சூர்யகுமார் யாதவ் தெரிவானதுடன், தொடர் ஆட்டநாயகனாகவும் அவரே தெரிவானார். இந்திய அணி அடுத்ததாக இலங்கை அணியுடன் 03 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், 06 ஆண்டுகளுக்கு பிறகு ஐ.சி.சி இருபதுக்கு 20 அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தியா முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது. இதன்படி 269 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணியை பின்தள்ளி இந்தியா முதலிடத்தை பிடித்தது. ஏற்கனவே, 2016 பெப்ரவரி 12 - மே 03 வரை டோனி தலைமையில் இந்திய அணி முதலிடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# இந்தியாவுடன் மோதும் இலங்கை T20 குழாம் அறிவிப்பு

## இறுதி நேரத்தில் கைவிடப்பட்ட பானுக



இந்திய அணியுடனான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் பங்கேற்கும் இலங்கை அணியின் குழாம் நேற்று வெளியானது. தசுன் சானக்க தலைமையிலான 18 பேர் கொண்ட இந்த குழாமில் அதிரடி துடுப்பாட்ட வீரரான பானுக ராஜபக்ஷ இடம்பெறவில்லை. கடந்த வாரம் 02 கிலோ மீற்றர் உடற்தகுதி பரிசோதனையில் பானுக சித்தியடைந்தபோதிலும், அதற்குத் தேவையான ஸ்கின்ஃபோல்ட் அளவை அவர் இன்னும் அடையவில்லை என்பதால் இறுதி நேரத்தில் குழாமில் இருந்து நீக்கப்பட்டார்.

ஆஸி. சுற்றுப்பயணத்தின்போது உபாதைக்குள்ளான அவிஷ்க பெர்னாண்டோ, நுவான் துஸார மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் இத்தொடருக்கு முன்னதாக குணமடையும் பட்சத்தில் இவர்களும் அணியுடன் இணைவார்கள். இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான 03 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கை இருபதுக்கு 20 குழாம்**

தசுன் சானக்க, பெத்தும் நிஸங்க, குசல் மெண்டிஸ், சரித் அசலங்க, தினேஷ் சந்திமால், தனுஷ்க குணதிலக்க, கமில் மிஸார, ஜனித் லியனகே, வனிந்து ஹசரங்க, சாமிக்க கருணாரத்ன, துஷ்மந்த சமீர, லஹிரு குமார, பினுர பெர்னாண்டோ, ஷிரான் பெர்னாண்டோ, மகேஷ் தீக்ஷன, ஜெப்ரி வெண்டர்ஷே, பிரவீன் ஜெயவிக்ரம, அஷியன் டேனியல்

# ஜொலி கிங்ஸை வீழ்த்தி சம்பியனானது ஹோலி ஹீரோஸ்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது ஹோலி ஹீரோஸ் விளையாட்டுக்கழகத்தினருக்கும் காரைதீவு ஜொலி கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையிலான சிநேகபூர்வ கடினபந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி காரைதீவு கனகரத்தினம் விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.



நாணயசுழற்சியில் வெற்றிபெற்ற காரைதீவு ஜொலி கிங்ஸ் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 118 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு 119 எனும் வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது ஹோலி ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் 16 ஓவர்கள் நிறைவில் 02 விக்கெட்களை மட்டும் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. சாய்ந்தமருது ஹோலி ஹீரோஸ் விளையாட்டுக்கழக வீரர் எம்.எச்.எம். முஸ்பீக் ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்டார்.



போட்டியின் பரிசளிப்பு நிகழ்வில் நாபீர் பௌண்டேஷன் மற்றும் ஈ.சி.எம். நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் பொறியியலாளர் கலாநிதி உதுமான் கண்டு நாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் சாய்ந்தமருது ஹோலி ஹீரோஸ் விளையாட்டுக் கழக நிர்வாகிகள், விளையாட்டு உத்தியோகத்தர் ஏ. றிசாத், சாய்ந்தமருது கிரிக்கெட் சங்க கிரிக்கெட் அபிவிருத்திக்குழு தவிசாளர் ஏ.எச்.எம். முர்ஷித், எம்.எம். ரஜீப், எம்.வை.எம். றக்கீப், கிழக்கின் கேடயம் அமைப்பின் பொதுச் செயலாளர் யு.எல்.என் ஹுதா உமர், முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஜி. அன்வர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# வீர, வீராங்கனைகளுக்கான தேர்வு சாய்ந்தமருதில் ஆரம்பம்

(எஸ். அஷ்ரப்கான்)

விளையாட்டுத் திறன்களை இனங்காணல் நிகழ்ச்சித்திட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவில் சாய்ந்தமருது பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.எல். சபுர்டீனின் வழிநடத்தலில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

விளையாட்டுத் திறன்களைக் கொண்ட விளையாட்டு வீர, வீராங்கனைகள் கிராமிய மட்டத்தில் தோற்றம் பெறுவார்களாயினும், அவர்களின் திறன்களை இனங்காண்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் இந்த நிகழ்ச்சித்திட்டம் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.





மூன்று கட்டங்களாக இத் தெரிவு நடைபெறவுள்ளது. முதலாவது கட்டம் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டம். இரண்டாவது கட்டம் பிரதேச செயலகப் பிரிவு மட்டம். மூன்றாவது கட்டம் மாவட்ட மட்டமாகும்.

மேற்படி ஒவ்வொரு கட்டத்தின் கீழ் விளையாட்டு வீர, வீராங்கனைகள் இனங்காணப்படவுள்ளனர்.

இதனடிப்படையில் சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவுகளுக்கான வீர, வீராங்கனைகளை தெரிவு செய்யும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது பௌஸி ஞாபகார்த்த பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் 1-7 மற்றும் 12, 13ஆம் கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 16 - 24 வயதுக்கு உட்பட்ட விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள இளைஞர்கள் மிக ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.எல். சபுர்டீன், அம்பாறை கச்சேரி கிரிக்கெட் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எம்.பி.எம். றஜாய் மற்றும் அம்பாறை கச்சேரி விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.எம். றிஷாத் உட்பட விளையாட்டுத்துறை சார்ந்தோர் கலந்து கொண்டு தெரிவுகளை மேற்கொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7